*கர்த்தருக்கு ஸ்தோத்திரம்*

*பாடம்*-1

# *தாவீதும் கோலியாத்தும்*

(1 *சாமுவேல்* 17 : 1 - 54)

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

*"என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார். என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள் ; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்"*

**(*சங்கீதம்* 18: 17, 18).**

**II** ***பொருத்துக :*** (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. | *கோலியாத்* | – *பெலிஸ்தன்* | (1*சாமு*. 17 : 4) |
| 2. | *கோலியாத்* | – *காத் ஊரான்* | (1*சாமு*. 17 : 4) |
| 3. | *ஈசாய்* | – *வயது சென்றவன்* | (1*சாமு*. 17 : 12) |
| 4. | *இஸ்ரவேலர்* | – *ஜீவனுள்ள தேவனுடைய சேனைகள்* | (1*சாமு*. 17 : 26) |
| 5. | *பெலிஸ்தன்* | – *விருத்தசேதனமில்லாதவன்* | (1*சாமு*. 17 : 26) |
| 6. | *தாவீது* | – *ஐந்து கூழாங்கற்கள்* | (1*சாமு*. 17 : 40) |

**III *கோடிட்ட இடங்களை நிரப்புக:*** (1 Mark)

1. *பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறதற்கு சோக்கோவிலே கூடி -------------------- பாளயமிறங்கினார்கள்.*
2. *இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறதற்கு ----------------- பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்.*
3. *பெலிஸ்தியனாகிய கோலியாத் -------------------, ------------------- நாற்பது நாள் வந்து நிற்பான்.*
4. *தாவீதின் மூத்த சகோதரன் பெயர் --------------------*
5. *தாவீது தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது ஒரு விசை ------------------ ஒரு விசை ------------------ வந்தது.*
6. *கர்த்தர் --------------------- ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல.*
7. -------------------- *கர்த்தருடையது.*

***விடைகள்***

| | |
|---|---|
| 1. *எபேஸ்தம்மீமிலே* | (1 *சாமு*. 17 : 1) |
| 2. *ஏலா* | (1 *சாமு*. 17 : 2) |
| 3. *காலையிலும், மாலையிலும்* | (1 *சாமு*. 17 : 16) |
| 4. *எலியாப்* | (1 *சாமு*. 17 : 28) |
| 5. *சிங்கமும், கரடியும்* | (1 *சாமு*. 17 : 34) |
| 6. *பட்டயத்தினாலும்* | (1 *சாமு*. 17 : 47) |
| 7. *யுத்தம்* | (1 *சாமு*. 17 : 47) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:* (1 Mark)

1. ***இஸ்ரவேலின் சேனைகளை நிந்தித்த பெலிஸ்திய வீரனின் பெயர் என்ன?***
(a) *ஆகீஸ்* (b) *யாபீன்* (c) *கோலியாத்* (d) *ரப்சாக்*

2. ***கோலியாத்தின் உயரம் என்ன?***
(a) *ஐந்து முழம் ஒரு ஜாண்* (b) *ஆறு முழம் ஒரு ஜாண்*
(c) *ஏழு முழம் ஒரு ஜாண்* (d) *எட்டு முழம் ஒரு ஜாண்*

3. ***ஈசாய் தாவீதை எதற்காகப் பாளயத்திலிருந்த தன் சகோதரரிடத்தில் அனுப்பினான்?***
(a) *சுக செய்தியை விசாரிக்க* (b) *யுத்தத்தைப் பார்க்க*
(c) *யுத்தம் பண்ண* (d) *யுத்தத்தில் ஆர்ப்பரிக்க*

4. ***தாவீது ஒரு கல்லை எடுத்து கவணிலே வைத்து கோலியாத்தை எந்த இடத்தில் பட எறிந்தான்?***
(a) *முகத்தில்* (b) *நெற்றியில்* (c) *தலையில்* (d) *கண்ணில்*

5. ***தாவீது கோலியாத்தின் தலையை வெட்டி எடுத்து அதை எங்கு கொண்டு வந்தான்?***
(a) *பெத்லகேம்* (b) *காத்* (c) *எரிகோ* (d) *எருசலேம்*

***விடைகள்***

1. c) 1 *சாமு.* 17 : 4
2. b) 1 *சாமு.* 17 : 4
3. a) 1 *சாமு.* 17 : 18
4. b) 1 *சாமு.* 17 : 49
5. d) 1 *சாமு.* 17 : 54

**V** *யார், யாரிடம், எப்போது கூறியது :* (3 Marks)

1. **a)** ***"உங்களில் ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள்; அவன் என்னிடத்தில் வரட்டும்" (1 சாமு. 17 : 8).***

**b)** ***"அவன் என்னோடே யுத்தம்பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால் நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராய் இருப்போம்" (1 சாமு. 17 : 9).***

**c)** ***"நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால் நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து எங்களைச் சேவிக்க வேண்டும்" (1 சாமு. 17: 9).***

**d)** ***"நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்" (1 சாமு. 17 : 10).***

*யார்* - *பெலிஸ்தனாகிய கோலியாத்*
*யாரிடம்* - *இஸ்ரவேலின் சேனைகளைப் பார்த்துக் கூறியது*
*எப்போது* - *பெலிஸ்தர் யுத்தம்பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து, யூதாவிலுள்ள சோக்கோவிலே ஒருமித்துக் கூடி, எபேஸ்தம்மீமிலே பாளயமிறங்கினார்கள். சவுலும் இஸ்ரவேல்*

*மனுஷரும் ஒருமித்துக் கூடி, ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கி, பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள். அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து கோலியாத் என்னும் ஒரு வீரன் புறப்பட்டுவந்து இஸ்ரவேலின் சேனையைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

2. **“*இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்?*” (*1 சாமு.* 17 : 26).**

***யார்*** : *தாவீது*

***யாரிடம்*** : *தன்னண்டையில் நிற்கிற இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்துக் கூறியது*

***எப்போது*** : *தாவீது பாளயத்திலிருந்த தன் சகோதரர்களின் சுகசெய்தியை விசாரிக்கச் சென்றபோது பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து கோலியாத் என்னும் வீரன் எழும்பிவந்து, இஸ்ரவேலின் சேனைகளைப் பார்த்து, உங்களில் ஒருவன் என்னோடே யுத்தம் பண்ணவும், என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம், நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால் நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து எங்களைச் சேவிக்கவேண்டும் என்று சொல்லி நிந்தித்தான். இதைக் கேட்ட தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

3. **a) “*வனாந்தரத்திலுள்ள அந்தக்கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய் ?*” (1 *சாமு.* 17 : 28).**

**b) “*உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்*” (1 *சாமு.* 17 : 28).**

***யார்*** – *தாவீதின் மூத்த சகோதரனாகிய எலியாப்*

***யாரிடம்*** – *தாவீதிடம்*

***எப்போது*** – *தாவீது இஸ்ரவேலின் சேனைகளை நிந்தித்த பெலிஸ்தனாகிய கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு தன்னண்டையிலே நிற்கிறவர்களிடம் இந்த பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும். ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனமில்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று பேசிக்கொண்டிருந்தான். அதைப் பார்த்த அவனுடைய மூத்த சகோதரனாகிய எலியாப் தாவீதின் மேல் கோபங் கொண்டு இவ்விதமாகக் கூறினான்.*

**4.** ***“நான் வந்ததற்கு முகாந்தரம் இல்லையா” (1 சாமு. 17 :: 29)***

*__யார்__* - *தாவீது*

*__யாரிடம்__* - *தன் மூத்த சகோதரனாகிய எலியாபிடம்*

*__எப்போது__* - *கோலியாத் இஸ்ரவேலின் சேனைகளை நிந்தித்ததை தாவீது கேட்டு, அதைக் குறித்து இஸ்ரவேல் ஜனங்களிலே தன்னண்டையிலே நிற்கிற மனுஷரோடே பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டான். அப்போது அவன் தாவீதின் மேல் கோபங்கொண்டு நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான். அப்பொழுது தாவீது எலியாபிடம் இவ்விதமாகக் கேட்டான்.*

**5.** ***“உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன்” (1 சாமு. 17 : 32).***

*__யார்__* - *தாவீது*

*__யாரிடம்__* - *சவுலிடம்*

*__எப்போது__* - *ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று கோலியாத்தைக் குறித்து தாவீது சொன்ன வார்த்தைகளை ஜனங்கள் கேட்டு சவுலின் சமுகத்தில் அறிவித்தார்கள். சவுல் தாவீதை அழைத்தனுப்பினான். அப்பொழுது தாவீது சவுலிடம் இவ்விதமாகக் கூறினான்.*

**6.** ***“நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது” (1 சாமு. 17 : 33).***

*__யார்__* - *சவுல்*

*__யாரிடம்__* - *தாவீதிடம்*

*__எப்போது__* - *தாவீது, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று கோலியாத்தைக் குறித்து சொன்ன வார்த்தைகளை ஜனங்கள் கேட்டு சவுலின் சமுகத்தில் அறிவித்தார்கள். சவுல் தாவீதை அழைத்தனுப்பினான். அப்பொழுது தாவீது சவுலிடம் இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை என்று கூறியதை சவுல் கேட்டதும் தாவீதிடம் இவ்விதமாகக் கூறினான்.*

7. i) **“*விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்*” (1 *சாமு.* 17: 36).**

ii) **“*என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்*” (1 *சாமு.* 17: 37)**

***யார்*** - *தாவீது*
***யாரிடம்*** - *சவுலிடம்*
***எப்போது*** - *தாவீது, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்ற கோலியாத்தைக் குறித்து சொன்ன வார்த்தைகளை ஜனங்கள் கேட்டு சவுலின் சமுகத்தில் அறிவித்தார்கள். சவுல் தாவீதை அழைத்தனுப்பினான். அப்பொழுது தாவீது சவுலிடம் இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்கவேண்டியதில்லை என்று கூறியதை சவுல் கேட்டதும், தாவீதை நோக்கி, ‘ நீ இந்த பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னாலே ஆகாது. நீ இளைஞன் அவனோ தன் சிறுவயதுமுதல் யுத்தவீரன்” என்றான். அதற்குத் தாவீது இவ்விதமாக மறுமொழி கூறினான்.*

8. **“*போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக* ” (1 *சாமு.* 17 :37)**

***யார்*** - *சவுல்*
***யாரிடம்*** - *தாவீதிடம்*
***எப்போது*** - *தாவீது, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று கோலியாத்தைக் குறித்து சொன்ன வார்த்தைகளை ஜனங்கள் கேட்டு சவுலின் சமுகத்தில் அறிவித்தார்கள். சவுல் தாவீதை அழைத்தனுப்பினான். தாவீது சவுலிடம் போய் இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்கவேண்டியதில்லை என்றான். அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி, ‘நீ இந்த பெலிஸ்தனோடே யுத்தம் பண்ண உன்னால் ஆகாது’ என்றான். இதைக்கேட்ட தாவீது, சவுலிடம் ‘என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்த பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்’ என்றான். அதற்கு சவுல், போ, கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக என்றான்.*

9. **a) “*நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா?*” (1 *சாமு.* 17 : 43).**

**b) “*என்னிடத்தில் வா ; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப்பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்*” (1 *சாமு.* 17 : 44).**

***யார்*** - *கோலியாத்*
***யாரிடம்*** - *தாவீதைப் பார்த்து கூறியது*
***எப்போது*** - *தாவீது கோலியாத்துக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போகும் போது தன் தடியைக் கையிலே பிடித்துக் கொண்டு,*

*ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கற்களைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய அடைப்பப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டுபோனான். அப்பொழுது கோலியாத் தாவீதைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

**10**. **a)** ***"நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1 சாமு. 17 : 45).***

**b)** ***"இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1 சாமு. 17 : 46).***

**c)** ***"கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்" (1 சாமு. 17 : 47).***

**d)** ***"யுத்தம் கர்த்தருடையது ; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1 சாமு. 17 : 47)***

***யார்*** - *தாவீது*

***யாரிடம்*** - *கோலியாத்திடம்*

**எப்போது** - *தாவீது கோலியாத்துக்கு விரோதமாக யுத்தத்திற்கு போகும் போது தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கற்களைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய அடைப்பப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு போனான். அப்பொழுது கோலியாத் தாவீதைப் பார்த்து, 'நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி தன் தேவர்களைக் கொண்டு அவனை சபித்து நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" என்றான். அப்பொழுது தாவீது பெலிஸ்தனை நோக்கி இவ்விதமாகக் கூறினான்.*

**VI** ***ஓரிரு வாக்கியங்களில் விடை எழுது :*** (2 Marks)

1. ***கோலியாத் என்னும் தங்கள் வீரனோடு வந்த பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறதற்கு எங்கு ஒருமித்துக் கூடி எங்கு பாளயமிறங்கினார்கள்?***
*பெலிஸ்தர் யூதாவிலுள்ள சோக்கோவிலே ஒருமித்துக் கூடி எபேஸ்தம்மீமிலே பாளயமிறங்கினார்கள்* (1 *சாமு.* 17 :1).

2. ***சவுலும், இஸ்ரவேல் மனுஷரும் கோலியாத்துடன் வந்த பெலிஸ்தருக்கு விரோதமாக எங்கு பாளயமிறங்கினார்கள்?***
*சவுலும், இஸ்ரவேல் மனுஷரும் ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்* (1 *சாமு.* 17 : 2).

3. ***இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தத்திற்கு வந்த பெலிஸ்தருடைய வீரன் பெயர் என்ன? அவன் எந்த ஊரான்?***
*இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தத்திற்கு வந்த பெலிஸ்தருடைய வீரன் பெயர் கோலியாத். அவன் காத் ஊரானாவான்* (1 *சாமு.* 17 : 4).

4. ***கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு கலங்கி மிகவும் பயப்பட்டவர்கள் யார்?***
*சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்* (1 *சாமு.* 17 :11).

5. ***பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தத்திற்குப் போன தாவீதின் சகோதரர்கள் எத்தனை பேர்? அவர்கள் பெயர் என்ன?***
*பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தத்திற்குபோன தாவீதின் சகோதரர்கள் மூன்று பேர் ; அவர்கள் பெயர் எலியாப், அபினதாப், சம்மா ஆகும்* (1 *சாமு.* 17 :13).

6. ***கோலியாத் இஸ்ரவேல் ஜனங்களை எத்தனை நாட்கள் நிந்தித்தான்?***
*கோலியாத் இஸ்ரவேல் ஜனங்களை காலையிலும் மாலையிலும் நாற்பது நாட்கள் நிந்தித்தான்* (1 *சாமு.* 17 :16).

7. ***ஈசாய் தாவீதை ஏன் போர்க்களத்துக்கு அனுப்பினான்?***
*போர்க்களத்திலிருக்கிற தன் சகோதரரின் சுக செய்தியை விசாரித்து அதற்குரிய அடையாளம் அவர்களிடத்தில் வாங்கிக்கொண்டு வரும்படியாக ஈசாய் தாவீதை அனுப்பினான்* (1 *சாமு.* 17 : 18).

8. ***தாவீது கோலியாத்திற்கு விரோதமாய் எவ்வாறு யுத்தத்திற்குப் புறப்பட்டு போனான்?***
*தாவீது தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருந்து ஐந்து கூழாங்கற்களைத் தெரிந்துகொண்டு, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு கோலியாத்திற்கு விரோதமாய் புறப்பட்டுப் போனான்* (1 *சாமு.* 17 : 40).

9. ***கோலியாத் தாவீதை அசட்டை பண்ணக் காரணம் என்ன?***
*தாவீது இளைஞனும், சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியும் உள்ளவனாய் இருந்தபடியால் கோலியாத் அவனை அசட்டைபண்ணினான்* (1 *சாமு.*17 : 42).

10. ***கோலியாத் மரித்த பின் பெலிஸ்தரைத் துரத்தியது யார்?***
*கோலியாத் மரித்த பின் இஸ்ரவேலரும் யூதா மனுஷரும் பெலிஸ்தரைத் துரத்தினார்கள்* (1 *சாமு.* 17 : 52).

11. ***தாவீது பெலிஸ்தனாகிய கோலியாத்தின் தலையையும், ஆயுதங்களையும் என்ன செய்தான்?***
*தாவீது பெலிஸ்தனாகிய கோலியாத்தின் தலையை எருசலேமுக்குக் கொண்டு வந்தான். ஆயுதங்களையோ தன் கூடாரத்தில் வைத்தான்* (1 *சாமு.* 17 :54).

12. ***தாவீதின் எந்த இரு குணங்கள் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்தது?***
*தாவீது கர்த்தருக்காக மிகுந்த வைராக்கியமுள்ளவனாகவும் அவர் பேரில் பூரண விசுவாசமுள்ளவனாகவும் இருந்தான். இந்த இரு குணங்களும் அவனுக்கு கோலியாத்தின் மேல் ஜெயத்தைக் கொடுத்தது (போதனை).*

**VII** <u>*சுருக்கமான விடையளி :*</u> (4 Marks)

1. ***ஈசாய் பாளயத்திலிருந்த தாவீதின் சகோதரரின் சுகசெய்தியை அறிந்துவரும்படி தாவீதை அனுப்பியபோது அவனிடத்தில் கொடுத்தனுப்பிய பொருட்கள் யாவை ?***
   *ஒரு மரக்கால் வறுத்த பயற்றையும், பத்து அப்பங்களையும், பத்து பால்கட்டிகளையும் ஆயிரம் பேருக்கு அதிபதியானவனிடத்தில் கொடுத்து அவர்களுடைய சுகசெய்திகளை விசாரித்து வரும்படியாக அனுப்பினான்* (1 *சாமு.* 17 : 17, 18).

2. ***கோலியாத் இஸ்ரவேலின் சேனைகளை எவ்வாறு நிந்தித்தான்?***
   *கோலியாத் இஸ்ரவேலின் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, "நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன? நான் பெலிஸ்தன் அல்லவா? நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்து கொள்ளுங்கள். அவன் என்னிடத்தில் வரட்டும். அவன் என்னோடே யுத்தம் பண்ணவும், என்னைக் கொல்லவும் சமர்த்தனானால் நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம். நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால் நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து எங்களைச் சேவிக்க வேண்டும்" என்று சொல்லி நிந்தித்தான்* (1 *சாமு.* 17 : 8, 9).

3. ***பெலிஸ்தனாகிய கோலியாத்தைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும் என்று ராஜாவாகிய சவுல் அறிவித்திருந்தான்? இஸ்ரவேலின் நிந்தையை நீக்கினவன் யார்?***
   i) *பெலிஸ்தனாகிய கோலியாத்தைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனை ராஜா மிகவும் ஐசுவரியவானாக்கி, அவனுக்குத் தன்னுடைய குமாரத்தியைத் தந்து, அவன் தகப்பன் வீட்டாருக்கு இஸ்ரவேலிலே சர்வமானியம் கொடுப்பதாக அறிவித்திருந்தான்.*
   ii) *தாவீது கோலியாத்தைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்கினான் (1 சாமு. 17 : 25, 50)..*

4. ***யுத்தம் நடக்கும் இடத்தில் ஜனங்களோடு பேசிக்கொண்டிருந்த தாவீதைக் கண்டு கோபமடைந்த அவனுடைய மூத்த சகோதரனின் பெயர் என்ன? அவன் கூறியது யாது?***
   i) *தாவீதைக் கண்டு கோபமடைந்த அவனுடைய மூத்த சகோதரன் பெயர் எலியாப்.*
   ii) *எலியாப் தாவீதின்மீது கோபங்கொண்டு, நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய் ? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்று கூறினான் (1 சாமு. 17 : 28).*

**VIII** <u>*விரிவான விடை எழுது :*</u> (6 Marks)

1. ***கோலியாத்தின் உருவத்தையும், அவனுடைய ஆயுதங்களையும் பற்றி எழுதுக.***
   *(அ) காத் ஊரானான கோலியாத்தின் உயரம் 6 முழமும் ஒரு ஜாணுமாம்.*

*(ஆ) அவன் தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப் போட்டு, ஒரு போர்க்கவசம் தரித்துக் கொண்டிருப்பான். அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கும். அவன் தன் கால்களிலே வெண்கலக் கவசத்தையும் தன் தோள்களின்மேல் வெண்கலக் கேடகத்தையும் தரித்திருப்பான். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்காரரின் படைமரத்தின் கனதியும் அவன் ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கல் இரும்புமாயிருக்கும். பரிசைபிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான்* (1 *சாமு.* 17: 4-7).

2. ***கோலியாத்தோடு யுத்தம் பண்ண முன்வந்த தாவீதுக்கும், சவுலுக்குமிடையே நடந்த சம்பாஷணையை எழுது.***

*தாவீது சவுலை நோக்கி பெலிஸ்தனாகிய கோலியாத்தினிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்கவேண்டியதில்லை. உம்முடைய அடியானாகிய நான் போய் , அவனோடே யுத்தம் பண்ணுவேன் என்றான். அதற்கு சவுல் நீ இந்தக் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது. நீ இளைஞன். அவனோ தன் சிறுவயதுமுதல் யுத்தவீரன் என்றான். அப்பொழுது தாவீது சவுலைப் பார்த்து : உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிற போது ஒரு விசை சிங்கமும், ஒரு விசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருந்து ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்து போய் அதை அடித்து அதை அதின் வாய்க்கு தப்புவித்தேன். அது என்மேல் பாய்ந்தபோது நான் அதின் தாடியைப் பிடித்து அதைக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும், அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன். விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போலிருப்பான். அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான். பின்னும் தாவீது என்னை சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்த பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான். அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து, 'போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக' என்றான்* (1 *சாமு.* 17: 32 - 37).

3. ***கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தத்திற்குப் புறப்பட்ட தாவீதை சவுல் எவ்வாறு ஆயத்தப்படுத்தி அனுப்பப் பிரயாசப்பட்டான்? அதற்குத் தாவீது என்ன செய்தான்?***

*சவுல் தாவீதுக்குத் தன் வஸ்திரங்களை உடுத்துவித்து, வெண்கலமான ஒரு சீராவை அவன் தலையின்மேல் போட்டு, ஒரு கவசத்தையும் அவனுக்குத் தரிப்பித்து தன்னுடைய பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்து, அவனை யுத்தத்திற்கு அனுப்பப் பிரயாசப்பட்டான் அவனுக்கு அதிலே பழக்கமில்லாததினால் நடந்து பார்த்தான். அப்பொழுது தாவீது சவுலை நோக்கி , நான் இவைகளைப் போட்டுக்கொண்டு போகக் கூடாது. இந்த அப்பியாசம் எனக்கு இல்லை என்று சொல்லி, அவைகளைக் களைந்து போட்டு தன் தடியைக் கையிலே பிடித்துக் கொண்டு ஆற்றிலிருந்து ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்தெடுத்து அவைகளை மேய்ப்பருக்குரிய அடைப்பப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு அந்த பெலிஸ்தனண்டையில் போனான் (1 சாமு.* 17 :38 - 40)

4. ***கோலியாத்திற்கும், தாவீதிற்குமிடையே நடந்த சம்பாஷணையை விவரி.***

*பெலிஸ்தனாகிய கோலியாத், தாவீதிடம் நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி, தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான். என்னிடத்தில் வா. நான் உன் மாமசத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான். அதற்கு தாவீது பெலிஸ்தனை நோக்கி, நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார். நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன். அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்வார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனமெல்லாம் அறிந்துகொள்ளும். யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். இதுவே தாவீதுக்கும் கோலியாத்திற்கும் நடந்த சம்பாஷணை ஆகும்* (1 *சாமு*.17 : 43 - 47).

5. ***தாவீதுக்கும் கோலியாத்துக்குமிடையே நடந்த யுத்தத்தைக் குறித்தும், தாவீதின் ஜெயத்தைக் குறித்தும் குறிப்பு எழுதுக (அல்லது) கோலியாத்தை தாவீது எவ்வாறு வென்றான்?***

*கோலியாத் எழும்பி தாவீதுக்கு எதிராகக் கிட்டிவருகையில் தாவீது தீவிரமாய் அந்த சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து கவணிலே வைத்துச் சுழற்றி பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான். அந்தக்கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால் அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான். தாவீதின் கையில் பட்டயம் இல்லாதிருந்ததால், அவன் பெலிஸ்தனண்டையில் ஓடி அவன்மேல் நின்று அவன் பட்டயத்தை உருவி அவன் தலையை வெட்டிப்போட்டான். இவ்விதமாய் தாவீது ஒரு கவணினாலும், ஒரு கல்லினாலும் பெலிஸ்தனைக் கொன்றுபோட்டான்* (1 *சாமு*. 17 : 48- 51).

**XI** ***<u>போதனை :</u>*** (2 Marks)

*தாவீதைப் போல நாமும் கர்த்தருக்கென்று வைராக்கியமுள்ளவர்களாயிருந்து, அவரை விசுவாசித்தால், அவர் நமக்கு எல்லாவற்றிலும் ஜெயம் தருவார்.*

**********

## பாடம்-2

# தாவீதும் யோனத்தானும்

(1 சாமு. 18: 1 – 9; 19:15,18 ; 20:12-43 ; 21:15 – 18, 31:1,2 ;
2 சாமு.1: 17 - 27 )

**I.** <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

"இந்த வார்த்தை உண்மையுள்ளது ; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட ப் பிழைத்துமிருப்போம் ;

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் ; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார் "

**(II தீமோத்தேயு. 2 : 11, 12).**

[

**II.** <u>பொருத்துக :</u> (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அபினதாப் | – | சவுலின் குமாரன் | (1 சாமு. 31 : 2) |
| 2. | யோனத்தான் | – | சவுலின் குமாரன் | (1 சாமு. 23 : 16 ; 31:2 ) |
| 3. | மல்கிசூகா | – | சவுலின் குமாரன் | (1 சாமு. 31 : 2) |
| 4. | சீப் | – | வனாந்தரம் | (1 சாமு. 23 : 15) |
| 5. | ஏசேல் | – | கல் | (1 சாமு. 20 : 19) |
| 6. | பிள்ளையாண்டான் | – | அம்புகள் | (1 சாமு. 20 : 36) |
| 7. | கில்போவா | – | மலை | (1 சாமு. 31 : 1) |
| 8. | யாசேர் | – | புஸ்தகம் | (II சாமு. 1 : 18) |

**III.** <u>**கோடிட்ட இடங்களை நிரப்புக :**</u> (1 Mark)

1. யோனத்தானின் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் ___________ இருவரும் ___________ பண்ணிக் கொண்டார்கள்
2. ___________ தாவீதை காய்மகாரமாய்ப் பார்த்தான்.
3. பிள்ளையாண்டான் போன பின்பு, தாவீது தரையிலே முகங்குப்புற விழுந்து யோனத்தானை ___________ வணங்கினான்.
4. தாவீது சவுலைவிட்டு ஓடிப்போய் சீப் வனாந்திரத்தில் வசித்தபோது, ___________அவனைச் சந்தித்து தேவனுக்குள் அவனைத் திடப்படுத்தினான்.
5. ___________ காட்டில் இருந்து விட்டான். யோனத்தான் தன் வீட்டிற்குப் போனான்.
6. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, ___________மலையில் வெட்டுண்டு விழுந்தார்கள்.
7. ___________ சவுலையும், சவுலின் குமாரராகிய யோனத்தானையும், அபினதாபையும், மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள்.
8. தாவீது சவுலின் பேரிலும் யோனத்தானின் பேரிலும் ___________ பாடினான்

**விடைகள்**

1. இசைந்திருந்தது , உடன்படிக்கை (1 சாமு. 18 : 1,3)
2. சவுல் (1 சாமு. 18 : 9)
3. மூன்று விசை (1 சாமு. 20 : 41
4. யோனத்தான் (1 சாமு. 23 : 16)
5. தாவீது (1 சாமு. 23 : 18)
6. கில்போவா (1 சாமு. 31 : 1)
7. பெலிஸ்தர் (1 சாமு. 31 : 2)
8. புலம்பல் (2 சாமு. 1 : 17)

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :* (1 Mark)

1. **யோனத்தான் தன் உயிரைப் போல யாரை நேசித்தான்?**
   (a) அபினதாப் (b) மல்கிசூகா (c) அப்னேர் (d) தாவீது

2. **தாவீதைக் கொன்றுபோடும்படி அவனைக் கட்டிலோடே எடுத்துக்கொண்டு வரும்படி சேவகரை அனுப்பியது யார்?**
   (a) நாபால் (b) சவுல் (c) ஆகீஸ் (d) சீபா

3. **சவுல் ராஜாவின் பந்தியில் தாவீதின் இடம் காலியாயிருந்த நாள் எது?**
   (a) அமாவாசி (b) பௌர்ணமி
   (c) ஓய்வுநாள் (d) பெந்தேகொஸ்தே நாள்

4. **சவுலும் அவன் குமாரரும் வெட்டுண்டு விழுந்த இடம் எது?**
   (a) சீப் வனாந்தரம் (b) ஏலா பள்ளத்தாக்கு
   (c) கில்போவா மலை (d) மம்ரே சமபூமி

5. **சவுலின் பேரிலும் யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடியது யார்?**
   (a)இஸ்ரவேலின் குமாரத்திகள் (b) தாவீது
   (c) பெலிஸ்தரின் குமாரத்திகள் (d) சீயோனின் குமாரத்திகள்

6. **பராக்கிரமசாலிகளுடைய கேடகம் எங்கு அவமதிக்கப்பட்டது?**
   (a) கில்போவா (b) எர்மோன் (c) மோரியா (d) சீனாய்

7. **தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர் போல் அவமதிக்கப்பட்டவர் யார்?**
   (a) அப்சலோம் (b) சவுல் (c) அதோனியா (d) சாலமோன்

8. **யாருடைய பட்டயம் வெறுமையாய் திரும்பினதில்லை?**
   a}யோனத்தான் (b) மல்கிசூகா (c) சவுல் (d) அபினதாப்

9. **கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும் சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுமுள்ளவர்கள் யார்?**
   (a) சவுலும் தாவீதும் (b) சவுலும் யோனத்தானும்
   (c) தாவீதும் யோனத்தானும் (d) அப்னேரும் மல்கிசூகாவும்

<u>விடைகள்</u>

| | |
|---|---|
| 1. d) (1 *சாமு.* 18 : 1) | 6. a) (2 *சாமு.* 1 : 21) |
| 2. b) (1 *சாமு.* 19 : 15) | 7. b) (2 *சாமு.* 1 : 21) |
| 3. a) (1 *சாமு.* 20 : 24, 25 ) | 8. c) (2 *சாமு.* 1 : 22) |
| 4. c) (1 *சாமு.* 31 : 1) | 9. b) (2 *சாமு..* 1 : 23) |
| 5. b) (2 *சாமு.* 1 : 17) | |

**V** ***<u>யார், யாரிடம், எப்போது கூறியது :</u>*** (3 Marks)

1. " ***சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்*** "
**(1 *சாமு.* 18 : 7)**
***<u>யார்</u>*** – *ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில் கூறிய வார்த்தைகள்*
***<u>யாரிடம்</u>*** – *ஸ்திரீகள் தங்களுக்குள் பாடியது*

***<u>எப்போது</u>*** – *தாவீது பெலிஸ்தனாகிய கோலியாத்தைக் கொன்று திரும்பி வந்தபோது, ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து புறப்பட்டு, சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்.*

2. "***ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன***"
**(1 *சாமு.* 20 : 27)**
***<u>யார்</u>*** – *சவுல்*
***<u>யாரிடம்</u>*** – *யோனத்தானிடம்*
***<u>எப்போது</u>*** – *அமாவாசியானபோது ராஜாவாகிய சவுல் போஜனம்பண்ண உட்கார்ந்தான். தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது. அமாவாசிக்கு மறுநாளிலும் தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது. அப்போது சவுல் யோனத்தானிடம் இவ்வாறு கேட்டான்.*

3. "***ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ?*** " **(1 *சாமு.* 20 : 30).**
***<u>யார்</u>*** – *சவுல்*
***<u>யாரிடம்</u>*** – *யோனத்தானிடம்*
***<u>எப்போது</u>*** – *அமாவாசி அன்றும் மறுநாளிலும் தாவீது போஜனம் பண்ணும் இடம் காலியாயிருந்ததால், சவுல் தாவீதைக் குறித்து யோனத்தானிடம் கேட்டான். அதற்கு யோனத்தான், தாவீது தன் சகோதரர்களைப் பார்க்கப்போகவேண்டுமென்று உத்தரவு கேட்டுக்கொண்டு போயிருக்கிறான் என்றான். அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி அவனைப் பார்த்து இவ்வாறு கூறினான்.*

4. "***அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான்*** "

**(1 *சாமு.* 20 : 32)**

***யார்*** – *யோனத்தான்*

***யாரிடம்*** – *சவுலிடம்*

***எப்போது*** – *தாவீது தன் குடும்பத்தார் ஊரிலே பலியிடப்போவதாகவும், தான் சென்று தன் சகோதரரைப் பார்க்க வேண்டும் என்று உத்தரவு கேட்டுக் கொண்டு போய் இருப்பதாகவும் யோனத்தான் சவுலிடம் அறிவித்தான். அப்போழுது சவுல் மிகவும் கோபமுண்டவனாகி இப்போதே தாவீதை அழைப்பித்து என்னிடத்தில் கொண்டுவா. 'அவன் சாக வேண்டும்? என்றான். யோனத்தான் சவுலுக்குப் பிரதியுத்திரமாக அவன் ஏன் கொல்லப்படவேண்டும். அவன் என்ன செய்தான்" என்றான்.*

5. **" *நீ தரித்துநிற்காமல் தீவிரித்துப் பொட்டெனப்போ*(1 *சாமு.* 20 : 38).**

***யார்*** – *யோனத்தான்*

***யாரிடம்*** – *பிள்ளையாண்டானிடம்*

***எப்போது*** – *யோனாத்தான் சவுலின் மனப்பான்மையை தாவீதுக்குத் தெரிவிக்க , ஒரு சிறு பிள்ளையாண்டானைக் கூட்டிக்கொண்டு, வெளியே புறப்பட்டுப்போய் ஒரு அம்பை எய்தான். யோனத்தான் எய்த அம்பிருக்கும் இடமட்டும் பிள்ளையாண்டன் போனபோது , தாவீதுக்குசவுலினால் ஆபத்து நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதை தாவீதுக்குக் குறிப்பாய் உணர்த்தும்படி, யோனத்தான் பிள்ளையாண்டானிடம் இவ்விதமாகக் கூறினான்.*

6. "***கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும் நடுநிற்கும் சாட்சி***" **(1 *சாமு.* 20 : 42).**

***யார்*** – *யோனத்தான்*

***யாரிடம்*** – *தாவீதிடம்*

***எப்போது*** – *தாவீது ஏசேல் என்னும் கல்லண்டையில் இருந்த பொழுது யோனத்தான் சவுலின் மனப்பான்மையை தாவீதுக்குக் குறிப்பாய்த் தெரிவித்தான். தாவீது தன் மறைவிடத்திலிருந்து எழுந்துவந்து, தரையிலே முகங்குப்புற விழுந்து யோனத்தானை வணங்கி, ஒருவரையொருவர் முத்தஞ்செய்து அழுதார்கள். பின்பு யோனத்தான் தாவீதிடம் இவ்வாறு கூறினான்.*

**VI. *ஓரிரு வாக்கியங்களில் விடை எழுது :*** (2 Marks)

1. ***யோனத்தானின் ஆத்துமா யாருடைய ஆத்துமாவோடு இசைந்திருந்தது? இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின் காரணம் என்ன?***

*யோனத்தானின் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது. (1 சாமு.* 18 : 1) *யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப் போல சிநேகித்ததினால் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்* (1 *சாமு.* 18 : 3).

2. ***தாவீதைத் தன் உயிரைப் போல சிநேகித்தது யார்? தாவீதைப் பகைத்தது யார்?***

*தாவீதைத் தன் உயிரைப்போல யோனத்தான் சிநேகித்தான்; தாவீதைப் பகைத்தது சவுல்* (1 *சாமு.* 18 : 1, 9).

3. **யோனத்தான் தாவீதை நேசித்ததற்கு அடையாளமாக அவனுக்கு கொடுத்தவை யாவை.?**
*யோனத்தான் தான் போர்த்திக்கொண்டிருந்த சால்வையையும் தன் வஸ்திரத்தையும் தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும் தாவீதுக்குக் கொடுத்தான்* (1 *சாமு*. 18 : 4)

4. **சவுல் தாவீதை யுத்தமனுஷரின் மேல் அதிகாரியாக்கக் காரணம் என்ன?**
*தாவீது, சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும் போய், புத்தியாய்க் காரியத்தை நடப்பித்ததினால், சவுல் அவனை யுத்த மனுஷரின்மேல் அதிகாரியாக்கினான்* (1 *சாமு*. 18 : 5).

5. **தாவீது யார் யாருடைய கண்களுக்கு பிரியமாயிருந்தான்?**
*தாவீது எல்லா ஜனத்தின் கண்களுக்கும் சவுலின் ஊழியக்காரரின் கண்களுக்கும்கூட பிரியமாயிருந்தான்* (1 *சாமு*. 18 : 5).

6. **தாவீது பெலிஸ்தியனை கொன்று திரும்பியபோது ஸ்திரீகள் எவ்வாறு ஆடிப்பாடினார்கள்?**
*தாவீது பெலிஸ்தியனைக் கொன்று திரும்பியபோது, ஸ்திரீகள், சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று ஆடிப்பாடினார்கள்* (1 *சாமு*. 18 : 7).

7. **தாவீதும் யோனத்தானும் இரண்டாம் முறையாக எப்போது உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்?**
*தாவீது சவுலைவிட்டு நாயோத்திற்கு ஓடிப்போனபோது அவனும் யோனத்தானும் இரண்டாம் முறையாக உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்* (1 *சாமு*. 20 : 1, 16).

8. **யோனத்தான் அடையாளத்திற்காக உபயோகித்த ஆயுதம் எது ? எந்த நாளில் எத்தனை முறை அதை உபயோகித்தான்?**
*யோனத்தான் அடையாளத்திற்காக உபயோகித்த ஆயுதம் அம்பு. அதை மூன்றாம் நாளில் மூன்று உபயோகித்தான்* (1 *சாமு*. 20 : 19, 20).

9. **அமாவாசி அன்று யாருடைய இடம் காலியாயிருந்தது? அதினால் சவுல் யார் மேல் கோபங்கொண்டான்?**
*அமாவாசியன்று தாவீதின் இடம் காலியாயிருந்தது* (1 *சாமு*. 20 : 25).
*சவுல் யோனத்தான் மேல் கோபங்கொண்டான்* (1 *சாமு*. 20 : 30).

10. **யோனாத்தான் அமாவாசியின் மறுநாளில் போஜனம்பண்ணாதிருந்தது ஏன்?**
*யோனாத்தான், தன் தகப்பனாகிய சவுல் தாவீதைக் கொன்று போட தீர்மானித்திருந்ததும், அவனை நிந்திதுச் சொன்னதும் அவனுக்கு மனநோவாயிருந்தபடியினால் அவன் போஜனம்பண்ணாதிருந்தான்* (1 *சாமு*. 20 : 34).

11. **தாவீது சவுலை விட்டு ஓடிப்போய் எந்த வனாந்திரத்திலுள்ள காட்டில் வசித்தான்? அங்கே அவனை திடப்படுத்தியது யார்?**
*தாவீது சவுலை விட்டு ஓடிப்போய் சீப் வனாந்திரத்திலுள்ள காட்டில் வசித்தான். அங்கே யோனத்தான் அவனை திடப்படுத்தினான்* (1 *சாமு*. 23 : 15, 16).

**12. யோனத்தானும் தாவீதும் எத்தனை முறை உடன்படிக்கை செய்து கொண்டார்கள்? கடைசியாக செய்து கொண்ட இடம் எது?**

i) யோனத்தானும் தாவீதும் மூன்று முறை உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

ii) சீப் வனாந்திரத்திலுள்ள ஒரு காட்டில் கடைசியாக உடன்படிக்கை செய்து கொண்டார்கள் (1 சாமு. 18 : 3; 20 : 16; 23 : 18).

**13. கில்போவா மலையில் வெட்டுண்டு விழுந்தவர்கள் யார்?**

சவுலும் அவன் குமாரராகிய யோனத்தானும், அபினதாபும், மல்கிசூகாவும் மற்றும் இஸ்ரவேலரும் கில்போவா மலையில் வெட்டுண்டு விழுந்தார்கள் (1 சாமு. 31 : 2).

**14. மரணத்திலும் பிரிந்துபோகாதிருந்தவர்கள் யார்?**

சவுலும் யோனத்தானும் மரணத்திலும் பிரிந்து போகாதிருந்தவர்களாவர் (2 சாமு. 1 : 23).

**15. கழுகுகளைப்பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர்களாயிருந்தவர்கள் என்று தாவீது யாரைக் குறித்து புலம்பல் பாடினான்?**

சவுலையும் யோனத்தானையும் குறித்து தாவீது புலம்பல் பாடினான் (2 சாமு. .1 : 23)

**16. ஸ்திரிகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் யாருடைய சிநேகம் தாவீதுக்கு அதிகமாய் இருந்தது?**

ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் யோனத்தானின் சிநேகம் தாவீதுக்கு அதிகமாய் இருந்தது (2 சாமு. 1 : 26).

**VII <u>சுருக்கமான விடையளி</u>** (4 Marks)

**1. சவுல் ஏன் தாவீதைப் பகைத்தான்? (அல்லது) சவுல் எதுமுதற்கொண்டு தாவீதைப் பகைக்க ஆரம்பித்தான்?**

தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பி வந்தபின்ப, ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல் பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர் கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள் இந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது. அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள். இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைப் பகைக்க ஆரம்பித்தான் (1 சாமு. 18 : 6, 7, 8).

**2. யோனாத்தான் தாவீதோடு பண்ணின உடன்படிக்கை என்ன?**

யோனாத்தான் தாவீதை நோக்கி, "நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயைசெய்யவேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் பூமியின்மேல் இராதபடிக்கு, வேர் அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும்" (1 சாமு. 20 :

14, 15) என்றான். இதுவே யோனாத்தான் தாவீதோடு பண்ணின உடன்படிக்கை ஆகும்.

**3. சீப் வனாந்திரத்தில் யோனத்தான் தாவீதை தைரியப்படுத்தும்படியாக கூறிய வார்த்தைகள் யாவை?**

*யோனத்தான் காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய் தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி, "நீர் பயப்படவேண்டாம் ; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்கமாட்டாது ; நீர் இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருப்பீர் அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன் அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார்" (1 சாமு. 23 : 16,17) என்றான்.*

**VIII** ***விரிவான விடையளி*** (6 Marks)

**1. தாவீதைக் குறித்த சவுலின் மனப்பான்மையை தாவீதுக்குத் தெரிவிக்கும்படி யோனத்தான் தான் என்ன அடையாளங்களைத் திட்டம் பண்ணியிருப்பதாக தாவீதுக்கு அறிவித்தான்.**

*யோனத்தான் தாவீதிடம் நாளைக்கு அமாவாசி. நீர் உட்கார வேண்டிய இடம் காலியாயிருப்பதினால் உம்மைக் குறித்து விசாரிக்கப்படும். காரியம் நடந்த பின்பு, மூன்றாம் நாளிலே நீர் ஒளித்திருக்கும் இடத்திற்குத் தீவிரித்து வந்து, ஏசேல் என்னும் கல்லண்டையில் உட்கார்ந்திரும். அப்பொழுது நான் குறிப்பு வைத்து எய்கிறதுபோல, அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளை எய்து ஒரு பிள்ளையாண்டானிடம் நீ போய் அந்த அம்புகளைத் தேடிவா, என்று அனுப்புவேன். அவன் சிறிது தூரம் போனதும், "இதோ அம்புகள் உனக்கு இப்புறத்திலே இருக்கிறது . அவைகளைக் கொண்டுவா" என்று பிள்ளையாண்டானிடத்தில் நான் சொன்னால், 'நீர் வாரும் அப்போழுது உமக்கு சமாதானம் இருக்கும்' என்றும், அவனிடத்தில் 'இதோ அம்புகள் உனக்கு அப்புறத்திலே இருக்கிறது' என்று பிள்ளையாண்டானிடத்தில் சொன்னால் கர்த்தர் உம்மை போகச் சொல்கிறார். எனவே நீர் போய் விடும் என்று அறியும்" என்று சொன்னான் (1 சாமு. 20 : 18 - 22).*

**2. தாவீது சவுலையும் யோனத்தானையும் குறித்துப் பாடிய புலம்பல் என்ன?**

1. *தாவீது, சவுலையும் யோனத்தானையும் குறித்து இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்கள்.*
2. *அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது. சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டது.*
3. *கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும் பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை. சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.*
4. *உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள். மரணத்திலும் பிரிந்துபோனதில்லை.*

5. கழுகுகளைப்பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.
6. போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.
7. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன். நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய் ; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது ; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது.
8. பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்களே: யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே, என்று புலம்பல் பாடினான் (2 சாமு. 1 : 17 - 27).

**IX <u>போதனை</u> :** ( 2 Marks)

யோனத்தான் தாவீதை நேசித்தபோதிலும், தன் சுகத்தை வெறுத்து தாவீதுடன் பாடுபடுவதைத் தெரிந்துகொள்ளவில்லை. நாம் கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய பரிசுத்தவான்களையும் நேசிப்பது மட்டுமல்ல, அவர்களோடு பாடுபடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**********

## பாடம் - 3

# தாவீது சவுலை விட்டு ஓடிப் போனது

(I சாமு 16 : 23 ; 18: 6-11;19:9,10 18,22-24; 23: 25-28;)
24 : 1-7; 26: 1-12; 27: 4)

**I மனப்பாட வசனம் :** (2 Marks)

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறுக் கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே."

**( லூக்கா 6 : 35).**

**II பொருத்துக :** (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. தாவீது | - | சுரமண்டலம் | (1 சாமு 16 : 23) |
| 2. சாமுவேல் | - | ராமா | (1 சாமு19 : 18) |
| 3. சவுல் | - | ஈட்டி | (1 சாமு 18 : 11) |
| 4. அப்னேர் | - | நேரின் குமாரன் | (1 சாமு 26 : 5) |
| 5. அப்னேர் | - | படைத்தலைவன் | (1 சாமு 26 : 5) |
| 6. அபிசாய் | - | யோவாவின் சகோதரன் | (1 சாமு 26 : 6) |
| 7. அபிசாய் | - | செருயாவின் குமாரன் | (1 சாமு 26 : 6) |
| 8. மாகோன் | - | வனாந்தரம் | (1 சாமு 23 : 25) |
| 9. என்கேதி | - | வனாந்தரம் | (1 சாமு 24 : 1 |
| 10. ஆகிலா | - | மேடு | (1 சாமு 26 : 1 |

11. சேக்கு - பெரிய கிணறு (1 சாமு 19 : 22)

**III கோடிட்ட இடங்களை நிரப்புக :** (1 Mark)

1. தாவீது சவுலுக்குத் தப்பி __________ சாமுவேலிடம் ஓடிப்போனான்.
2. தாவீது ராமாவில் இருந்த __________ ஓடிப்போனான். பின்பு இருவரும் __________போய் அங்கே தங்கியிருந்தார்கள.
3. சவுல் __________ முன்பாக நாயோதிலே தீர்க்கதரிசனம் சொன்னான். ஆகையினால் சவுலையும் __________ ஒருவனோ என்பார்கள்.
4. தாவீது __________ வனாந்தரத்தில் இருக்கிறான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டது.
5. சவுல் இஸ்ரவேல் அனைத்திலும் __________ மூவாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு தாவீதைத் தேடப் போனான்.
6. நாம் கர்த்தரால்__________ பண்ணப்பட்டவர்களுக்கு விரோதமாகக் கிரியை செய்யக்கூடாது.
7. தாவீது சவுலின் __________ தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் __________ அடித்துக்கொண்டது.
8. தாவீது சவுலின் தலைமாட்டில் இருந்த __________, __________ எடுத்துக் கொண்டான்.
9. தாவீது __________ பட்டணத்திற்கு ஓடிப் போனான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, அதற்குப் பின் அவனைத் தேடவில்லை.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. ராமாவிலிருந்த | (1 சாமு 19 : 18) |
| 2. சாமுவேலிடம் நாயோதிற்கு | (1 சாமு 19 : 18) |
| 3. சாமுவேலுக்கு,தீர்க்கதரிசிகளில் | (1 சாமு 19 : 24) |
| 4. என்கேதியின | (1 சாமு 24 : 1) |
| 5. தெரிந்துகொள்ளப்பட்ட | (1 சாமு 24 : 2) |
| 6. அபிஷேகம் | (பாடத்திட்டம்) |
| 7. சால்வையின் , மனது | (1 சாமு 24 : 5) |
| 8. தண்ணீர் செம்பையும் ஈட்டியையும் | (1 சாமு 26 : 12) |
| 9. காத் | (1 சாமு 27 : 4) |

**IV சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :** (1 Mark)

1. **பொல்லாத ஆவி சவுலின் மீது வரும்போது தாவீது என்ன செய்வான்?**
   a. ஓடிப்போவான் c. கொலை செய்ய முயற்சிப்பான்
   b. சுரமண்டலம் வாசிப்பான் d. நடனம் பண்ணுவான்

2. **சவுல் தாவீதைக் கொல்லும்படியாக எத்தனை தரம் ஈட்டியை எறிந்தான்?**
   a. ஒருதரம் c. மூன்றுதரம்
   b. இரண்டுதரம் d. நான்குதரம்

3. ***தாவீது சவுலுக்கு தப்பி சாமுவேலை சந்திக்கும்படி எந்த இடத்திற்குப் போனான்?***

a . *ராமாவிற்கு* c. *எஷிமோனுக்கு*

b. *காத் பட்டணத்திற்கு* d. *சீப் வனாந்தரத்துக்கு*

4. ***சவுலிடமிருந்து தப்பி ஓடிவந்த தாவீது சாமுவேலோடுகூட எங்கு தங்கியிருந்தான்?***

a. *காத்* c. *நாயோதி*

b. *சிக்லாக்* d. *எஷிமோன்*

5. ***தாவீது ஒளிந்துகொண்டு இருக்கிற இடத்தை கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் கூறியவர்கள் யார்?***

a. *காத் ஊரார்* c. *சீப் ஊரார்*

b. *கிலேயாத்தின் குடிகள்* d. *அஸ்கலோன் பட்டணத்தார்*

6. ***தாவீதும் அவன் மனுஷரும் எஷிமோனுக்குத் தெற்கான எந்த வனாந்தரத்தில் இருந்தார்கள்?***

a. *சீப் வனாந்தரம்* c. *பாரான் வனாந்தரம்*

b. *என்கேதி* d. *மாகோன் வனாந்தரம்*

7. ***சவுலைக் கொன்றுபோடும்படியான சந்தர்ப்பம் கிடைத்தபோதும் தாவீது சவுலை தப்பவிட்டது ஏன்?***

a. *இராஜாவாக இருந்தபடியால்*

b. *அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தபடியால்*

c. *நண்பனின் தகப்பனானபடியினால்*

d. *மீகாள் பரிந்து பேசினபடியால்*

8. ***சவுலைக் கொன்றுபோடும்படி தாவீதுக்கு எத்தனை முறை தருணம் கிடைத்தது?***

a. *நான்கு முறை* b. *மூன்று முறை* c.*இரண்டு முறை* d. *ஒரு முறை*

*9.* ***சவுலின் படைத்தலைவனாயிருந்தவன் யார்?***

a. *அபிசாய்* b. *யோவாப்* c. *அகிமெலேக்* d. *அப்னேர்*

10. ***தாவீதோடு சவுலின் பாளயத்திற்கு இறங்கி வந்தவன் யார்?***

a. *அபிசாய்* b. *அமாசா* c *யோவாப்* d. *அகிமெலேக்*

11. ***சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டுபோனவன் யார்?***

a. *அபிசாய்* b. *தாவீது* c. *யோவாப்* d. *அப்னேர்*

12. ***தாவீது எந்தப் பட்டணத்திற்கு ஓடிப்போன பிறகு சவுல் அவனைத் தேடுவதை விட்டு விட்டான்?***

a. *ராமா* b. *காத்* c *என்கேதி* d. *நாயோதி*

| விடைகள் | |
|---|---|
| 1. b. (1 சாமு 16 : 23) | 7. b. (1 சாமு 24 : 6) |
| 2. c. (1 சாமு 18 : 11; 19:10) | 8. c (1 சாமு 24 : 6; 26 : 29) |
| 3. a. (1 சாமு 19 : 18) | 9. d. (1 சாமு 26 : 5) |
| 4. c. (1 சாமு 19 : 18) | 10. a. (1 சாமு 26 : 6) |
| 5. c. (1 சாமு 23 : 19) | 11. b. (1 சாமு 26 : 12) |
| 6. d. (1 சாமு 23 : 24) | 12. b. (1 சாமு 27 : 4) |

**V.** *யார் யாரிடம் எப்போது கூறியது ?* (3 Marks)

1. **"நீர் சீக்கிரமாய் வாரும் ; பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள்"** (1 சாமு 23 : 27)

   யார் : சவுலின் ஆள்

   யாரிடம் : சவுலிடம்

   எப்போது : சவுலும் அவன் மனுஷரும் மாகோன் வனாந்தரத்திலே தாவீதையும் அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் வளைந்துகொண்டபோது அவனிடம் வந்து இவ்வாறு கூறினான்.

2. **"இதோ நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே". (1 சாமு 24 : 4)**

   யார் : தாவீதின் மனுஷர்

   யாரிடம் : தாவீதிடம்

   எப்போது : தாவீது என்கேதி வனாந்தரத்தில் இருப்பதை அறிந்து சவுல் தாவீதை பிடிக்கும்படியாக அங்கே வந்தான். தாவீதும் அவன் மனுஷரும், மறைந்திருந்த வழியோரத்தில் இருக்கிற கெபியிலே, சவுல், மலஜலாதிக்குப் போனபோது தாவீதின் மனுஷர் தாவீதிடம் இவ்வாறு கூறினார்கள்.

3. **a. "கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு கர்த்தர் என்னைக் காப்பாராக."**

   **b. "அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (1 சாமு 24 : 6) .**

   யார் : தாவீது

   யாரிடம் : தன் மனுஷரிடம்

   எப்போது : தாவீது என்கேதி யின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று சவுல் கேள்விப்பட்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் வரையாடுகளுள்ள கன்மலைகளின் மேல் தேடப்போனான். வழியிலே ஒரு கெபியிலே சவுல் மலஜலாதிக்குப் போனான். அங்கே தாவீதும் அவன் மனுஷரும் அந்த கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்தார்கள்.

*அப்பொழுது தாவீதின் மனுஷர் தாவீதை நோக்கி, " இதோ நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன், உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே" என்றார்கள். அப்பொழுது தாவீது தன் மனுஷரைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

4. **"*என்னோடேகூட சவுலிடத்திற்குப் பாளயத்தில் இறங்கி வருகிறவன் யார்* " (1 *சாமு 26* : 6)** .

*<u>யார்</u>* : *தாவீது*

*<u>யாரிடம்</u>* : *அகிமெலேக்கையும், அபிசாயையும் பார்த்து*

*<u>எப்போது</u>* : *சவுல் ஆகிலாமேட்டிலே பாளயமறிங்கினான் என்று வேவுக்காரர் மூலமாய் அறிந்து கொண்டான். பின்பு தாவீது சவுல் பாளயமிறங்கின இடத்திற்குப் போய், சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவன் படைத்தலைவனும், ஜனங்களும் அங்கே படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு, தாவீது அகிமெலேக்கையும் அபிசாயையும் பார்த்து இவ்விதமாக கேட்டான்.*

5. **" *நான்உம்மோடேகூட வருகிறேன்* " (1 *சாமு 26* : 6)**

*யார்* : *அபிசாய்*

*யாரிடம்* : *தாவீதிடம்*

***எப்போது :*** *சவுல் ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினான் என்று வேவுக்காரர் மூலமாய் அறிந்து கொண்டான். பின்பு தாவீது, சவுல் பாளயமிறங்கின இடத்திற்குப் போய், சவுலும், நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவன் படைத்தலைவனும், ஜனங்களும் அங்கே படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு, தாவீது அகிமெலேக்கையும் அபிசாயையும் பார்த்து, "என்னோடே கூடச் சவுலிடத்திற்குப் பாளயத்தில் இறங்கி வருகிறவன் யார் " என்று கேட்டபோது அபிசாய் தாவீதிடம் இவ்விதமாகக் கூறினான்.*

6. **a. "*இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார்* ".**

   **b. "*இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாகக் குத்தாமல் ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டுமா*" (1 *சாமு 26* : 8)**

*<u>யார்</u>* : *அபிசாய்*

*<u>யாரிடம்</u>* : *தாவீதிடம்*

*<u>எப்போது</u>* : *சவுல் ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினான் என்று தாவீதுஅறிந்து கொண்டு, தாவீதும் அபிசாயும் ராத்திரியிலே ஜனங்களுக்குள்ளே வந்தார்கள். அங்கே சவுல் இரதங்கள் இருக்கிற இடத்திலும், அவனைச் சுற்றி அப்னேரும் ஜனங்களும் படுத்துக்கொண்டிருந்ததையும் கண்டார்கள். அப்போது அபிசாய் தாவீதைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

7. **a. "*அவரைக் கொல்லாதே கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு குற்றமில்லாற் போகிறவன் யார்* ".**

   **b. "*நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு கர்த்தர் என்னைக் காக்கக் கடவர்* " (*1 சாமு 26* : 11).**

*<u>யார்</u>* : *தாவீது*

*<u>யாரிடம்</u>* : *அபிசாயிடம்*

*<u>எப்போது</u>* : *ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கின சவுலிடம், தாவீதும் அபிசாயும் இராத்திரியிலே ஜனங்களுக்குள்ளே வந்தார்கள். அங்கே சவுல் இரதங்கள் இருக்கிற இடத்திலும் அவனைச் சுற்றி அப்னேரும் ஜனங்களும் படுத்துக் கெர்ணடிருந்ததையும் அபிசாய் பார்த்து, தாவீதிடம் இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாகக் குத்தாமல் ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டுமா என்று கேட்டான். அப்போது தாவீது அபிசாயைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

**VI** ***<u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி</u>* :** (2 Marks)

1. ***தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலைப் பிடித்தபோது சவுல் எவ்வாறு ஆறுதலடைந்தான்?***
*தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலைப் பிடித்தபோது தாவீது சுரமண்டலத்தை வாசிப்பான். அதினால் பொல்லாத ஆவி சவுலைவிட்டு நீங்க அவன் சொஸ்தமாகி ஆறுதல் அடைந்தான்* (1 *சாமு 16* : 23)

2. ***தாவீது சவுலுக்குத் தப்பி எந்த இடத்திற்கு, யாரிடம் ஓடிப்போனான்?***
*தாவீது சவுலுக்குத் தப்பி ராமாவில் இருந்த சாமுவேலிடம் ஓடிப்போனான்* (1 *சாமு 19* : 18).

3. ***தாவீது ராமாவில் இருந்த சாமுவேலிடம் போய் அறிவித்தது என்ன? தாவீதும் சாமுவேலும் எங்கே போய் தங்கினார்கள்?***
*தாவீது சாமுவேலிடம் போய், சவுல் தனக்கு செய்தது எல்லாவற்றையும் அறிவித்தான். தாவீதும் சாமுவேலும் நாயோதிலேபோய் தங்கினார்கள்* (1 *சாமு 19*:18).

4. ***நாயோதிலே சவுலால் தாவீதுக்கு ஒரு தீமையும் செய்ய முடியவில்லை ஏன்?***
*சாமுவேலும் தாவீதும் ராமாவுக்கு அடுத்த நாயோதிலே இருக்கிறார்கள் என்று சவுல் கேள்விப்பட்டு அங்கே போனான். சவுல்மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவன் ராமாவிற்கடுத்த நாயோதிலே சேரும் மட்டும் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டே நடந்து வந்தான். எனவே சவுலால் தாவீதுக்கு ஒரு தீமையும் செய்ய முடியவில்லை (1 சாமு 19* : 22, 24).

5. ***சவுலும் அவன் மனுஷரும் எந்த வனாந்தரத்தில் தாவீதை வளைந்து கொண்டார்கள்? சவுல் பெலிஸ்தரைப் பின் தொடர்ந்து திரும்பி வரும்போது தாவீது எங்கு இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.?***
*சவுலும் அவன் மனுஷரும் மாகோன் வனாந்தரத்தில் தாவீதை வளைந்து கொண்டார்கள். சவுல் பெலிஸ்தரை பின்தொடர்ந்து திரும்பி வரும்போது தாவீது என்கேதி வனாந்தரத்தில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது* (1 *சாமு* 23 : 26 ; 24 :1 )

6. ***சவுல் தாவீதை மாகோன் வனாந்தரத்தில் பிடிக்கத்தக்கதாய் வளைந்துகொண்ட பின்பும் ஏன் அவனைப் பிடிக்காமல் திரும்பினான்?***
*சவுலும் அவன் மனுஷரும் தாவீதையும் அவனுடைய மனுஷர்களையும் மாகோன் வனாந்தரத்தில் வளைந்து கொண்டபின் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து “நீர் சீக்கிரமாய் வாரும் பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள்” என்றான். அதனால் சவுல் தாவீதை பின் தொடர்வதை விட்டுத் திரும்பினான். (1 சாமு 23* : 27)

7. ***சவுல் தாவீதைத்தேட எத்தனை பேரைக் கூட்டிக்கொண்டு எங்கு போனான்?***
*சவுல் இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துக் கொள்ளப்பட்ட மூவாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு தாவீதையும் அவன் மனுஷரையும் என்கேதி வனாந்தரத்தில் இருக்கிற வரையாடுகளுள்ள கன் மலைகளின் மேல் தேடப் போனான். (1 சாமு 24* : 2)

8. ***கெபியில் சவுலைப் பார்த்த தாவீதின் மனுஷர் தாவீதிடம் கூறியது என்ன?***
*தாவீதின் மனுஷர் தாவீதை நோக்கி “இதோ நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே“, என்று கூறினார்கள். (1 சாமு 24* : 4)

9. ***தாவீது தன் மனுஷரை சவுலின்மேல் எழும்பவொட்டாமல் தடைபண்ணி கூறிய வார்த்தைகள் என்ன?***
*தாவீது தன் மனுஷரைப் பார்த்து, கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக, அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று சொல்லி அவர்களை சவுலின் மேல் எழும்பவொட்டாமல் தடைபண்ணினான். (1 சாமு 24* : 6,7)

10. ***தாவீது யாருடைய சால்வையின் தொங்கலை அறுத்துக் கொண்டான்? அதனால் அவனுக்குள் என்ன சம்பவித்தது?***
*தாவீது சவுலின் சால்வையின் தொங்கலை அறுத்துக் கொண்டான். ஆதனால் அவனுடைய மனது அடித்துக் கொண்டது. (1 சாமு 24* : 5)

11. ***சீப் ஊரார் சவுலிடம் தாவீது எங்கு இருக்கிறான் என்று அறிவித்தார்கள்?***
*சீப் ஊரார் கிபியாவில் இருக்கிற சவுலிடத்தில் வந்து, தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று அறிவித்தார்கள். (1 சாமு 26* : 1)

12. ***சவுல் சீப் வனாந்தரத்திலே தாவீதைத் தேட புறப்பட்டுப் போய், எங்கு பாளையமிறங்கினான்?***
*சவுல் சீப் வனாந்தரத்திலே தாவீதைத் தேடப் புறப்பட்டு, எஷிமோனுக்கு எதிரே வழியண்டையில் இருக்கிற ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினான்* (1 *சாமு 26*: 3).

13. ***தாவீதும் அபிசாயும் சவுல் பாளயமிறங்கின இடத்திற்கு வந்தபோது கண்டது என்ன?***
*இதோ, சவுல் இரதங்கள் இருக்கிற இடத்திலே படுத்து நித்திரை பண்ணிக்கொண்டிருந்ததையும் அவன் தலைமாட்டில் ஈட்டி நிலத்திலே குத்தியிருந்ததையும், அவனைச் சுற்றிலும் அப்னேரும் ஜனங்களும் படுத்துக் கொண்டு இருந்ததையும் கண்டார்கள் (1 சாமு 26* : 7)

14. ***அபிசாய் இரவிலே சவுல் பாளயமிறங்கின இடத்திற்கு வந்து அவன் நித்தரை பண்ணிக்கொண்டிருந்ததைக் கண்டபோது தாவீதைப் பார்த்துக் கூறியது என்ன?***
*அபிசாய் தாவீதைப் பார்த்து, "இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இப்பொழுதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாய்க் குத்தாமல், ஒரே குத்தாக நிலத்தில் உருவக்குத்தட்டுமா" என்றான் (1 சாமு 26* : 8)

15. ***சவுலுடைய ஜீவனை தாவீது ஏன் விலையேறப்பெற்றதாகக் கருதினான்?***
*சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்பதால் சவுலுடைய ஜீவனை தாவீது விலையேறப்பெற்றதாகக் கருதினான் (போதனை).*

16. ***சவுலைக் கொன்று போடும்படியாக தாவீதுக்கு எந்தெந்த வனாந்தரங்களில் தருணம் கிடைத்தது?***
*சவுலைக் கொன்று போடும்படியாக தாவீதுக்கு என்கேதி வனாந்திரத்தலும், சீப் வனாந்தரத்திலும் தருணங்கள் கிடைத்தது. (1 சாமு 24* :1,4 ; *26* : 2, 12)

17. ***சவுல் எத்தனை முறை ஈட்டியை எறிந்து தாவீதைக் கொலை செய்ய முயற்சித்தான்? தாவீது எத்தனை முறை சவுலைக் கொல்லாமல் தப்பவிட்டான்?***
*சவுல் மூன்றுமுறை ஈட்டியை எறிந்து தாவீதைக் கொலைசெய்ய முயற்சித்தான்.*
*தாவீது இரண்டுமுறை சவுலைக் கொல்லாமல் தப்பவிட்டான். (1 சாமு 18* : 11; 19:10; 24:4, 26:12).

18. ***தாவீதைத் தேடுவதை சவுல் எப்போது நிறுத்தினான்?***
*தாவீது காத் பட்டணத்திற்கு ஓடிப்போனான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்ட போது சவுல் தாவீதைத் தேடுவதை நிறுத்தினான் (1 சாமு 27* : 4)

**VII.** ***சுருக்கமான விடையளி*** **:** (4 Marks)

1. ***சவுலைக் கொன்று போட தாவீதுக்குக் கிடைத்த முதல் தருணம் பற்றி விவரி?***
*தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று சவுலுக்க அறிவிக்கப்பட்டபோது, அவனைத் தேடி கன்மலைகளின் மேல் போனான். அங்கே வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் ஒரு கெபி இருந்தது. தாவீதும் அவன் மனுஷரும் மறைவாக அந்த கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்ததை அறியாத சவுல், அதிலே மலஜலாதிக்குப் போனான். அப்பொழுது தாவீது எழுந்துபோய் சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான். இதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டு இருந்தது. இப்படியாக தனியாக வந்த சவுலைக் கொல்ல நல்ல தருணம் கிடைத்தும், தன் மனுஷர் வற்புறுத்தியும் கூட அவனைக் கொல்லாமல் தாவீது விட்டு விட்டான். (1 சாமு 24* : 1,4)

2. ***சவுலைக் கொன்று போட தாவீதுக்குக் கிடைத்த இரண்டாம் தருணம் பற்றி விவரி?***
*தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக்கொண்டு இருக்கிறான் என்று சவுல் கேள்விப்பட்டு, சவுலும் அவன் மனுஷரும் ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினார்கள். தாவீதும் அபிசாயும் அங்கே வந்து பார்த்போது சவுலும், அப்னேரும், ஜனங்களும் படுத்து நித்திரைப்பண்ணிக் கொண்டு இருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சவுலைக்*

*கொன்றுபோட மனதில்லாமல் தாவீது அவனுடைய ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். இவ்விதமாக தாவீதுக்கு இரண்டாம் தருணம் கிடைத்தபோதும் சவுலைக் கொன்று போடவில்லை* (1 *சாமு.* 26 : 1, 3, 7, 12 ).

3. ***தாவீது அபிசாயை சவுலின் மேல் எழும்பவொட்டாமல் தடைபண்ணிக்கூறிய வார்த்தைகள் என்ன?***

*தாவீது அபிசாயைப் பார்த்து, 'அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற் போகிறவன் யார்? கர்த்தர் அவரைஅடித்து, அல்லது அவருடைய காலம் வந்து அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்கு போய் மாண்டாலொழிய, நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் போடாதபடிக்கு கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இப்போதும் அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டு போவோம் என்று சொல்லி அபிசாயை சவுலின் மேல் எழும்ப வொட்டாமல் தடை பண்ணினான் (1 சாமு 26* : 9-11) .

4. ***கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தவறு செய்யும்போது நாம் ஏன் அவர்களுக்கு விரோதமாக எழும்பக்கூடாது? அவர்கள் எப்படி மரிக்க வேண்டும் என்று தாவீது அபிசாயிடம் கூறினான்?***

*கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தவறு செய்யும் போது நாம் அவர்களுக்கு விரோதமாக எழும்பக் கூடாது. எழும்பினால் குற்றவாளிகளாகவே தீர்க்கப்படுவோம். கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தவறு செய்யும்போது, கர்த்தர் அவர்களை அடிக்க வேண்டும் அல்லது அவர்களுடைய காலம் வந்து அவர்கள் மரிக்க வேண்டும் அல்லது அவர்கள் யுத்தத்திற்குப் போய் மாண்டு போக வேண்டும் என்று தாவீது அபிசாயிடம் கூறினான்* (1 *சாமு 26* : 10,11)

**VIII *விரிவான விடையளி :*** (6 Marks)

1. ***சவுலைக் கொன்று போட தாவீதுக்கு கிடைத்த இரு தருணங்கள் பற்றி விவரி?***

*தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவனைத்தேடி கன்மலைகளின் மேல் போனான். அங்கே வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் ஒரு கெபி இருந்தது. தாவீதும் அவன் மனுஷரும் மறைவாக அந்த கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்ததை அறியாத சவுல், அதிலே மலஜலாதிக்குப் போனான். அப்பொழுது தாவீது எழுந்துபோய் சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான். இதினிமித்தம் அவன் மனது அடித்துக்கொண்டு இருந்தது. இப்படியாகத் தனியாக வந்த சவுலைக் கொல்ல நல்ல தருணம் கிடைத்தும், தன் மனுஷர் வற்புறுத்தியும் கூட அவனைக் கொல்லாமல் தாவீது விட்டுவிட்டான் (1 சாமு 24* : 1-4).

*தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளிந்துகொண்டு இருக்கிறான் என்று சவுல் கேள்விப்பட்டு சவுலும் அவன் மனுஷரும் ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினார்கள்.*

*தாவீதும் அபிசாயும் அங்கே வந்து பார்த்தபோது சவுலும், அப்னேரும், ஜனங்களும் படுத்து நித்திரைபண்ணிக்கொண்டு இருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சவுலைக் கொன்றுபோட மனதில்லாமல் தாவீது அவனுடைய ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டான். இவ்விதமாகத் தாவீதுக்கு இரண்டாம் தருணம் கிடைத்த போதும் சவுலைக் கொன்று போடவில்லை (1 சாமு 26* : 1, 3, 7, 12 ).

**2. *தாவீது தான் நினைத்திருந்தால் சவுலைக் கொன்றிருக்க முடியும் என்பதை நிரூபிக்கும்படிக்கு அவன் எடுத்துச் சென்ற அடையாளங்கள் யாவை? விவரி.***

***அடையாளங்கள் :*** *சவுலுடைய சால்வையின் தொங்கலின் சிறு துண்டு, சவுலின் ஈட்டி, தண்ணீர்ச் செம்பு. தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவனைத்தேடி கன்மலைகளின்மேல் போனான். அங்கே வழியோரத்தில் இருக்கிற ஆட்டுத்தொழுவங்களிடத்தில் ஒரு கெபி இருந்தது. தாவீதும் அவன் மனுஷரும் மறைவாக அந்தக் கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்ததை அறியாத சவுல், அதிலே மலஜலாதிக்குப் போனான். அப்பொழுது தாவீது எழுந்துபோய் சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான். இதினிமித்தம் அவன் மனது அடித்துக்கொண்டு இருந்தது. இப்படியாக தனியாக வந்த சவுலைக் கொல்ல நல்ல தருணம் கிடைத்தும், தன் மனுஷர் வற்புறுத்தியும் கூட அவனைக் கொல்லாமல் தாவீது விட்டுவிட்டான். அவனைக் கொல்லாமல் விட்டதற்கு அடையாளமாக சவுலுடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டு வந்தான்* (1 *சாமு 24* : 1-4).

*தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளிந்துகொண்டு இருக்கிறான் என்று சவுல் கேள்விப்பட்டு, சவுலும் அவன் மனுஷரும் ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினார்கள். தாவீதும் அபிசாயும் அங்கே வந்து பார்த்தபோது, சவுலும் அப்னேரும் ஜனங்களும் படுத்து நித்திரைபண்ணிக்கொண்டு இருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சவுலைக் கொன்றுபோட மனதில்லாமல் தாவீது அவனுடைய ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். இவ்விதமாகத் தாவீதுக்குச் சவுலைக்கொல்ல இரண்டு தருணங்கள் கிடைத்திருந்தும் கொல்லாமல், இரண்டு அடையாளத்தை எடுத்துக்கொண்டு வந்தான்* (1 *சாமு* 26:1,3,7,12).

**3. *தாவீது தன் மனுஷரையும், அபிசாயையும் சவுலின்மேல் எழும்பவொட்டாமல் தடைபண்ணி கூறிய வார்த்தைக்ள என்ன?***

*தாவீது தன் மனுஷரைப் பார்த்து, “கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன் மேல் தன் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் ” என்று சொன்னான்.*

*தாவீது அபிசாயைப் பார்த்து, அவரைக் கொல்லாதே, கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்? கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய, நான் என் கையை கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு கர்த்தர் என்னைக்*

காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்கிறேன் என்றான். இவ்வாறு தாவீது தன் மனுஷரையும், அபிசாயையும் சவுலின்மேல் எழும்பவொட்டாமல் தடைபண்ணினான் (1 சாமு 24 : 6; 26:8, 9).

**IX போதனை:** (2 Marks)

சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்ததால், தாவீது அவனுடைய ஜீவனை விலையேறப்பெற்றதாகக் கருதினான். கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டு நமக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கிறவர்களை நாம் அதிக மேன்மையாக எண்ணி, அவர்களைக் கனம்பண்ணவேண்டும்.

**********

## பாடம்-4

# நாபாலும் அபிகாயிலும்.

(1 சாமு 25 :: 1 - 38)

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.
ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும், மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும் " (நீதிமொழிகள் 15 :1, 2).

**II** ***பொருத்துக*** (1 Mark)

1. பாரான் - வனாந்தரம் (1 சாமு 25 : 1)
2. கர்மேல் - தொழில்துறை (1 சாமு 25 : 2)
3. நாபால் - மகாபாரிக் குடித்தனக்காரன் (1 சாமு 25 : 2)
4. நாபால் - காலேபுடைய சந்ததி (1 சாமு 25 : 3)
5. அபிகாயில் - நாபாலின் மனைவி (1 சாமு 25 : 3)
6. அபிகாயில் - ரூபவதி (1 சாமு 25 : 3)
7. அபிகாயில் - மகாபுத்திசாலி (1 சாமு 25 : 3)
8. தாவீது - கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவர் (1 சாமு 25 : 28)

**III** ***கோடிட்ட இடங்களை நிரப்புக*** (1 Mark)

1. ராமாவிலிருக்கிற அவனுடைய வளவிலே __________________ அடக்கம் பண்ணினார்கள்.
2. நாபால் __________________தன் ஆடுகளை மயிர் கத்தரித்துக் கொண்டிருந்தான்.
3. __________________ மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தாள்.
4. அபிகாயில் வற்றலாக்கப்பட்ட ______________ திராட்சக் குலைகளையும் , வற்றலான __________________ அத்திப்பழ அடைகளையும் எடுத்துக்கொண்டு __________________ சந்திக்கும் படி போனாள்.

5. ____________________ தாவீதை கண்ட போது, தீவிரமாய் கழுதையை விட்டு இறங்கி முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டாள்.

**விடைகள்**

1. சாமுவேலை (1சாமு. 25 : 1)
2. கர்மேலில் (1சாமு. 25 : 2)
3. அபிகாயில் (1சாமு. 25 : 3)
4. நூறு, இருநூறு, தாவீதை (1சாமு. 25 : 18)
5. அபிகாயில், (1சாமு. 25 : 23)

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது* (1 Mark)

1. **நாபாலுக்கு எத்தனை வெள்ளாடுகள் இருந்தன?**
   a) 300 b) 500 c) 1000 d) 2000
2. **நாபாலுக்கு எத்தனை ஆடுகள் இருந்தன?**
   a) 1000 b) 2000 c) 2500 d) 3000
3. **நாபால் எந்த சந்ததியை சேர்ந்தவன்?**
   a) காலேபுடைய சந்ததி b) யோசுவாவின் சந்ததி
   c) சவுலின் சந்ததி d) ஆகாபின் சந்ததி
4. **தாவீது நாபாலுடைய உதவியை நாடி எத்தனை வாலிபரை அனுப்பினான்?**
   a) ஐந்து b) பத்து c) பதினைந்து d) இருபது
5. **நாபாலுக்கு விரோதமாய் தாவீது புறப்பட்டபோது அவனோடு பின்சென்றவர்கள் எத்தனை பேர்?**
   a) இருநூறு பேர் b)நானூறு பேர் c)அறுநூறு பேர் d) எண்ணூறு பேர்
6. **தாவீதை சாந்தப்படுத்தும்படி சில உணவுப்பொருட்களை அனுப்பியவள் யார்?**
   a) மீகாள் b) பத்சேபாள் c) அபிகாயில் d) அகினோவா
7. **தாவீது செய்த நன்மைக்கு பதிலாக தீமை செய்தவன் யார்?**
   a) நாபால் b) அர்வனா c) பர்சிலா d) யோனத்தான்
8. **அபிகாயில் தாவீதைக் கண்டபோது எதிலிருந்து தீவிரமாய் இறங்கினாள்?**
   a) ஒட்டகத்திலிருந்து b)குதிரையிலிருந்து
   c)இரதத்திலிருந்து d) கழுதையிலிருந்து
9. **தன் பெயருக்கு ஏற்றாற்போல் பயித்தியமாய் இருந்தவன் யார்?**
   a) சவுல் b) நாபால் c) ஆமான் d) நாதாப்

**விடைகள்**

1. c. (1 *சாமு* 25 : 2) 4. b. (1 *சாமு.* 25 : 5) 7. a. (1 *சாமு* 25 : 21)
2 d.(1 *சாமு* 25 : 2) 5. b. (1 *சாமு.* 25 : 13) 8. d. (1 *சாமு* 25 : 23)
3. a. (1 *சாமு* 25 : 3) 6. c. (1 *சாமு.* 25 : 18) 9. b. (1 *சாமு* 25 : 25)

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* (3 Marks)

**1. "*நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்குஉண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக*"**

**(1 *சாமு* 25 : 6) .**

*யார்* : *தாவீது*

*யாரிடம்* : *பத்து வாலிபரிடம்*

*எப்போது* : *சாமுவேல் மரணமடைந்த பின்பு தாவீது, பாரான் வனாந்தரத்திற்கு புறப்பட்டுப் போய் அங்கே தங்கினான். அப்பொழுது நாபால் கர்மேலில் தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறான் என்று தாவீது அறிந்து, பத்து வாலிபரை அழைத்து, நாபாலிடம் சென்று இவ்விதமாக கூறும்படி சொன்னான்.*

**2. a) "*தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்?* " (1 *சாமு* 25 : 10).**

**b) "*தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு*" (1 *சாமு* 25 : 10, 11).**

**c) "*நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும் ..., நான் அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ* (1 *சாமு* 25 : 10, 11).**

*யார்* : *நாபால்*

*யாரிடம்* : *தாவீதின் ஊழியக்காரரிடம்*

*எப்போது* : *நாபால் கர்மேலில் தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிற செய்தியை வனாந்தரத்தில் இருக்கிற தாவீது கேட்டு, நாபாலின் உதவியை நாடி, பத்து வாலிபரை அனுப்பினான். அவர்கள் நாபாலிடம் போய் தாவீது கூறிய வார்த்தைகளைச் சொன்னார்கள். அப்பொழுது நாபால், தாவீது தன் ஊழியக்காரரிடம் இவ்விதமாகக் கூறினான்.*

**3. a) "*நீங்கள் அவரவர் உங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொள்ளுங்கள்*"**

**(1 *சாமு* 25 : 13).**

**b) "*நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமை செய்தான்* (1 *சாமு* 25 : 21)**

*யார்* : *தாவீது*

*யாரிடம்* : *தன் மனுஷரிடம்*

*எப்போது* : *நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக, தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? த,,கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக சமைத்ததை இன்ன இடத்தார் என்று அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ என்றான். இதை தாவீதின் வாலிபர்*

*தாவீதினிடத்தில் கூறினார்கள். அப்பொழுது தாவீது தன் மனுஷரிடம் இவ்விதமாகக் கூறினான்..*

**4. a) "*இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார்* (1 *சாமு.* 25 : 14, 17).**

**b) "*நம்முடைய எஜமான் மேலும், அவருடைய வீட்டார் யாவர்மேலும், நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது* (1 *சாமு* 25 : 17)**

*யார்* : *நாபாலின் வேலைக்காரரில் ஒருவன்*

*யாரிடம்* : *அபிகாயிலிடம்*

*எப்போது* : *நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக : தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து இன்ன இடத்தார் என்று அறியாத மனுஷருக்கு கொடுப்பேனோ என்றான். இதைக் கேட்ட நாபாலின் வேலைக்காரரில் ஒருவன் அபிகாயிலிடம் இவ்விதமாக கூறினான்.*

**5. a)"*என் ஆண்டவனே, இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும்* (1 *சாமு* 25 : 24)**

**b) "*அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்* (1 *சாமு.* 25 : 25).**

**c) "*என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே* (1 *சாமு* 25 : 28)**

**d) "*கர்த்தர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக* (1 *சாமு* 25 : 31).**

**e) "*கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்* (1 *சாமு.* 25: 28)".**

*யார்* : *அபிகாயில்*

*யாரிடம்* : *தாவீதிடம்*

*எப்போது* : *அபிகாயில், தாவீதினால் தன் குடும்பத்திற்கு ஒரு பொல்லாப்பு வருகிறதை அறிந்து, தாவீதுக்கும் அவன் மனுஷருக்கும் ஆகாரமாக சில பொருட்களை வேலைக்காரரின் மூலமாக அனுப்பினாள். பிறகு அவள் ஒரு கழுதையின் மேல் ஏறி மலையின் மறைவில் இறங்கி வருகையில், இதோ, தாவீதும் அவன் மனுஷரும் அவளுக்கு எதிராக இறங்கி வருகிறதை கண்டாள். அப்போது அபிகாயில் தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராய் தரையில் முகங்குப்புற விழுந்து, பணிந்து இவ்வாறு கூறினாள்.*

**5. a)"*உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்* (1 *சாமு.* 25 : 32)**

**b)"*நீ இன்றையதினம் எனக்குத் தடைபண்ணினபடியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக.*" (1 *சாமு* 25 : 33)**

*யார்* : *தாவீது*

*யாரிடம்* : *அபிகாயிலிடம்*

*எப்போது* : *தாவீது நாபாலுக்கு விரோதமாக தன் மனுஷரை கூட்டிக் கொண்டு போனான். அப்பொழுது தாவீதை சாந்தப்படுத்தும்படியாக அவனுக்கு எதிராக வந்த அபிகாயில் தன் கழுதையை விட்டு இறங்கி, அவனுக்கு நேராக தரையில் முக,,குப்புற விழுந்து பணிந்து அவன் பாதத்திலே விழுந்து, தன் குடும்பத்திற்காக வேண்டிக் கொண்டாள். அப்பொழுது தாவீது அபிகாயிலிடம் இவ்விதமாகக் கூறினான்.*

## VI ஓரிரு வாக்கியங் களில் விடையளி (2 Marks)

1. ***சாமுவேல் மரணமடைந்த பின் எங்கு அடக்கம்பண்ணப்பட்டான்? அதன்பின்பு தாவீது எங்கு புறப்பட்டுப் போனான்?***
*சாமுவேல் மரணமடைந்த பின் ராமாவிலிருக்கிற அவனுடைய வளவிலே அடக்கம்பண்ணப்பட்டான். அதன் பின்பு தாவீது பாரான் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப் போனான்* (1 *சாமு* 25 : 1)

2. ***மாகோன் ஊரான் யார்? அவன் மனைவியின் பெயர் என்ன?***
*மாகோன் ஊரான் நாபால் (1 சாமு* 25 : 2)
*அவனுடைய மனைவியின் பெயர் அபிகாயில் (1 சாமு* 25 : 3)

3. ***அபிகாயிலின் தன்மைகள் யாவை?***
*அபிகாயில் மகா புத்திசாலியும், ரூபவதியுமாய் இருந்தாள்(1 சாமு* 25 : 3)

4. ***தாவீது யாருடைய உதவியை நாடி எத்தனை வாலிபரை அனுப்பினான்?***
*தாவீது நாபாலுடைய உதவியை நாடி பத்து வாலிபரை அனுப்பினான்*
(1 *சாமு* 25: 5).

5. **a) *தாவீது நாபாலுக்கு விரோதமாக எத்தனை பேரைத் தன்னோடு கூட்டிக் கொண்டு போனான்?***
**b) *எத்தனை பேர் ரஸ்துக்கள் அண்டையில் இருந்து விட்டார்கள்?***
*தாவீது நாபாலுக்கு விரோதமாக நானூறு பேரைக் கூட்டிக் கொண்டு போனான். இருநூறு பேர் ரஸ்துக்கள் அண்டையில் இருந்து விட்டார்கள்(1 சாமு* 25 : 13)

6. ***அபிகாயில் தாவீதை எங்கு சந்தித்தாள்?***
*அபிகாயில் கழுதையின்மேல் ஏறி, மலையின் மறைவில் இறங்கிவருகையில் தாவீதும் அவன் மனுஷரும் அவளுக்கு எதிராக இறங்கி வந்தார்கள். அங்கே அபிகாயில் தாவீதை சந்தித்தாள்* (1 *சாமு*. 25 : 20)

7. ***அபிகாயில் தாவீதைக் காண்கையில் செய்தது என்ன?***
*அபிகாயில் தாவீதைக் காண்கையில் தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராகத் தரையிலே முகங்குப்புற அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டாள்* (1 *சாமு* 25 : 23, 24).

8. ***அபிகாயில் தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி யாரை வேண்டிக் கொண்டாள்? யாருக்குக் கொடுக்கும்படி கூறினாள்?***
i) *அபிகாயில் தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி தாவீதை வேண்டிக் கொண்டாள்.*
ii) *அவனைப் பின்பற்றுகிற வாலிபருக்குக் கொடுக்கும்படி கூறினாள்*
(1*சாமு* 25: 27).

9. ***நாபாலின் இருதயம் எப்பொழுது களித்திருந்தது ? எப்பொழுது அவன் இருதயம் செத்து, அவன் கல்லைப் போலானான்?***
*ராஜாவிருந்துக்கு ஒப்பான விருந்து நாபாலின் வீட்டிலே நடந்தபொழுது அவன் இருதயம் களித்திருந்தது. அபிகாயிலுக்கும், தாவீதுக்கும் இடையே நடந்த வர்த்தமான,,களை அபிகாயில் அவனுக்கு அறிவித்த போது, அவன் இருதயம் அவனுக்குள்ளே செத்து, அவன் கல்லைப் போலானான்* (1 *சாமு* 25 : 36, 37).

10. ***நாபால் எப்படி எத்தனை நாளுக்குப் பின்பு செத்தான்?***
*கர்த்தர் நாபாலை வாதித்ததினால், அவன் பத்து நாளுக்குப் பின்பு செத்தான்* (1 *சாமு* 25 : 38).

## VII <u>*சுருக்கமான விடையளி*</u> (4 Marks)

1. ***நாபாலைக் குறித்து குறிப்பு வரைக.***
*நாபால் மாகோனிலே குடியிருந்தான். அவன் மகாபாரிக் குடித்தனக்காரனாயிருந்தான். அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருந்தது. அவனுடைய தொழில் துறை கர்மேலில் இருந்தது. அ,,கே அவன் தன் ஆடுகளை மயிர்கத்தரித்துக் கொண்டிருந்தான். அவன் காலேபுடைய சந்ததியான்* (1 *சாமு* 25 : 2, 3)

2. ***நாபாலின் தன்மைகள் என்ன? அதைக் குறித்து அபிகாயிலும் அவனுடைய வேலைக்காரனும் கூறியது என்ன?***
   i) *நாபால் முரடனும், துராகிருதனுமாயிருந்தான்* (1 *சாமு* 25 : 3)
   ii) *அபிகாயில் நாபாலைக் குறித்து அவன் ஒரு பேலியாளின் மனுஷன் என்றும் அவனை ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம்., அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான். அவன் பெயர் நாபால், அவனுக்குப் பயித்தியமும் இருக்கிறது என்று தாவீதிடம் கூறினாள்* (1*சாமு* 25 : 25)
   iii) *நாபால் ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்று அவனுடைய வேலைக்காரன் அவனைக் குறித்து கூறினான்* (1 *சாமு* 25 : 17)

3. ***தாவீது அனுப்பிய வாலிபருக்கு நாபால் கூறிய பதில் என்ன?***
*நாபால் தாவீதின் ஊழியக்காரரிடம், தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களைவிட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததை எடுத்து இன்ன இடத்தார் என்று அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ என்றான்* (1 *சாமு* 25 : 10, 11).

4. ***நாபாலின் வேலைக்காரன் அபிகாயிலிடம் தாவீதையும் அவனுடைய மனுஷரையும் குறித்துச் சொன்ன நற்சாட்சி என்ன?***
*நாபாலின் வேலைக்காரன் அபிகாயிலிடம், "இதோ, நம்முடைய எஜமானுடைய சுக செய்தியை விசாரிக்கத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை அனுப்பினான். அவர்கள் பேரில் அவர் சீறினார், அந்த மனுஷரோ எங்களுக்கு உபகாரிகளாயிருந்தார்கள். நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை*

*வருத்தப்படுத்தினதுமில்லை, நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை, நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள் என்று தாவீதையும் அவனுடைய மனுஷரையும் குறித்து நற்சாட்சி சொன்னான்* (1 *சாமு* 25 : 14 - 16)

5. ***தாவீதை சந்திக்கத் தீவிரித்த அபிகாயில் தன் வேலைக்காரரின் மூலம் தாவீதுக்குக் கொடுத்து அனுப்பியது என்ன?***
   *அபிகாயில் தாவீதுக்கு இருநூறு அப்ப,,களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும் ஐந்து படி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக் குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்து, வேலைக்காரரிடம் கொடுத்து அனுப்பினாள்* (1 *சாமு* 25: 18).

6. ***தாவீது நாபாலுக்கு விரோதமாகத் தான் என்ன செய்யப் போவதாக தன் ஜனங்களிடம் கூறினான்? ஏன்?***
   *தாவீது தன் ஜனங்களை நோக்கி, நாபாலுக்கு வனாந்தரத்தில் இருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன். அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற் போனதில்லை. என்றாலும் நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமை செய்தான். எனவே அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர்விடும் ஒரு நாய் முதலாய் பொழுதுவிடியுமட்டும் நான் உயிரோடே வைத்தால் தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும், அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று கூறினான்* (1 *சாமு*. 25 : 21, 22).

7. ***சத்துருக்கள் தாவீதுக்கு விரோதமாய் எழும்பும் போது தாவீதினுடைய ஆத்துமாவுக்கும் அவனைப் பகைக்கிறவர்களுடைய ஆத்துமாவுக்கும் என்ன சம்பவிக்கும் என்று அபிகாயில் கூறினாள்?***
   *தாவீதைத் துன்பப்படுத்தவும், அவனுடைய பிராணனை வாங்க வகைதேடவும் ஒரு மனுஷன் எழும்பினாலும், தாவீதுடைய ஆத்துமா அவனுடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும் என்றும், அவனுடைய சத்துருக்களின் ஆத்துமாக்களோ கவணில் வைத்து எறிந்தாற்போல எறியப்பட்டுப்போம் என்றும், அபிகாயில் தாவீதிடம் கூறினாள்* (1*சாமு*.25:29).

8. ***தாவீதின் பின்னாட்.கள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று தரிசனமாக அபிகாயில் கூறினாள்?***
   i. *கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்.*
   ii. *என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்த,,களை நடத்துகிறவராமே.*
   iii. *கர்த்தர் உம்மைக் குறித்துச் சொன்ன நன்மையின்படியெல்லாம் இனி என் ஆண்டவனுக்குச் செய்து இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை நேமிப்பார்.*
   iv. *இப்படியாக கர்த்தர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக என்று அபிகாயில் தாவீதிடம் கூறினாள் (1சாமு*. 25:28, 30, 31)

9. ***தாவீதினுடைய ஜீவியத்தில் ஒரு பொல்லாப்பும் காணப்படக் கூடாது என்கிற அங்கலாய்ப்போடு அபிகாயில் அவனிடம் கூறினது என்ன? ஏன்?***
*நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால் அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மன இடறலும் இராது. நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக. ஏனெனில் என் ஆண்டவனாகிய நீர் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே என்று அபிகாயில் தாவீதிடம் கூறினாள்* (1 *சாமு* 25 : 28, 31).

## VIII <u>*விரிவான விடையளி*</u> (6 Marks)

**1.** ***தாவீது பத்து வாலிபரை அழைத்து, நாபாலிடம் என்ன சொல்லச் சொன்னான்?***
*தாவீது பத்து வாலிபரை அழைத்து, நீங்கள் நாபாலிடம் சென்று என் பேரைச் சொல்லி, அவன் சுக செய்தியை விசாரித்து, உமக்கும், உம்முடைய வீட்டுக்கும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானம் உண்டாவதாக என்று அவனை வாழ்த்தி, உம்முடைய மேய்ப்பர்கள் எங்களோடேகூட கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற்போனதும் இல்லை ஆதலால் நல்ல நாளில் வந்த இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களில் தயை கிடைக்க வேண்டும். உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான்* (1 *சாமு* 25 : 5 - 8)

**2.** ***நாபாலையும் அவனுக்குண்டான யாவற்றையும் அழிக்கும்படியாக வந்த தாவீதிடம் அபிகாயில் வேண்டிக் கொண்டது என்ன?***
*அபிகாயில் தாவீதிடம், என் ஆண்டவனே இந்த பாதகம் என்மேல் சுமரட்டும். உம்முடைய அடியாளுடைய வார்த்தைகளை நீர் கேட்கும் பொருட்டாக உம்முடைய அடியாள் உமது செவி கேட்கப் பேசவேண்டும். நீர் நாபால் என்னும் இந்த பேலியாளின் மனுஷனை ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம். அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான். அவன் பெயர் நாபால், அவனுக்குப் பைத்தியமும் இருக்கிறது நீர் இரத்தம் சிந்தவரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இட,,கொடுக்கவில்லை என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டும் உம்முடைய ஜீவனைக்கொண்டும் சொல்கிறேன் என்றாள்* (1*சாமு* 25 : 24 -26).

**3.** ***அபிகாயில் தாவீதிடம் அவனைக் குறித்து ப் புகழ்ந்து கூறியது என்ன?***
*அபிகாயில் தாவீதிடம் கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார். நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக. உம்மைத் துன்பப்படுத்தவும் உம்முடைய பிராணனை வாங்க வகைதேடவும், ஒரு மனுஷன் எழும்பினாலும், என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும். உம்முடைய சத்துருக்களின் ஆத்துமாக்களோ கவணில் வைத்து எறிந்தாற்போல எறியப்பட்டுபோம். கர்த்தர் உம்மைக்குறித்து சொன்ன நன்மையின்படி எல்லாம் இனி என் ஆண்டவனுக்கு செய்து, இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை*

*நியமிப்பார். இப்படியாக என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும் போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக என்றாள்* (1 *சாமு* 25 : 28 -31).

**4.** ***தாவீதை தன் புத்திசாலித்தனமான வார்த்தைகளினாலும் காணிக்கையினாலும் சாந்தப்படுத்திய அபிகாயிலிடம் அவன் கூறியது என்ன?***

*தாவீது அபிகாயிலிடம், உன்னை இன்றையத்தினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக. நான் இரத்தம் சிந்தவராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றையதினம் எனக்குத் தடை பண்ணினபடியினால் நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக. நீ தீவிரமாய் என்னைச் சந்திக்க வராமல் இருந்தாயானால், பொழுது விடியுமட்டும் நாபாலுக்கு ஒரு நாயும் உயிரோடே வைக்கப்படுவதில்லை என்று, உனக்குப் பொல்லாப்பச் செய்ய எனக்கு இடங்கொடாதிருக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக் கொண்டு மெய்யாகவே சொல்லுகிறேன் என்று கூறினான்* (1 *சாமு.* 25 : 32 -34).

**5.** ***தாவீது நாபாலுக்கு விரோதமாய் வந்த நாளில் நடந்தவைகள் ஒன்றையும் அபிகாயில் பொழுதுவிடியுமட்டும் அவனுக்கு அறிவிக்காதது ஏன்? அறிவித்த பின்பு அவனுக்கு சம்பவித்தது என்ன?***

*அபிகாயில் நாபாலிடம் வந்தபோது, இதோ, ராஜவிருந்துக்கு ஒப்பான விருந்து அவன் வீட்டிலே நடந்ததால் அவன் இருதயம் களித்திருந்தது. அவன் மிகவும் வெறித்துமிருந்தான். ஆகையால் பொழுது விடியுமட்டும் சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் , ஒன்றையும் அவனுக்கு அவள் அறிவிக்க வில்லை. நாபாலின் வெறி தெளிந்தபின்பு, அவன் மனைவி இந்த வர்த்தமானங்களை அவனுக்கு அறிவித்தாள். அப்போது, அவன் இருதயம் அவனுக்குள்ளே செத்து, அவன் கல்லைப் போலானான். காத்தர் நாபாலை வாதித்ததினால் ஏறக்குறையப் பத்து நாளுக்கு பின்பு அவன் செத்துப்போனான்* (1 *சாமு* 25 : 36-38).

**IX** ***போதனை :*** (2 Marks)

*நாம் மற்றவர்களுக்கு விரோதமாகக் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது.*

***********

## *பாடம் – 5*

# *சவுலின் மரணம்*

(1 *சாமு.* 28 : 1 – 19 ; *அதி.* 31 ; 2 *சாமு. அதி.* 1 ).

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

"*துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் ; அவர் அவன்மேல் மனதுருகுவார் ; நம்முடைய தேவனிடதிற்கே திரும்பக்கடவன் ; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்*"

"*என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்*" **(*ஏசாயா* 55 : 7, 8).**

**II <u>பொருத்துக</u> :** (1 Mark)

1. சூநேம் _ பெலிஸ்தரின் பாளயம் (1 சாமு. 28 : 4).
2. சவுல் _ கர்த்தருடைய சொற் கேளாதவன் (1 சாமு. 28 : 18).
3. சவுல் _ கில்போவா மலை (1 சாமு. 31 : 8).
4. பெத்சான் _ அலங்கம் (1 சாமு. 31 : 10).
5. யாபேஸ் பட்டணம் _ கீலேயாத் தேசம் (1 சாமு. 31 : 11).

**III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u> :** ( 1 Mark)

1. --------------------- தாவீதை நோக்கி உன்னை எந்நாளும் எனக்கு மெயக்காவலனாக வைப்பேன் என்றான்.
2. சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், ---------------------- தேசத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டான்.
3. பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது --------------------- இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது.
4. சவுல் கார்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்கு ---------------, ------------------- தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை.
5. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி ----------------- மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள்.
6. பெலிஸ்தர் சவுலின் உடலை ------------------- அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள்.
7. கர்த்தர் கட்டளையிட்டிருந்தும், சவுல் ------------------ முழுவதும் அழிக்காதபடியால், அவன் ஒரு ------------------ கையினாலே மரிக்க வேண்டியதாயிற்று.
8. சவுலின் எலும்பையும், அவனுடைய குமாரரின் எலும்புகளையும் எடுத்து ------------------ தோப்பிலே அடக்கம்பண்ணினார்கள்.
9. சவுல் மரித்தபின்பு தாவீது அமலேக்கியரை முறியடித்து ----------------- திரும்பி வந்தான்.
10. சவுலைக் கொன்றுபோட்ட அமலேக்கியன் சவுலின் தலையின் மேலிருந்த -------------------- புயத்தில் இருந்த --------------- தாவீதினிடத்திற்குக் கொண்டு வந்தான்.

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. | *ஆகீஸ் ராஜா* | (1 *சாமு.* 28 : 2) |
| 2. | *குறி சொல்லுகிறவர்களையும்* | (1 *சாமு.* 28 : 3) |
| 3. | *சவுலின்* | (1 *சாமு.* 28 : 5) |
| 4. | *சொப்பனங்களினாலாவது ஊரீமினாலாவது* | (1 *சாமு.* 28 : 6) |
| 5. | *கில்போவா* | (1 *சாமு.* 31 : 1) |
| 6. | *பெத்சானின்* | (1 *சாமு.* 31 : 10) |
| 7. | *அமலேக்கியரை, அமலேக்கியனின்* | (*போதனை*) |
| 8. | *யாபேசிலிருக்கிற* | (1 *சாமு.* 31 : 13) |
| 9. | *சிக்லாகுக்குத்* | (2 *சாமு.* 1 : 1) |
| 10. | *முடியையும், அஸ்தகடகத்தையும்* | (2 *சாமு.* 1 : 10) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது* : ( 1 Mark)

1. ***இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண தாவீதைத் தன்னோடுகூட அழைத்த ராஜா யார்?***
   a) *ஆகாக்* b) *ஆகீஸ்* c) *பாலாக்* d)*ஈராம்*

2. ***அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் தேசத்திலிருந்து துரத்திவிட்டவன் யார்?***
   a) *தாவீது* b) *சவுல்* c) *ஆகீஸ்* d)*சாமுவேல்*

3. ***சவுல் மிகவும் பயந்து கர்த்தரிடத்தில் விசாரித்தபோது என்ன நடந்தது?***
   a) *மறு உத்தரவு அருளவில்லை* b) *தரிசனம் தந்தார்*
   c) *சொப்பனம் கண்டான்* d) *தீர்க்கதரிசனங்கள் மூலம் பேசினார்*

4. ***சவுல் வேஷம்மாறி எங்கேபோனான்?***
   a) *எந்தோருக்கு* b) *கில்போவாவிற்கு*
   c) *ராமாவிலிருக்கிற சாமுவேலிடத்திற்கு* d)*காத் ராஜாவினிடத்திற்கு*

5. ***சவுல் எந்த மலையில் மரித்துப்போனான்?***
   a) *சீனாய் மலை* b) *மோரியா மலை*
   c) *கில்போவா மலை* d) *அரராத் மலை*

6. ***சவுலைக்கொன்றது யார்?***
   a) *தாவீது* b) *பொல்லாத ஆவி* c) *பெலிஸ்தர்* d)*அமலேக்கியன்*

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | b. ( 1 *சாமு.* 28 : 1) | 4. | a. ( 1 *சாமு.* 28 : 7, 8) |
| 2. | b. ( 1 *சாமு.* 28 : 3) | 5. | c. ( 1 *சாமு.* 31 : 8) |
| 3. | a. ( 1 *சாமு.* 28 : 6) | 6. | d. ( 2 *சாமு.* 1 : 8, 10) |

**V <u>*யார் யாரிடம் எப்போது கூறியது*</u> :** ( 3 Marks)

1. **"*நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்துக்கு வரவேண்டும்*" (1 *சாமு*. 28 : 1).**

<u>*யார்*</u> : *ஆகீஸ் ராஜா*

<u>*யாரிடம்*</u> : *தாவீதிடம்*

<u>*எப்போது*</u> : *சவுலுக்குப் பயந்து தாவீது பெலிஸ்தனாகிய ஆகீஸ் ராஜாவிடம் அடைக்கலம் புகுந்திருந்தான். அந்நாட்களிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண, தங்கள் சேனைகளைப் போருக்கு கூட்டினார்கள். அப்பொழுது ஆகீஸ் ராஜா தாவீதை நோக்கி இவ்வாறு கூறினான்.*

2. **"*உன்னை எந்நாளும் எனக்கு மெய்க்காவலனாக வைப்பேன்*"(1 *சாமு*. 28 : 2).**

<u>*யார்*</u> : *ஆகீஸ் ராஜா*

<u>*யாரிடம்*</u> : *தாவீதிடம்*

<u>*எப்போது*</u> : *சவுலுக்குப் பயந்து தாவீது பெலிஸ்தனாகிய ஆகீஸ் ராஜாவிடம் அடைக்கலம் புகுந்திருந்தான். அந்நாட்களிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண, தங்கள் சேனைகளைப் போருக்குக் கூட்டினார்கள். ஆகீஸ் ராஜா தாவீதையும் யுத்தத்திற்கு வரவேண்டும் என்றான். தாவீது அதற்குச் சம்மதித்தான். அப்போது ஆகீஸ் ராஜா தாவீதை நோக்கி இவ்வாறு கூறினான்.*

3. **"*அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக்குத்திப்போடு*" (1 *சாமு*. 31 : 4).**

<u>*யார்*</u> : *சவுல்*

<u>*யாரிடம்*</u> : *தன் ஆயுததாரியிடம்*

<u>*எப்போது*</u> : *பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது. வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள். அப்போது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு தன் ஆயுததாரியிடம் இவ்வாறு கூறினான்.*

4. **"*என் பிராணன் முழுதும் இன்னும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது*" (II *சாமு*. 1 : 9).**

<u>*யார்*</u> : *சவுல்*

<u>*யாரிடம்*</u> : *அமலேக்கியனான வாலிபனிடம்*

<u>*எப்போது*</u> : *தாவீது அமலேக்கியரை முறிய அடித்து சிக்லாகுக்குத் திரும்பிவந்து இரண்டு நாளான பிறகு மூன்றாம் நாளிலே ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு தாவீதினிடத்தில் வந்து, சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனார்கள் என்றான். அதற்கு தாவீது, சவுலும் யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படித் தெரியும்*

*என்று அந்த வாலிபனிடம் கேட்டான். அந்த அமலேக்கியனான வாலிபன் தாவீதிடம், நான் தற்செயலாய் கில்போவா மலைக்குப் போனேன். அப்பொழுது சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார். இரதங்களும், குதிரைவீரரும் அவரைத் தொடர்ந்து நெருங்கினார்கள். அப்பொழுது சவுல் என்னை நோக்கி, "நீ என்னண்டையில் கிட்டவந்து நின்று, என்னைக்கொன்று போடு ; என் பிராணன் முழுதும் இன்னும் போகாததினால், எனக்கு வேதனையாயிருக்கிறது என்றார்" என்றான்.*

**5. "*கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக்கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன*" (I1 *சாமு.* 1 : 14).**

<u>*யார்*</u> : *தாவீது*

<u>*யாரிடம்*</u> : *சவுலின் மரணத்தைக் குறித்து அறிவித்த அமலேக்கிய வாலிபனிடம்*

<u>*எப்போது*</u> : *தாவீது சிக்லாகில் இருக்கும்போது , ஒரு மனுஷன் சவுலின் மரணத்தைக் குறித்து அறிவித்தான். அப்பொழுது தாவீது அவர்கள் மடிந்துபோனது உனக்கு எப்படித் தெரியும் என்று அந்த வாலிபனிடம் கேட்டபோது, அந்த வாலிபன் நான் தற்செயலாய் கில்போவா மலைக்குப் போனேன். அப்பொழுது இதோ சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார். இரதங்களும், குதிரை வீரரும் அவரைத் தொடர்ந்து நெருங்கினார்கள் . அவர் திரும்பிப்பார்த்து என்னைக்கண்டு கூப்பிட்டு " நீ யார்?" என்றார். அதற்கு, 'நான் அமலேக்கியன்' என்றேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'நீ என்னண்டையில் கிட்டவந்து நின்று என்னைக்கொன்று போடு ; என் பிராணன் முழுதும் இன்னும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது என்றார். அவர் பிழைக்க மாட்டார் என்று நிச்சயித்து அவரைக்கொன்றுபோட்டேன்' என்று சவுலின் மரணத்தைக்குறித்து அமலேக்கிய வாலிபன் தாவீதிடம் கூறினான். அப்பொழுது தாவீது அந்த அமலேக்கிய வாலிபனிடம் இவ்விதமாய்க் கூறினார்.*

**VI** <u>*ஓரிரு வாக்கியங்களில் விடையளி*</u> **:** ( 2 Marks)

1. ***உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர் என்று தாவீது ஆகீஸிடம் கூறியதற்கு ஆகீஸின் மறுமொழி என்ன?***
*ஆகீஸ் தாவீதிடம் 'இதற்காக உன்னை எந்நாளும் எனக்கு மெய்க்காவலனாக வைப்பேன்' என்று மறுமொழி கூறினான்* (1*சாமு*.28 : 2).

2. ***சாமுவேல் மரித்தபின், சவுல் யாரை தேசத்திலிராதபடிக்குத் துரத்திவிட்டான்?***
*சாமுவேல் மரித்தபின் சவுல் அஞ்சனம்பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் தேசத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டான்* (1 *சாமு*. 28 : 3).

3. ***சவுலின் ராஜ்யபாரத்தின் இறுதியில் பெலிஸ்தரும், இஸ்ரவேலரும் எந்தெந்த இடத்தில் யுத்தத்திற்காகப் பாளயமிறங்கினார்கள்?***
*பெலிஸ்தர் சூநேமிலும், இஸ்ரவேலர் கில்போவாவிலும் பாளயமிறங்கினார்கள்* (1 *சாமு*. 28 : 4).

4. ***பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது சவுலின் இருதயம் எப்படி இருந்தது?***
*சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டு பயந்தான் ; அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது* (1 *சாமு*. 28 : 5).

5. ***பெலிஸ்தரின் பாளயத்தைக்கண்டு பயந்த சவுல் கர்த்தரிடம் விசாரித்தபோது சம்பவித்தது என்ன?***
*சவுல் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது , கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை* (1 *சாமு*. 28 : 6).

6. ***பெலிஸ்தர் சவுலையும் அவனுடைய குமாரரையும் நெருங்கி தொடர்ந்து என்ன செய்தார்கள்?***
*பெலிஸ்தர் சவுலின் குமாரனாகிய யோனத்தானையும், அபினதாபையும் மல்கிசூகாவையும் நெருங்கித் தொடர்ந்து, வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாக யுத்தம் பலத்தபோது வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கி அவனை மிகவும் காயப்படுத்தினார்கள்* (1 *சாமு*. 31 : 2, 3).

7. ***சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டபோது தன் ஆயுததாரியிடம் கூறியது என்ன?***
*சவுல் தன் ஆயுததாரியை நோக்கி, அந்த விருத்தசேனமில்லாத பெலிஸ்தர்கள் வந்து, என்னைக்குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்று கூறினான்* (1 *சாமு*. 31 : 4).

8. ***நீ உன் பட்டயத்தை உருவி என்னைக் குத்திப்போடு என்று சவுல் தன் ஆயுததாரியிடம் கூறியபோது அவன் கூறிய மறுமொழி என்ன? அப்பொழுது சவுல் என்ன செய்தான்?***
*சவுலுடைய ஆயுததாரி மிகவும் பயந்து அப்படிச் செய்யமாட்டேன் என்றான். அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்* (1 *சாமு*. 31 : 4).

9. ***சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது என்ன செய்தான்?***
*சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து அவனோடேகூட செத்துப் போனான்* (1 *சாமு*. 31 : 5).

10. ***சவுலும் யோனத்தானும் மரித்துப்போனதை கேள்விப்பட்டபோது தாவீது என்ன செய்தான்?***
*தாவீதும் அவன் மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள். பின்பு சவுலின்பேரிலும் அவன் குமாரனாகிய யோனத்தான்பேரிலும் புலம்பல் பாடினான்* ( 2 *சாமு*. 1 : 11, 12, 17).

**VII** *சுருக்கமான விடையளி :* ( 4 Marks)

1. ***யுத்தத்தில் வெட்டுண்டவர்களை உரிந்துக்கொள்ள பெலிஸ்தர் மறுநாள் வந்தபோது,அவர்கள் கண்டது என்ன? அவர்கள் செய்தது என்ன?***

*பெலிஸ்தர் வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ள மறுநாள் வந்தபோது சவுலும் அவன் மூன்று குமாரரும் கில்போவா மலையில் மரித்தவர்களாய் விழுந்துகிடக்கிறதைக் கண்டார்கள். அப்பொழுது அவர்கள் சவுலின் தலையை வெட்டி, அவன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களின் கோவில்களிலும் ஜனங்களுக்குள்ளும் செய்தியைப் பிரசித்தப்படுத்தும்படி, அவைகளை பெலிஸ்தர் தேசத்திலே சுற்றிலும் அனுப்பி அவன் ஆயுதங்களை அஸ்தரோத் தேவனுடைய கோவிலிலே வைத்து, அவன் உடலை பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள்* (1 *சாமு.* 31 : 8 – 10).

2. ***பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததை கீலேயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்தார் கேட்டபோது என்ன செய்தார்கள்?***
*யாபேசின் பலசாலிகள் எல்லாரும் எழுந்து இராமுழுதும் நடந்துபோய், பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து யாபேசுக்குக் கொண்டு வந்து, அவைளை அங்கே தகனம்பண்ணி, அவர்களுடைய எலும்புகளை எடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே அடக்கம்பண்ணி ஏழு நாள் உபவாசம்பண்ணினார்கள்* (1 *சாமு.* 31 : 12, 13).

3. ***தாவீதுக்கு சவுலின் மரணத்தை அறிவித்தது யார்? அவனுக்கு தாவீது செய்தது என்ன?***
*சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு வந்த அமலேக்கியனான ஒரு வாலிபன் சவுலின் மரணத்தை தாவீதுக்கு அறிவித்தான். அப்பொழுது தாவீது, 'கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன?' என்று சொல்லி, ஒரு வாலிபனை கூப்பிட்டு, 'அவன்மேல் விழுந்து அவனை வெட்டு' என்றான். அவன் அந்த வாலிபனை வெட்டினான். அவன் செத்தான்* (2 *சாமு.*1 : 13– 15).

4. ***சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படித்தெரியும் என்று சவுலின் மரணத்தை அறிவித்த வாலிபனிடம் தாவீது கேட்டபோது, அந்த வாலிபன் கூறியது என்ன?***
*சவுலின் மரணத்தை தாவீதுக்கு அறிவித்த வாலிபன், "நான் தற்செயலாய் கில்போவா மலைக்குப் போனேன், சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துக்கொண்டிருந்தார். அவர் என்னைப்பார்த்து, 'நீ யார்?' என்றார். அதற்கு நான் அமலேக்கியன் என்று சொன்னேன். அவர் 'நீ என் கிட்டே வந்து என்னைக் கொன்றுபோடு. எனக்கு வேதனையாயிருக்கிறது' என்றார். அவர் நிச்சயமாயப் பிழைக்கமாட்டார் என்பதால் அவரைக் கொன்று போட்டேன். பின்பு அவர் தலையின்மேல் இருந்த முடியையும் (கிரீடத்தையும்) அவர்புயத்திலிருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு இங்கே என் ஆண்டவனிடத்திற்குக் கொண்டு வந்தேன் என்றான்* ( 2 *சாமு.* 1 : 6-10).

**VIII** **<u>போதனை</u> :** ( 2 Marks)

*ஒருவரும் தன் பாவங்களில் அழிந்துபோவதைத் தேவன் விரும்புவதில்லை. ஓவ்வொருவரும் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி தமக்கு முன்பாக ஜீவிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

******************

## *பாடம் 6*

# *தாவீது ராஜாவின் ஆளுகை. (பகுதி –I)*

(2 *சாமு* 2 :1 - 4 ;  5 : 1 – 10;  6 ;  (1 *நாளா* 28 :  2, 3, 6 ;  29 : 2 – 9).

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

*“மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.*

*என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது ; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?”*

**(*சங்கீதம்* 42 : 1, 2).**

**II** *பொருத்துக*: (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. *அகினோவாம்* | – | *தாவீதின் மனைவி* | (2 *சாமு*. 2 : 2) |
| 2. *அபிகாயில்* | – | *தாவீதின் மனைவி* | (2 *சாமு*. 2 : 2) |
| 3. *சீயோன் கோட்டை* | – | *தாவீதின் நகரம்* | (2 *சாமு*. 5 : 7) |
| 4. *சீயோன் கோட்டை* | – | *சாலகம்* | (2 *சாமு*. 5 : 8) |
| 5. *பாலையூதா* | – | *தேவனுடைய பெட்டி* | (2 *சாமு*. 6 : 2) |
| 6. *அபினதாபின் வீடு* | – | *கிபியா* | (2 *சாமு*. 6 : 3) |
| 7. *அகியோ* | – | *அபினதாபின் குமாரன்* | (2 *சாமு*. 6 : 3) |
| 8. *ஊசா* | – | *அபினதாபின் குமாரன்* | (2 *சாமு*. 6 : 3) |
| 9. *ஓபேத் ஏதோம்* | – | *கித்தியன்* | (2 *சாமு*. 6 : 11) |
| 10. *ஓபேத் ஏதோம்* | – | *கர்த்தருடைய பெட்டி* | (2 *சாமு*. 6 : 11) |
| 11. *மீகாள்* | – | *சவுலின் குமாரத்தி* | (2 *சாமு*. 6 : 16) |
| 12. *சாலொமோன்* | – | *தாவீதின் குமாரன* | (1 *நாளா*.28 : 6) |

**III** ***கோடிட்ட இடங்களை நிரப்புக*:** (1 Mark)

1. *சவுல் மரணமடைந்த பின்னர் யூதாவின் மனுஷர் தாவீதை ___________________ என்னும் இடத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.*
2. *எப்ரோனிலே இஸ்ரவேலின் மூப்பர் தாவீதை ___________________ மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்.*
3. *தாவீது ___________________ கோட்டையைப் பிடித்தான்.*
4. *___________________நாளுக்குநாள் விருத்தியடைந்தான், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருநதார்.*
5. *சவுலின் குமாரத்தியாகிய___________________ தாவீதை தன் இருதயத்தில் அவமதித்ததால் அவளுக்கு மரணமடையும் நாள் மட்டும் ___________________இல்லாதிருந்தது.*
6. *தேவனுடைய ஆலயம் கட்ட ஜனங்கள் மனப்பூர்வமாய் கர்த்தருக்கு ___________________கொடுத்தார்கள். அதனால் ___________________ ராஜா மிகவும் சந்தோஷப்பட்டான்.*

| விடைகள்: | | |
|---|---|---|
| 1. | *எப்ரோன்* | (2 *சாமு.* 2 : 3,4) |
| 2. | *இஸ்ரவேலின்* | (2 *சாமு.* 5 : 3) |
| 3. | *சீயோன்* | (2 *சாமு.* 5 : 7) |
| 4. | *தாவீது* | (2 *சாமு.* 5 : 10) |
| 5. | *மீகாள், பிள்ளை* | (2 *சாமு.* 6 : 23) |
| 6. | *காணிக்கை, தாவீது* | (1 *நாளா.*29 : 9) |

**IV** ***சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது:*** (1 Marks)

1. ***சவுலின் மரணத்திற்குப் பின்னர் ராஜாவானது யார் ?***
   a) *அப்சலோம்* b) *தாவீது* c) *அதோனியா* d) *யோனத்தான்*

2. ***தாவீது ராஜாவாக எத்தனை முறை அபிஷேகம் பண்ணப்பட்டான்?***
   a) *ஒரு முறை* b) *இரண்டு முறை* c) *மூன்று முறை* d) *நான்கு முறை*

3. ***தாவீது யூதா வம்சத்தார் மேலும் இஸ்ரவேல் வம்சத்தார் மேலும் ராஜாவாக எங்கு அபிஷேகம்பண்ணப்பட்டான்?***
   a) *எப்ரோனில்* b) *எருசலேமில்* c) *சீயோனில்* d) *பெத்லெகேமில்*

4. ***தாவீது எந்த வயதில் ராஜாவானான்?***
   a) *இருபது* b) *இருபத்தைந்து* c) *முப்பது* d) *முப்பத்தைந்து*

5. ***தாவீது எப்ரோனிலே யூதாவின்மேல் எத்தனை வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்?***
   a) *7வருஷம் 6மாதம்* b) *7 வருஷம் 9மாதம்*
   c) *9 வருஷம் 6மாதம்* d) *33 வருஷம்*

6. ***தாவீது எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின் மேலும், யூதாவின் மேலும் எத்தனை வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்?***
   a) *33 வருஷம்* b) *36 வருஷம்* c) *38 வருஷம்* d) *40 வருஷம்*

7. ***தாவீது எந்தக் கோட்டையைப் பிடித்தான்?***
   a) *எரிகோ கோட்டை* b) *சீயோன் கோட்டை*
   c) *தீரு கோட்டை* d) *சமாரியா கோட்டை*

| விடைகள் : | |
|---|---|
| 1. b. (2 *சாமு.* 2 : 4) | 5. a. (2 *சாமு.* 5 : 5) |
| 2. b. (2 *சாமு.* 2 : 4 ; 5 : 3) | 6. a. (2 *சாமு.* 5 : 5) |
| 3. a. (2 *சாமு.* 5 : 3) | 7. b. (2 *சாமு.* 5 : 7) |
| 4. c. (2 *சாமு.* 5 : 4) | |

**V** *<u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>*: (3 Marks)

1.**“ *நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா?* ” (II *சாமு.* 2 : 1).**

*<u>யார்</u>* : *தாவீது*

*<u>யாரிடம்</u>* : *கர்த்தரிடம்*

*<u>எப்போது</u>* : *தாவீது அமலேக்கியரை முறியடித்து சிக்லாகுக்குத் திரும்பி வந்து அங்கே தங்கியிருந்தான். அப்போது சவுல் மரித்ததைத் தாவீது கேள்விப்பட்டு கர்த்தரை நோக்கி இவ்வாறு கேட்டான்.*

2.**“ *நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்* ” (II *சாமு.* 5 : 1).**

***<u>யார்</u>*** : *இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம்*

***<u>யாரிடம்</u>*** : *எப்ரோனிலிருக்கிற தாவீதிடம்*

***<u>எப்போது</u>*** : *சவுல் மரித்தபின் , கர்த்தருடைய ஆலோசனையின்படி தாவீதும், அவன் மனுஷரும் எப்ரோனிலே வந்து குடியேறியபோது யூதாவின் மனுஷர் அவனைத் தங்கள்மேல், ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். அங்கே அவன் ஏழு வருடம் 6 மாதம் ராஜ்யபாரம்பண்ணினான். அதன்பின், சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் கொல்லப்பட்ட பின்பு, இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதை ராஜாவாக இருக்கும்படி அழைக்கும்போது அவனிடம் இவ்வாறு கூறினார்கள்.*

3. **“*நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை ; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்* ” (2 *சாமு.* 5 :6).**

***<u>யார்</u>*** : *எபூசியர்*

***<u>யாரிடம்</u>*** : *தாவீதிடம்*

***<u>எப்போது</u>*** : *தாவீது எபூசியர்மேல் யுத்தம் பண்ணி சீயோன் கோட்டையைப் பிடிக்கும்படியாக எருசலேமுக்குப் போனான். ஆப்பொழுது எபூசியர் தாவீதிடம் “ நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை ; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள் ” என்று கூறினார்கள்.*

4. **“ *இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்*” (2 *சாமு.* 6 : 22).**

***<u>யார்</u>*** : *தாவீது*

***<u>யாரிடம்</u>*** : *சவுலின் குமாரத்தியாகிய மீகாளிடம்*

***<u>எப்போது</u>*** : *தாவீது, தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து எருசலேமுக்குக் கொண்டு வரும்போது, சந்தோஷத்தால் கர்த்தருக்கு முன்பாக குதித்து நடனம் பண்ணினான். அதை அவன் மனைவியாகிய சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து தாவீதைத் தன் இருதயத்திலே அவமதித்தாள். தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பினபோது, மீகாள், தாவீதுக்கு எதிர்கொண்டு வந்து அற்ப மனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுவது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள். அப்பொழுது தாவீது மீகாளிடம் இவ்விதமாகக் கூறினான்.*

5. a) “ *நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்*” **(1நாளா. 28 : 3).**
**b) “ *நீ யுத்த மனுஷனாயிருந்து இரத்தத்தைச் சிந்தினாய்*” (1நாளா. 28 : 3).**

*யார்* : *கர்த்தர்*

*யாரிடம்* : *தாவீதிடம்*

*எப்போது* : *ராஜாவாகிய தாவீது தன் ஜனத்தின் தலைவர்களை எருசலேமிலே கூடிவரச்செய்து, அவர்களிடம், கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியும், நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும், தேவன் என்னை அனுமதிக்கவில்லை என்று அவர்களிடம் கூறும்போது , கர்த்தர் தன்னிடம் இந்த வார்த்தைகளைச் சொன்னதாக ஜனங்களிடம் கூறினான்.*

**VI *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* :** (2 Marks)

1. ***சவுலின் மரணத்திற்குப் பின் தாவீது முதலாவதாக எங்கு யாரால் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டான்?***
*யூதாவின் மனுஷர் முதலாவதாக தாவீதை எப்ரோனிலே வைத்து , யூதா வம்சத்தாரின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் ( 2 சாமு.* 2 : 4).

2. ***தாவீது இரண்டாவதாக எங்கு யாரால் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டான்?***
*இரண்டாவதாக இஸ்ரவேலின் மூப்பர் தாவீதை எப்ரோனிலே வைத்து இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் ( 2 சாமு.* 5 : 3).

3. ***தாவீது ராஜாவாகும்போது அவன் வயது என்ன? அவன் எத்தனை வருஷம் ராஜ்பாரம் பண்ணினான்?***
*தாவீது ராஜாவாகும்போது முப்பது வயதாயிருந்தான். அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் ( 2 சாமு.* 5 : 4).

4. ***தாவீது எப்ரோனிலும், எருசலேமிலும் முறையே எத்தனை ஆண்டுகள் அரசாண்டான்?***
*தாவீது எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் 6 மாதமும் , எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் , யூதாவின்மேலும் 33 வருஷமும் ராஜயபாரம் பண்ணினான் ( 2 சாமு.* 5 : 5).

5. ***தாவீது நாளுக்கு நாள் விருத்தியடையக் காரணம் என்ன?***
*சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடேகூட இருந்தபடியினால் அவன் நாளுக்கு நாள் விருத்தியடைந்தான் ( 2 சாமு.* 5 : 10).

6. ***பாலையூதாவிலிருக்கிற தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவரும்படியாக எத்தனைபேரைத் தாவீது தன்னோடுகூட கூட்டிக்கொண்டுபோனான்? தேவனுடைய பெட்டியை எதின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தான்?***
*இஸ்ரவேலில் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம் பேரைத் தாவீது தன்னோடேகூட கூட்டிக்கொண்டுபோனான். தேவனுடைய பெட்டியை புது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தான் ( 2 சாமு.* 6 : 1 – 3).

7. ***தேவனுடைய பெட்டி பாலையூதாவில் யாருடைய வீட்டில் இருந்தது ? பெட்டி ஏற்றப்பட்ட இரதத்தை நடத்தி வந்தவர்கள் யார் ?***
*தேவனுடைய பெட்டி பாலையூதாவில் அபினதாபின் வீட்டில் இருந்தது. அபினதாபின் குமாரராகிய ஊசாவும், அகியோவும் பெட்டி ஏற்றப்பட்ட இரதத்தை ஏற்றி வந்தவர்களாவர் ( 2 சாமு.* 6 : 3).

8. ***ஊசா மரித்த இடத்திற்கு தாவீது என்ன பேரிட்டான்?***
*கர்த்தர் ஊசாவை அடித்து அவன் மரித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு பேரேஸ் ஊசா என்று பேரிட்டான் ( 2 சாமு.* 6 : 8).

9. ***தேவனுடைய பெட்டியை தாவீது ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்திற்கு ஏன் கொண்டு வந்தான்?***
*தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத்ஏதோமையும், அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது ராஜாவிற்கு அறிவிக்கப்பட்டது. ஆகையால், தாவீது ராஜா தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்திற்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான். ( 2 சாமு.* 6 : 12).

10. ***கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கும்போது பலகணிவழியாய்த் தாவீதைக் கண்டது யார்? அப்போது அவன் அவளைக் குறித்து எண்ணியது என்ன?***
*கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கும்போது , சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்த் தாவீதைக் கண்டாள் . அவன் கர்த்தருக்கு முன்பாகக் குதித்து நடனம்பண்ணுகிறதைக் கண்டு தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள் ( 2 சாமு.* 6 : 16).

11. ***உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஆடிப்பாடிய தாவீதை இகழ்ந்த மீகாளுக்குக் கிடைத்த தண்டனை என்ன?***
*கர்த்தருடைய சமுகத்தில் ஆடிப்பாடிய தாவீதை இகழ்ந்த மீகாளுக்குக் மரணமடையும் நாள் மட்டும் பிள்ளையில்லாதிருந்தது ( 2 சாமு.* 6 : 23).

12. ***தேவனுடைய ஆலயத்தைக் கட்டத் தேவையான பொருட்களை சவதரித்து வைத்தது யார்? தேவனுடைய ஆலயத்தையும் அதின் பிராகாரங்களையும் கட்டியது யார்?***
*தாவீது தேவனுடைய ஆலயத்தைக் கட்டத் தேவையான பொருட்களை சவதரித்து வைத்தான் ( 1 நாளா. 29 : 2). சாலொமோன் தேவனுடைய ஆலயத்தையும் அதின் பிராகாரங்களையும் கட்டினான் ( 1 நாளா.* 28 : 6).

13. ***தனக்குச் சொந்தமான பொன்னையும், வெள்ளியையும் தேவனுடைய ஆலயத்திற்கென்று கொடுத்தது யார்? ஏன்?***
*தேவனுடைய ஆலயத்தின்மேல் வைத்திருந்த வாஞ்சையினால் , தனக்குச் சொந்தமான பொன்னையும், வெள்ளியையும் தேவனுடைய ஆலயத்திற்கென்று தாவீதுக் கொடுத்தான் ( 1 நாளா.* 29 : 3).

14. ***இஸ்ரவேலின் கோத்திரங்களின் பிரபுக்களும் அதிபதிகளும் தேவனுடைய ஆலயத்து வேலைக்குக் கொடுத்த காணிக்கைகளைக் கண்டு சந்தோஷப்பட்டது யார்? மிகவும் சந்தோஷப்பட்டது யார்? ஏன்?***
*இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும் அதிபதிகளும் தேவனுடைய ஆலயத்து வேலைக்காக காணிக்கைகளை உத்தம இருதயத்தோடே, உற்சாகமாய், மனப்பூர்வமாகக் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள். தாவீது ராஜா மிகவும் சந்தோஷப்பட்டான்* ( 1 *நாளா.* 29 : 9).

**VII** ***சுருக்கமான விடையளி :*** (4 Marks)

1. ***சவுலின் மரணத்திற்குப் பின் தாவீது கர்த்தரிடம் விசாரித்தது என்ன? அதற்குக் கர்த்தர் கூறிய பதில் என்ன்?***
*தாவீது கர்த்தரை நோக்கி, " நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான்". அதற்குக் கர்த்தர் 'போ' என்றார். எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, கர்த்தர் ' எப்ரோனுக்குப் போ' என்றார்* ( 2 *சாமு.* 2 : 1).

2. ***சவுலின் மரணத்திற்குப்பின் தாவீது முதலாவதாக எங்கு, யாரால் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டான்? இரண்டாவதாக எங்கு, யாரால் அபிஷேகம்பண்ணப்பட்டான்?***
*யூதாவின் மனுஷர் முதலாவதாக தாவீதை எப்ரோனிலே வைத்து , யூதா வம்சத்தாரின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் ( 2 சாமு.* 2 : 4). *இரண்டாவதாக இஸ்ரவேலின் மூப்பர் தாவீதை எப்ரோனிலே வைத்து இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் ( 2 சாமு.* 5 : 3).

3. ***எப்ரோனில் யூதா மனுஷர்மேல் ராஜாவாயிருந்த தாவீதிடம் இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் வேண்டிக்கொண்டது என்ன?***
*இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதினிடத்தில் வந்து : இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள். சவுல் எங்கள் மேல் ராஜாவாயிருக்கும்போது இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும், நடத்திக்கொண்டு வந்தவரும் நீரே ; கர்ததர், என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள் ( 2 சாமு.* 5 : 1, 2).

4. ***தாவீது எவ்வாறு சீயோன் கோட்டையைப் பிடித்தான்?***
*தேசத்திலே குடியிருக்கிற எபூசியர்மேல் யுத்தம்பண்ண தாவீது ராஜா தன் மனுஷரோடே எருசலேமுக்குப் போனபோது, அவர்கள் இதிலே பிரவேசிக்க தாவீதினால் கூடாது என்று எண்ணி, தாவீதை நோக்கி, "நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை. குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்" என்றார்கள். ஆனாலும், தாவீதும், அவன் மனுஷரும் சாலகத்தின் வழியாய் ஏறி சீயோன் கோட்டையைப் பிடித்தார்கள். அது தாவீதின் நகரமாயிற்று ( 2 சாமு.* 5 : 6 -8).

5. ***தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவரும்பொழுது ஊசா ஏன்மரித்தான்? விவரி.***
*இஸ்ரவேலர் தேவனுடைய பெட்டியை நாகோனின் களம் இருக்கிற இடத்திற்கு கொண்டுவந்தபோது மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தது.*

*உடனே ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். அவனுடைய துணிவினிமித்தம், தேவன் அவன்மேல் கோபமுண்டவராகி, அவனை அடித்தார். உடனே அவன் தேவனுடையபெட்டியண்டையில் செத்தான் ( 2 சாமு.* 6 : 6,7).

6. ***ஊசா மரித்த பிற்பாடு தாவீது கர்த்தருடைய பெட்டியை என்ன செய்தான்?***
*ஊசா மரித்த பிறகு தாவீது கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி, அதைத்தன்னிடத்தில் தாவீதின் நகரத்தில் கொண்டுவர மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான் ( 2 சாமு.* 6 : 9, 10).

7. ***தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீடடிலிருந்து எருசலேமுக்கு கொண்டுவரும்போது என்ன செய்தான்?***
*கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள் ஆறு தப்படி நடந்தபோது, மாடுகளையும், கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டான். தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு தன் முழு பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக குதித்து நடனம்பண்ணினான். அப்படியே தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள் ( 2 சாமு.* 6 :13 - 15).

**VIII** ***<u>விரிவான விரைடயளி</u>* :** (6 Marks)

1. ***தேவனுடைய ஆலயத்தின் வேலைக்காக தங்கள் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்று தாவீது கேட்டபோது முன் வந்தவர்கள் யார்? அவர்கள் கர்த்தருக்கு காணிக்கையாக கொடுத்தவைகள் யாவை?***
*தாவீது கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்று கேட்டபோது வம்சங்களின் பிரபுக்களும், ஆயிரம் பேருக்கு அதிபதிகளும், நூறு பேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் முன் வந்தார்கள்.*
*அவர்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக் காசையும் பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும் இலட்சம் தாலந்து இரும்பையும் மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள். மேலும், யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள் ( 1 நாளா.* 29 : 5 - 8).

**IX** ***<u>போதனை</u>* :** (2 Marks)

*தாவீது தேவனுடைய இருதயத்திற்கேற்ற மனுஷனாயிருந்தான். நாமுங்கூட அப்படியே இருக்கவேண்டும். நம் வாஞ்சையெல்லாம் தேவன்மேலும், அவருடைய ஊழியத்தின்மேலும் இருக்கவேண்டும்.*

*************

<u>பாடம் 7</u>

# தாவீது ராஜாவின் ஆளுகை. (பகுதி –II)

(2 சாமு 15 :13 - 16 ;  19 :  10,  14,  15 ; 24 )

(1 இராஜா 2 :10, 11 ; 1 நாளா   21 : 1)

**I** <u>**மனப்பாட வசனம்**</u> : (2 Marks)

"ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்.

சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரணபலிகளும் உமக்குப் பிரியமாதனல்ல என்றீர்.

அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" **(எபிரெயர் 10 : 5 – 7).**

"அப்படியிருக்க , சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"

**(ரோமர் 12 : 1, 2).**

**II** <u>பொருத்துக</u> (1 Mark)

1. யோவாப் - சேனாபதி (2 சாமு 24  : 2)
2. காத் - ஆறு (2 சாமு 24 : 5)
3. தீரு - கோட்டை (2 சாமு 24 : 7)
4. காத் - தீர்க்கதரிசி (2 சாமு 24 : 11)
5. அர்வனா - எபூசியன் (2 சாமு 24 : 16)
6. யெகியேல் - கெர்சோனியன் (1 நாளா 29 : 8)

**III** <u>**கோடிட்ட இடங்களை நிரப்புக**</u> (1 Mark)

1. தாவீதினுடைய குமாரனாகிய__________________ தாவீதுக்கு விரோதமாக எழும்பினான்.
2. இஸ்ரவேலரையும் யூதா ஜனங்களையும் இலக்கம் பார்க்கும்படி__________________ தாவீதின் இருதயத்தை ஏவினான்.
3. ஜனத்தை உபாதிக்கிற __________________தாவீது கண்டபோது அவன் __________________நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.
4. __________________எருசலேமை அழிக்க தன் கையை நீட்டின போது கர்த்தர் அந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்.

<u>*விடைகள்*</u>

1. *அப்சலோம்* (II *சாமு*. 15 : 13,14)
2. *சாத்தான்* (II *சாமு*. 24 : 1; I *நாளா*. 21 : 1)
3. *தூதனை, கர்த்தரை* (II *சாமு* 24 : 17)
4 *தேவதூதன்* (II *சாமு* 24 : 16)

**IV** <u>*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது*</u> (1 Mark)

**1.** ***இஸ்ரவேலரையும் யூதா ஜனங்களையும் இலக்கம் பார்க்கும்படி தாவீதை ஏவியது யார்?***

a) *சாத்தான்* b) *யோவாப்* c) *நாத்தான்* d) *அகித்தோப்*

**2.** ***தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்ததினால் உண்டான பாவத்தினிமித்தம் கர்த்தரால் ஜனங்களின் மீது அனுப்பப்பட்ட வாதை என்ன ?***

a) *பஞ்சம்* b) *கொள்ளைநோய்* c) *பட்டயம்* d) *துஷ்டமிருகம்*

**3.** ***தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்ததினால் உண்டான பாவத்தினிமித்தம் கர்த்தரால் அனுப்பப்பட்ட கொள்ளைநோயினால் செத்துப் போனவர்கள் எத்தனை பேர்?***

a) *50 ஆயிரம்* b) *60 ஆயிரம்* c) *70 ஆயிரம்* d) *80 ஆயிரம்*

**4.** ***தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்து கர்த்தருக்குக் கோபம் மூட்டின போது அவனுக்கு விரோதமான கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு வந்த தீர்க்கதரிசி யார்?***

a) *காத்* b) *சாமுவேல்* c) *நாத்தான்* d) *அகியா*

<u>*விடைகள்*</u>

1. a. (I *நாளா*. 21 : 1) 3. c. (II *சாமு*. 24 : 15)
2. b. (II *சாமு*. 24 : 15) 4. a. (II *சாமு*. 24 : 11)

**V** <u>*யார் யாரிடம் எப்போது கூறியது*</u> (3 Marks)

1. ***இதோ ராஜாவாகிய எங்கள் ஆண்டவன் கட்டளையிடும் காரியத்தையெல்லாம் செய்ய உமது அடியாராகிய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம் (2 சாமு 15 : 15)***

<u>*யார்*</u> : *தாவீதின் ஊழியக்காரர்*

<u>*யாரிடம்*</u> : *தாவீதிடம்*

<u>*எப்போது*</u> : *எப்ரோனிலே அப்சலோம் ராஜாவானான், இஸ்ரவேலில் எல்லாருடைய இருதயமும் அவனைப் பற்றிப் போகிறது என்று ஒருவன் தாவீதினிடத்தில் அறிவித்தான். அப்பொழுது தாவீது எருசலேமிலே தன்னுடைய எல்லா ஊழியக்காரரையும் நோக்கி, “எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை” என்றான். அதற்கு மறுமொழியாக ராஜாவின் ஊழியக்காரர் இவ்வாறு கூறினார்கள்.*

2. ***“உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப் பண்ணுவார்” (2 சாமு 24 : 3)***

*யார்* : *யோவாப்*

*யாரிடம்* : *தாவீது ராஜாவிடம்*

*எப்போது* : *தாவீது இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார்க்கும்படி தேவசித்தத்திற்கு விரோதமாய்ச் சாத்தானால் ஏவப்பட்டு தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து, “ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின் கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள்” என்று கட்டளையிட்டான். அப்பொழுது யோவாப் தாவீது ராஜாவைப் பார்த்து இவ்விதமாகக் கூறினான்.*

3. **a) “*நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்*”.**
   **b) “*உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்*”**
   **c) “*நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன்*” (2 *சாமு* 24 : 10)**

*யார்* : *தாவீது*

*யாரிடம்* : *கர்த்தரிடம்*

*எப்போது* : *யோவாப் தேசமெங்கும் சுற்றித்திரிந்து, ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையை தாவீது ராஜாவுக்குக் கொடுத்தான். இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டு லட்சம் பேர் இருந்தார்கள். யூதா மனுஷர் ஐந்து லட்சம்பேர் இருந்தார்கள். இவ்விதமாக ஜனங்களை தேவசித்தத்திற்கு விரோதமாக எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது. அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி இவ்விதமாகக் கூறினான்.*

4. **a) “*கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்*”**
   **b) “*இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக*”**
   **c) “*அவருடைய இரக்கங்கள் மகா பெரியது ; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக*” (2 *சாமு* 24:14)**

*யார்* : *தாவீது*

*யாரிடம்* : *காத் தீர்க்கதரிசியிடம்*

*எப்போது* : *தாவீது கர்த்தருக்குப் பிரியமில்லாமல் ஜனங்களை இலக்கம் பார்த்ததால் கர்த்தருடைய வார்த்தை காத் தீர்க்கதரிசிக்கு உண்டாகி, அவர் நீ போய் தாவீதினிடத்தில் மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன். அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள். அதை நான் உனக்குச் செய்வேன் என்று சொல்லச் சொன்னார். அந்தபடியே காத் தீர்க்கதரிசி தாவீதினிடத்தில் போய்க் கர்த்தர் கூறிய வார்த்தைகளைக் கூறினான். அப்பொழுது தாவீது இவ்விதமாகக் கூறினான்.*

5. **“*போதும், இப்போது உன் கையை நிறுத்து*”. (*2 சாமு 24 16*)**

*யார்* : *கர்த்தர்*

*யாரிடம்* : *ஜனங்களை சங்கரிக்கிற தூதனிடம்*

*எப்போது* : *தாவீது கர்த்தருக்கு பிரியமில்லாமல் ஜனங்களை இலக்கம் பார்த்ததால் கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளைநோயை வரப்பண்ணினார். அதினால் ஜனங்களில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போனார்கள். பின்பு*

*எருசலேமையும் அழிக்க, தூதன் தன் கையை நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, கர்த்தருடைய தூதனை நோக்கி இவ்வாறு கூறினார்.*

6. **a) "*நான்தான் அக்கிரமம் பண்ணினேன், இந்த ஆடுகள் என்னசெய்தது?*"**
   **b) "*உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக.*" (2 *சாமு* 24:17)**

   *யார்* : *தாவீது*

   *யாரிடம்* : *கர்த்தரை நோக்கி*

   *எப்போது* : *தாவீது கர்த்தருக்குப் பிரியமில்லாமல் ஜனங்களை இலக்கம் பார்த்ததால் கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளை நோயை வரப்பண்ணினார். அதினால் ஜனங்களில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போனார்கள். பின் எருசலேமையும அழிக்க தூதன் தன் கையை அதின்மேல் நீட்டினபோது அவன் அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேராக இருந்தான். உபாதிக்கிற அந்த தூதனைக் கண்ட தாவீது, கர்த்தரை நோக்கி இவ்வாறு விண்ணப்பம் பண்ணினான்.*

7. **"*உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மிடத்தில் கிருபையாயிருப்பாராக*". (2 *சாமு* 24 : 23)**

   *யார்* : *அர்வனா*

   *யாரிடம்* : *தாவீது ராஜாவிடம்*

   *எப்போது* : *தாவீது கர்த்தருக்குப் பிரியமில்லாமல் ஜனங்களை இலக்கம் பார்த்ததால், கர்த்தர் எருசலேமை அழிக்க வாதையை அனுப்பினார். அதற்காக காத் தாவீதிடத்தில் வந்து கர்த்தருக்கு அர்வனாவின் களத்திலே ஒரு பலிப்பீடத்தை உண்டாக்கு என்றார். அதனால் தாவீது அர்வனாவிடம் கர்த்தருக்குப் பலியிட அவனுடைய களத்தைக் கேட்டான். அப்பொழுது அர்வனா ராஜயோக்கியமாய் எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்தபின்பு அர்வனா தாவீதிடம் இவ்விதமாகக் கூறினான்.*

**VI** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி* :** (2 Marks)

1. ***தாவீதுக்கு விரோதமாய் எழும்பின அவன் குமாரன் பெயர் என்ன? அதை அறிந்த தாவீது என்ன செய்தான்?***
   *தாவீதுக்கு விரோதமாய் எழும்பின அவன் குமாரன் பெயர் அப்சலோம். அவன் தனக்கு விரோதமாய் எழும்பினான் என தாவீது அறிந்துபோது அவனும் அவருடைய வீட்டாரும் அலனுடைய எல்லா ஊழியக்காரரும் சமஸ்த ஜனங்களும் எருசலேமை விட்டு ஓடிப்போனார்கள்* (2 *சாமு* 15 : 14 –17).

2. ***அப்சலோம் மரித்த பின்பு இஸ்ரவேல் ஜனங்களுக்குள் வாக்குவாதம் உண்டாகி அவர்கள் சொல்லிக்கொண்டது என்ன?***
   *அப்சலோம் மரித்த பின்பு இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதம் உண்டாகி,*
   1. *நமக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணி வைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்.*
   2. *இப்போதும் ராஜாவாகிய தாவீதை திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன் என்று சொல்லிக்கொண்டார்கள்* (2 *சாமு* 19 : 10).

3. ***தாவீதின் காலத்தில் கர்த்தருடைய கோபம் ஏன் இஸ்ரவேலின் மேல் திரும்ப மூண்டது? கர்த்தரைக் கோபப்படுத்தின அக்காரியத்தைச் செய்யும்படி அவனுடைய இருதயத்தை ஏவினது யார்?***

*தாவீது இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார்த்தபடியால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேல் மூண்டது. அவன் அப்படிச் செய்யும்படி சாத்தான் அவனுடைய இருதயத்தை ஏவினான்* (2 *சாமு* 24 : 1).

4. ***இஸ்ரவேலில் எங்கிருந்து எதுவரைக்குமுள்ள ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி தாவீது கூறினான்?***

*தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின் கோத்திரங்களிலுள்ள ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி தாவீது கூறினான்* (2 *சாமு.* 24 : 2)

5. ***தாவீது ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி யாரிடம் கூறினான்? அதற்கு அவன் கூறிய மறுமொழி என்ன?***

*1. தாவீது ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி யோவாபிடம் கூறினான்.*

*2. அதற்கு யோவாப் ராஜாவைப் பார்த்து ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக. ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக்காரியத்தை விரும்புகிறது என்ன என்றான்* **(2 *சாமு* 24 : 2, 3)**

6. ***ஜனங்களை இலக்கம் பார்க்க வேண்டும் என்ற காரியத்தில் யாருடைய வார்த்தை பலத்தது, யாருடைய வார்த்தை செல்லாமற் போயிற்று?***

*1. தாவீது ராஜாவின் வார்த்தை பலத்தது.*

*2. யோவாபும், இராணுவத்தலைவரும் சொன்ன வ ார்த்தை செல்லாமற் போயிற்று* (2 *இராஜா* 24 : 4).

7. ***யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்து தாவீது ராஜாவிடம் கொடுத்த தொகை என்ன?***

*யோவாப் தாவீது ராஜாவிடம் இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டு லட்சம் பேரும், யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேரும் இருக்கிறார்கள் என்று கூறினான்* (2 *சாமு* 24 : 9)

8. ***தாவீதின் காலத்தில் கர்த்தர் ஏன் இஸ்ரவேலின் மேல் வாதையை அனுப்பினார்? அதனால் அழிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?***

*தாவீது இஸ்ரவேலரை இலக்கம் பார்த்தது கர்த்தருக்குப் பிரியமில்லாததால், கர்த்தர் இஸ்ரவேலின் மேல் வாதையை அனுப்பினார். அதனால் எழுபதினாயிரம் பேர் அழிக்கப்பட்டார்கள். (2 சாமு 24 15*)

9. ***தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்த பாவத்தினிமித்தம் எருசலேமை அழிக்கக் கர்த்தர் யாரை அனுப்பினார்? அவன் எங்கு நின்று கொண்டிருந்தான்?***

*கர்த்தர் எருசலேமை அழிக்க தேவதூதனை அனுப்பினார். அந்த தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான்* (2 *சாமு.* 24 : 16).

10. ***தாவீது இஸ்ரவேலரை இலக்கம் பார்த்ததினால் உண்டான வாதை நிறுத்தப்படும்படிக்கு அவன் எங்கு பலிபீடம் கட்டினான்? அதற்கு ஆலோசனை கொடுத்தது யார்?***

*தாவீது எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு பலிபீடத்தைக் கட்டினான். அதற்கு காத் தீர்க்கதரிசி ஆலோசனை கொடுத்தான்* (2 *சாமு.* 24 : 18).

11. ***வாதையை நிறுத்தும்படி, தாவீது பலியிடுவதற்கு அர்வனா அவனுக்கு என்னென்ன கொடுத்தான்?***
*அர்வனா தாவீது பலியிட அவனுக்கு தகனபலிக்கு மாடுகளும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் கொடுத்தான்* (2 *சாமு.*24 : 22).

12. ***இஸ்ரவேலரை இலக்கம் பார்த்ததினிமித்தம் உண்டான வாதையை நிறுத்த தாவீது செலுத்தின பலிகள் யாவை?***
*சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தினான்* (2 *சாமு.* 24 : 25).

13. ***ஜனத்தை இலக்கம் பார்த்ததினிமித்தம் உணடான இஸ்ரவேலின் மேலிருந்த வாதை எவ்வாறு நிறுத்தப்பட்டது?***
    1. *ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.*
    2. *தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான். அப்போது இஸ்ரவேலின் மேலிருந்த வாதை நிறுத்தப்பட்டது* (2 *சாமு* 24 : 17, 25).

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u> :*** (4 Marks)

1. ***இஸ்ரவேலில் ஒவ்வொருவர் இருதயமும் அப்சலோமைப் பற்றிப் போகிறது என்பதை அறிந்த தாவீது தன் ஊழியக்காரர்களிடம் கூறியது என்ன?***
*தாவீது தன் ஊழியக்காரரை நோக்கி, "எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து நம்மைப்பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள்" என்றான் (2 சாமு* 15 : 14).

2. ***தாவீது ராஜா எவ்வாறு மறுபடியும் எருசலேமுக்கு கொண்டுவரப்பட்டான்?***
*சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் தாவீதின் ஆலோசனைப்படி யூதாவின் சகல மனுஷருடைய இருதயத்தையும் ஒரு மனுஷனுடைய இருதயத்தைப்போல் இணங்கப்பண்ணினதால் அவர்கள் தாவீது ராஜாவையும் அவன் ஊழியக்காரர்களையும் திரும்பிவரும்படி சொல்லி அனுப்பினார்கள். ராஜா யோர்தான்மட்டும் வந்தபோது யூதா கோத்திரத்தார் ராஜாவுக்கு எதிர்கொண்டுபோய் ராஜாவை யோர்தானைக் கடக்கப்பண்ணி எருசலேமுக்கு கொண்டுவந்தார்கள்* (2 *சாமு.*19 : 11,14,15).

3. ***யோவாபும், இராணுவத்தலைவரும் இஸ்ரவேல் தேசத்தை எவ்வாறு இலக்கம் பார்த்தார்கள்?***
*யோவாபும், இராணுவத்தலைவரும் யோர்தானைக் கடந்து காத் என்னும் ஆறுகளின் நடுவே இருக்கிற பட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேரிடத்திலும், கீலேயாத்திற்கும், தாதீத்ஒத்சிக்கும், தாண்யானுக்கும்,*

*சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும், தீரு என்னும் கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் யூதாவின் தென்புறமான பெயெர்செபாவுக்கும் போய் இஸ்ரவேலரை இலக்கம் பார்த்தார்கள்.*
*இவ்விதமாகத் தேசமெங்கும் சுற்றித்திரிந்து ஒன்பது மாதமும் இருபது நாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்கு வந்தார்கள்* (2 *சாமு* 24 : 5-8).

**4. *அர்வனா தாவீதைத் தன்னிடம் வரக் கண்ட போது என்ன செய்தான்? தாவீது அவனிடம் என்ன கேட்டான்?***
*அர்வனா தாவீது தன்னிடம் வருவதை கண்டபோது அவனுக்கு எதிர்கொண்டு போய் தரை மட்டும் குனிந்து ராஜாவை வணங்கி ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன என்று கேட்டான். அதற்கு தாவீது அர்வனாவிடம், வாதை ஜனத்தை விட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்த களத்தை உன்கையில் கொள்ள வந்தேன் என்றான்* (2 *சாமு* 24 : 21)

**IX** ***<u>விரிவான விடையளி</u>* :** (6 Marks)

**1. *தாவீது ஜனத்தை இலக்கம் பார்த்தது கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியால் காத் தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர் தாவீதுக்கு முன்பாக வைக்கப்பட்ட மூன்று தண்டனைகள் யாவை? அதற்கான தாவீதின் பதில் என்ன? கர்த்தர் என்ன செய்தார்?***

*தாவீது ஜனத்தை இலக்கம் பார்த்ததினால் கர்த்தரின் கோபம் அவன்மேல் மூண்டது. எனவே காத் தீர்க்கதரிசியின் மூலமாக தேவனுடைய வார்த்தையாக கீழ்க்கண்ட மூன்று தண்டனைகளில் ஏதாவது ஒரு தண்டனையை அவன் சம்மதித்து ஏற்றுக் கொள்ளும்படியாகச் சொல்லப்பட்டது.*

1. *ஏழு வருஷம் பஞ்சம் வரவேண்டுமோ?*
2. *அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மை பின் தொடர நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போக வேண்டுமோ? அல்லது*
3. *உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளை நோய் உண்டாக வேண்டுமோ? என்று கர்த்தர் மூன்று காரியங்களை காத் தீர்க்கதரிசியின் மூலமாக தாவீதுக்கு முன்பாக வைத்தார்.*

*அதற்கு தாவீது காத் தீர்க்கதரிசியை நோக்கி, கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன். இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக. அவருடைய இரக்கங்கள் மகா பெரியது, மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான்* (2 *சாமு*. 24:13,14).

**X** ***<u>போதனை</u>* :** (2 Marks)

*தாவீது தன் சொந்தப் பெலத்தில் சார்ந்து கொள்ளாமல் எப்போதும் தேவனைச் சார்ந்து கொண்ட ஒரு தாழ்மையான மனிதனாயிருந்தான். தேவசித்தம் செய்யும்படி ஆவலுடன் ஏங்கும் ஒரு இருதயம் அவனுக்கிருந்தது. நாமுங்கூட எல்லா நேரங்களிலும் தேவசித்தம் செய்ய வாஞ்சிக்க வேண்டும்.*

*************

## பாடம் - 8

# தாவீதுக்குப் பின் சாலொமோன் ராஜாவானது.

(1 இராஜா 1 : 1, 5 - 50)

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

*"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"* ( **ரோமர் : 8 : 31).**

**II** ***பொருத்துக*** (1 Mark)

1. *அதோனியா* - *மிகவும் அழகுள்ளவன்* (1*இராஜா* 1 : 6)
2. *அதோனியா* - *அப்சலோமின் சகோதரன்*(1*இராஜா* 1 : 6)
3. *அபிஷா* - *சூனேம் ஊரான்* (1*இராஜா* 1 : 3)
4. *அபியத்தார்* - *ஆசாரியன்* (1*இராஜா* 1 : 7)
5. *சாதோக்* - *ஆசாரியன்* (1*இராஜா* 1 : 8)
6. *நாத்தான்* - *தீர்க்கதரிசி* (1*இராஜா* 1 : 8)
7. *சோகெலெத்* - *கல்* (1*இராஜா* 1 : 9)
8. *பத்சேபாள்* - *சாலொமோனின் தாய்* (1*இராஜா* 1 : 11)
9. *யோவாப்* - *படைத்தலைவன்* (1*இராஜா* 1 : 19)
10. *சாலொமோன்* - *இஸ்ரவேலின் இராஜா* (1*இராஜா* 1 : 34)

**III** ***கோடிட்ட இடங்களை நிரப்புக :*** (1 Mark)

1. *அதோனியா தாவீதுக்கும்* ------------------*க்கும் பிறந்தவன்.*
2. ____________________ *நான் ராஜா ஆவேன் என்று சொல்லி உயர்த்தினான்.*
3. *அதோனியா செருயாவின் குமாரனாகிய* ____________________*உடனும் ஆசாரியனாகிய* ____________________*உடனும் ஆலோசனை பண்ணிவந்தான்.*
4. *அதோனியா செய்த விருந்துக்கு அவன் சகோதரனாகிய* ____________________*அழைக்கப்படவில்லை.*
5. *தாவீதுக்குபின் அவன் குமாரனாகிய* ____________________*அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.*
6. *ஆசாரியனாகிய* ____________________ *தைலக் கொம்பை கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய் சாலொமோனை ராஜாவாக அபிஷேகம் பண்ணினான்.*
7. *ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய* ____________________ *சாலொமோனை* ____________________ *ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்*
8. ____________________*சாலொமோனுக்குப் பயந்ததினால் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டான்.*

**விடைகள்**

1. ஆகீத் (1இராஜா 1 : 5)
2 அதோனியா (1இராஜா 1 : 5)
3. யோவாப், அபியத்தார் (1இராஜா 1 : 7)
4. சாலெமோன் (1இராஜா 1 : 10)
5. சாலொமோன் (1இராஜா 1 : 35)
6. சாதோக்கு (1இராஜா 1 : 39)
7. நாத்தானும், கீகோனிலே (1இராஜா 1 : 45)
8. அதோனியா (1இராஜா 1 : 50)

**IV** ***சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது*** **:** (1 Mark)

1. ***நான் ராஜா ஆவேன் என்று சொல்லி தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு இரதங்களையும் குதிரை வீரரையும் ஐம்பது காலாட்களையும் சம்பாதித்தது யார்?***

   a) சாலொமோன் b) அதோனியா c) யோனாத்தான் d) அம்னோன்

2. ***அதோனியா ராஜாவாகிற செய்தியை பத்சேபாளிடம் அறிவித்தது யார் ?***

   a) காத் b) சாமுவேல் c) நாத்தான் d) சாதோக்கு

3. ***இஸ்ரவேலின் மேலும் யூதாவின் மேல் தலைவனாயிருக்கும்படி சாலொமோனை ஏற்படுத்தினேன் என்று கூறியது யார் ?***

   a) தாவீது b) யோவாப் c) நாத்தான் d) அபியத்தார்

4. ***யார் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் நாதசுரங்களை ஊதி, பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்பாய்ச் சந்தோஷித்தார்கள் ?***

   a) தாவீது b) சவுல் c) எசேக்கியா d) சாலொமோன்

5. ***சாலொமோன் ராஜாவான செய்தியை அதோனியாவிடம் அறிவித்தது யார்?***

   a) அபியத்தார் b) நாத்தான் c) யோனத்தான் d) சாதோக்கு

**விடைகள்**

1. b. (1 இராஜா 1 : 5)
2 c. (1இராஜா 1 : 11)
3. a. (1இராஜா 1 : 35)
4. c . (1இராஜா 1 : 43)
5. d. (1இராஜா 1 : 40)

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* **:** (3 Marks)

1. **a) "*ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா?" (1 இராஜா* 1 : 11)**

**b) "*உன் பிராணனையும் உன் குமாரனாகிய சாலொமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா.*"**

**c) "*நானும் உனக்குப் பின்வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன்*" (1 *இராஜா* 1 : 14)**

*யார்* : *தீர்க்கதரிசியாகிய நாத்தான்*

*யாரிடம்* : *சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடம்*

*எப்போது* : *தாவீதின் குமாரனாகிய அதோனியா தான் ராஜாவாவதாகச் சொல்லி தன்னைத்தான் உயர்த்தி ஒரு விருந்து செய்து தன் சகோதரரெல்லாரையும் ராஜாவின் ஊழியக்காரனான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைத்தான். தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை. அப்பொழுது நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடம் இவ்வாறு கூறினான்.*

2. **"*நானும் என் குமாரனாகிய சாலொமோனும் குற்றவாளிகளாய் எண்ணப்படுவோம்* " (1 *இராஜா* 1 : 21)**

*யார்* : *பத்சேபாள்*

*யாரிடம்* : *தாவீது ராஜாவிடம்*

*எப்போது* : *தாவீதின் குமாரனாகிய அதோனியா தான் ராஜாவாவதாகச் சொல்லி தன்னைத்தான் உயர்த்தி ஒரு விருந்து செய்து தன் சகோதரர்களையும் யூதாவின் மனுஷர்களையும் அழைத்தான். அப்பொழுது நாத்தான் பத்சேபாளிடம் நீ தாவீது ராஜாவினிடத்தில் போய், எனக்குப் பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க அதோனிய ராஜாவாகிறது என்ன என்று கேள் என்றான். அப்படியே பத்சேபாள் ராஜாவினிடத்தில் போய் குனிந்து ராஜாவை வணங்கினாள் . அப்பொழுது ராஜா உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். அதற்கு பத்சேபாள் இவ்வாறு கூறினாள்.*

3. **"*இந்தக் காரியம் ராஜாவாகிய என் ஆண்டவன் கட்டளையால் நடந்திருக்குமோ*" (*1 இராஜா* 1 : 27)**

*யார்* : *தீர்க்கதரிசியாகிய நாத்தான்*

*யாரிடம்* : *தாவீது ராஜாவிடம்*

*எப்போது* : *தாவீதின் குமாரனாகிய அதோனியா தான் ராஜாவாவதாகச் சொல்லி தன்னைத் தான் உயர்த்தி ஒரு விருந்துச் செய்து ராஜாவின் ஊழியக்காரர் அனைவரையும் அழைத்தான். ஆனால் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் சாலொமோனையும் அழைக்கவில்லை. அப்பொழுது நாத்தான் பத்சேபாளிடம், நீ தாவீது ராஜாவினிடத்தில் போய், எனக்குப் பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? என்று*

*கேள் நீ அங்கே ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில் நானும் உனக்குப்பின் வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன் என்றான். அப்படியே பத்சேபாள் ராஜாவாகிய தாவீதோடே பேசிக்கொண்டிருக்கையில் தீர்க்கதரிசியாகிய நாத்தான் போய் இந்த வார்த்தைகளை ராஜாவிடம் கூறினான்.*

4. **“ *இன்றைக்கு செய்து தீர்ப்பேன்.” (1 இராஜா* 1 : 29)**

<u>*யார்*</u> : *தாவீது ராஜா*

<u>*யாரிடம்*</u> : *பத்சேபாளிடம்*

<u>*எப்போது*</u> : *தாவீதின் குமாரனாகிய அதோனியா தான் ராஜாவாவதாகச் சொல்லி தன்னைத் தான் உயர்த்தி ஒரு விருந்து செய்தான் . அப்பொழுது பத்சேபாள் நாத்தான் தீர்க்கதரிசியின் ஆலோசனையின் படி தாவீது ராஜாவினிடத்தில் சென்று எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று ஆணையிட்டு கொடுத்ததையும் இப்பொழுது அதோனியா ராஜாவாகிறான். என்பதையும் தாவீதிடம் கூறினாள். உடனே நாத்தான் தீர்க்கதரிசியும் வந்து அதை உறுதிப்படுத்தினாள். அப்பொழுது தாவீது பத்சேபாளை என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான். அவள் வந்தபோது தாவீது பத்சேபாளைப் பார்த்து இவ்வாறு கூறினான்.*

5. **“*உள்ளே வா, நீ கெட்டிக்காரன், “நற்செய்தி கொண்டு வருகிறவன்*”**

**(1 *இராஜா* 1 : 42).**

<u>*யார்*</u> : *அதோனியா*

<u>*யாரிடம்*</u> : *ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரனாகிய யோனத்தானிடம்.*

<u>*எப்போது*</u> : *ஆசாரியனாகிய சாதோக்கு சாலொமோனைக் கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் எக்காளம் நாதஸ்வரங்களை ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தி பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்பாய் சந்தோஷித்தார்கள். அதோனியாவும் அவனோடிருந்தவர்களும் இந்த சத்தத்தைக் கேட்டு இந்த ஆரவாரத்தின் காரணம் என்ன என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கையில் அங்கே யோனத்தான் வந்தான். அப்பொழுது அதோனியா யோனத்தானைப் பார்த்து இவ்வாறு கூறினான்.*

**VI** <u>***ஓரிரு வாக்கியங் களில் விடையளி***</u> (2 Marks)

1. ***தாவீதின் குமாரனாகிய அதோனியா ‘நான் ராஜாவாவேன்’ என்று சொல்லி தன்னைத்தான் எவ்வாறு உயர்த்தினான்?***
*அதோனியா ராஜாவாகும்படி தனக்காக இரதங்களையும் குதிரைவீரர்களையும், தனக்கு முன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதித்து வைத்திருந்தான் (1 இராஜா* 1 : 5).

2. ***மிகவும் அழகுள்ளவனாயிருந்த தாவீதின் குமாரன் யார்? அவன் தான் ராஜாவாகும் படியாக , யாரோடு ஆலாசனை பண்ணினான்?***
*ஆகீத்திற்கு பிறந்த அதோனியா தாவீதின் குமாரர்களில் மிகவும் அழகுள்ளவனாயிருந்தான். அவன் செருயாவின் குமாரனாகிய யோவாபோடும், ஆசாரியனாகிய அபியத்தாரோடும் ஆலோசனைபண்ணி வந்தான்* (1 *இராஜா* 1 : 7).

3. ***அதோனியா ராஜாவாகும்படி யார் யார் அவனுக்கு உடந்தையாயிருக்கவில்லை?***
*ஆசாரியனாகிய சாதோக்கும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், சீமேயியும் , ரேயியும், தாவீதோடிருக்கிற பராக்கிரமசாலிகளும், அதோனியாவுக்கு உடந்தையாயிருக்கவில்லை (1 இராஜா* 1 : 8).

4. ***தாவீது ராஜா மிகவும் வயது சென்றவனாயிருந்த போது அவனுக்குப் பணிவிடை செய்த பெண்ணின் பெயர் என்ன? அவள் எந்த ஊரைச் சேர்ந்தவள் ?***
*சூனேம் ஊராளாகிய அபிஷாக் தாவீது ராஜாவுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் (1 இராஜா* 1 : 15)

5. ***தாவீது ராஜா பத்சேபாளுக்கு, தன்னுடைய தேவனாகிய கர்த்தரைக் கொண்டு என்ன ஆணையிட்டுக் கொடுத்திருந்தான் ?***
*தாவீது ராஜா பத்சேபாளிடம் 'எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான்' என்று ஆணையிட்டுக் கொடுத்திருந்தான்* (1 *இரா.* 1: 17).

6. ***தாவீது ராஜா தனக்குப்பின் சாலொமோனை ராஜாவாக்குவதாக கொடுத்திருந்த ஆணையை அவனுக்கு நினைப்பூட்டியது யார்? அதை உறுதிப்படுத்தும்படி ராஜாவிடம் பேசியது யார் ?***
*தாவீது ராஜா தனக்குப்பின் சாலொமோனை ராஜாவாக்குவதாக கொடுத்திருந்த ஆணையை பத்சேபாள் அவனுக்கு நினைப்பூட்டினாள். நாத்தான் தீர்க்கதரிசி அதை உறுதிப்படுத்தும்படி ராஜாவிடம் பேசினான்* (1 *இராஜா* 1 : 17, 22).

7. ***சாலொமோனை, இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கும்படி தாவீது ராஜா யாருக்கு கட்டளையிட்டான்?***
*தாவீது ராஜா , ஆசாரியனாகிய சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், அழைத்து சாலொமோனை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டான்* (1 *இராஜா* 1 : 32, 34).

8. ***சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணும்படி தாவீது கூறியபோது யோய்தாவின் குமாரன் பெனாயா அதற்கு என்ன மறுஉத்தரவு சொன்னான்?***
*பெனாயா தாவீதை நோக்கி, ஆமென், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய தேவனாகிய கர்த்தரும் இப்படியே சொல்வாராக.*
*கர்த்தர் ராஜாவாகிய என் ஆண்டவனோடே எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் சாலொமோனோடும் இருந்து, தாவீது ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக என்றான்* (1 *இராஜா* 1 : 36, 37)

9. ***சாலொமோனை ராஜாவாக்கும்படி எதின்மேல் ஏற்றிக் கொண்டுபோனார்கள்? எங்கு நடத்திக்கொண்டு போனார்கள் ?***
*தாவீது ராஜாவினுடைய கோவேறு கழுதையின் மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு நடத்திக் கொண்டு போனார்கள்* (1 *இராஜா* 1 : 38)

10. ***சாலொமோனை ராஜாவாக அபிஷேகம் பண்ணினது யார்? எவ்வாறு அபிஷேகம் பண்ணப்பட்டான் ?***

*ஆசாரியனாகிய சாதோக்கு தைலக் கொம்பை கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய் சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணினான்* (1 *இராஜா* 1 : 39).

11. ***சாலொமோன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவுடன் ஜனங்கள் என்ன செய்தார்கள் ?***
*எக்காளம் ஊதி , ஜனங்களெல்லாரும் ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள்.*
*பிற்பாடு ஜனங்களெல்லாரும் அவன் பிறகாலே போனார்கள். ஜனங்கள் நாதசுரங்களை ஊதி, பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்பாய்ச் சந்தோஷித்தார்கள்* (1 *இராஜா* 1 : 39 - 40).

12. ***சாலொமோன் ராஜாவான செய்தியை அதோனியாவுக்கு அறிவித்தது யார்? அப்பொழுது அவன் என்ன செய்தான்?***
*ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் சாலொமோன் ராஜாவான செய்தியை அதோனியாவுக்கு அறிவித்தான். அதோனியா சாலொமோனுக்குப் பயந்ததினால் உடனே எழுந்துபோய், பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொண்டான்* (1 *இராஜா* 1 : 43, 50).

13. ***சாலொமோன் ராஜாவானதை கேள்விப்பட்டபோது அதோனியாவின் விருந்தாளிகள் என்ன செய்தார்கள்?***
*அவர்களெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து, அவரவர் தங்கள் வழியே போய்விட்டார்கள் (1 இராஜா* 1 : 49)

14. ***சாலொமோன் ராஜாவானதைக் கேட்டபோது அதிர்ந்து எழுந்திருந்தவர்கள் யார்? பயந்து எழுந்து போய் பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக் கொண்டது யார்?***
*அதோனியாவின் விருந்தாளிகள்; அதோனியா ( 1 இராஜா* 1 : 49)

**VII** *<u>சுருக்கமான விடையளி</u>* (4 Marks)

1. ***அதோனியா ராஜாவாவதாகச் சொல்லி எங்கு விருந்து வைத்தான்? யார் யாரை விருந்துக்கு அழைத்தான்? யாரை விருந்துக்கு அழைக்கவில்லை?***
*அதோனியா இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே விருந்து வைத்தான்.*
*ராஜாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும், ராஜாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைத்தான்.*
*தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை* (1 *இராஜா* 1 : 9, 10).

2. ***அதோனியா ராஜாவாகிற செய்தியை கேள்விப்பட்டபோது நாத்தான் தீர்க்கதரிசி பத்சேபாளுக்கு கூறிய ஆலோசனை என்ன?***
*நாத்தான் தீர்க்கதரிசி பத்சேபாளை நோக்கி, நீ தாவீது ராஜாவினிடத்தில் போய் ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப்பின் என் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க,*

*அதோனியா ராஜாவாகிறது என்ன? என்று அவரிடத்தில் கேள் என்று ஆலோசனை சொன்னான்* (1 *இரா.*1: 13).

3. ***தாவீது ராஜா, சாலொமோனை தனக்குப்பின் ராஜாவாக்குவதாக, கொடுத்திருந்த ஆணையை அவனுக்கு நினைப்பூட்டியது யார்? அப்பொழுது தாவீது கூறிய மறுமொழி என்ன?***
*தன் மகனாகிய சாலொமோனை தனக்குப்பின் ராஜாவாக்குவேன் என்று தாவீது ராஜா தன்னிடம் கர்த்தர்மேல் ஆணையிட்டிருந்த வார்த்தைகளை தாவீதுக்கு பத்சேபாள் நினைப்பூட்டினாள். அப்பொழுது ராஜா அவளை நோக்கி, உன் குமாரனாகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு, அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மேல் ஆணையிட்டபடியே இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்பதை என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று ஆணையிட்டான்*
(*1 இராஜா* 1 : 17,29, 30).

4. ***சாலொமோன் ராஜாவானபோது தாவீதின் ஊழியக்காரரும் தாவீதும் அவனை ஆசீர்வதித்து வாழ்த்தியதைக் குறித்து யோனத்தான் அதோனியாவிடம் கூறியது என்ன?***
*யோனத்தான் அதோனியாவை நோக்கி ராஜாவின் ஊழியக்காரர் தாவீதிடம் தேவன் சாலொமோனின் நாமத்தை உம்முடைய நாமத்தைப் பார்க்கிலும் பிரபலப்படுத்தி, அவருடைய சிங்காசனத்தை உம்முடைய (தாவீதின்) சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்குவாராக என்றார்கள்.*
*தாவீது ராஜா தம்முடைய கட்டிலின் மேல் குனிந்து 'என்னுடைய கண்கள் காண இன்றைய தினம் என் சிங்காசத்தின் மேல் ஒருவனை வீற்றிருக்கச் செய்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார்' என்றான்* (1 *இராஜா* 1 : 47, 48).

**VIII** ***<u>விரிவான விடையளி</u>*** (6 Marks)

1. ***சாலொமோனை ராஜாவாக அபிஷேகம் பண்ணும்படியாக தாவீது ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும் நாத்தானையும், பெனாயாவையும் , அழைத்து, அவர்களுக்குக் கொடுத்த கட்டளை என்ன?***
*தாவீது ராஜா சாதோக்கு, நாத்தான், பெனாயா ஆகியோரை அழைத்து, நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு , என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள்.*
*அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள். பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள்.*
*அதின்பின்பு அவன் நகர்வலம் வந்து என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி, அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள். அவனே, என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான். அவன் இஸ்ரவேலின் மேலும் யூதாவின் மேலும்*

*தலைவனாயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன் என்று கட்டளையிட்டான்* (1 *இராஜா.* 1 : 33 – 35).

2. ***சாலொமோன் ராஜாவானதினிமித்தம் நகரத்திலே உண்டான ஆரவாரத்தை குறித்து ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் அதோனியாவிடம் கூறியது என்ன?***

*யோனத்தான் அதோனியாவிடம் தாவீது ராஜாவாகிய நம்முடைய ஆண்டவன் சாலொமோனை ராஜாவாக்கினார். ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும் , தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் , யோய்தாவின் குமாரன் பெனாயாவையும், கிரேத்தியரையும் , பிலேத்தியரையும் அவனோடே அனுப்பினார். அவர்கள் அவனை ராஜாவுடைய கோவேறு கழுதையின் மேல் ஏற்றினார்கள்.*

*ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும், அவனைக் கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். நகரமெல்லாம் முழங்கத்தக்கதாக அங்கேயிருந்து பூரிப்போடே புறப்பட்டுப் போனார்கள். நீங்கள் கேட்ட இரைச்சல் அதுதான் என்றான்* (1 *இராஜா* 1 : 43 - 45).

**IX** ***<u>போதனை</u>*** **:** (2 Marks)

*தேவன் தம்முடைய தெய்வீகத் திட்டத்தின்படி ஒரு வேலையை நிறைவேற்றும்படி ஒரு மனிதனைத் தெரிந்து கொள்ளும்போது, ஒருவரும் அதற்குத் தடையாய் நிற்க முடியாது.*

***********

## *பாடம் - 9*

# *சாலொமோனின் ஞானம்*

(1 *இராஜா* 3 : 4 : 29 - 34 : 10 : 1 - 7, 24)

**I** ***<u>மனப்பாட வசனம்</u>*** **:** (2 Marks)

**“***உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்* ” ( ***யாக்கோபு*** **: 1 : 5, 6).**

**II** ***<u>பொருத்துக</u>*** **:** (1 Mark)

1. *சாலொமோன்* - *தாவீதின் குமாரன்* (1*இரா.* 3 : 3 )
2. *சாலொமோன்* - *ஞானமுள்ள இருதயம்* (1*இரா.* 3 : 9 )
3. *சாலொமோனின் நீதிமொழிகள்* - *மூவாயிரம்* (1*இரா.* 4 : 32)
4. *சாலொமோனின் பாட்டுகள்* - *ஆயிரத்து ஐந்து* (1*இரா.* 4 : 32)

**III** **<u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u>** (1 Mark)

1. கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படாதிருந்தபடியினால் ஜனங்கள் __________________ பலியிட்டு வந்தார்கள்.
2. __________________ கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தான்.
3. கிபியோனிலிருந்த பலிபீடத்தின் மேல் சாலொமோன் __________________ சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்.
4. நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்று __________________ கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.
5. சாலொமோன் __________________ தந்தருளும் என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்
6. கர்த்தர் சாலொமோனுக்கு __________________, __________________ இருதயத்தைக் கொடுத்தார்.
7. சாலொமோன் எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய __________________ முன்பாக நின்று சர்வாங்க தகனபலியிட்டு சமாதான பலிகளைச் செலுத்தினான்.
8. __________________ சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும் கடற்கரை மணலத்தனையான __________________ யையும் கொடுத்தார்.
9. விடுகதைகளினால் சாலொமோனை சோதிப்பதற்காக __________________ எருசலேமுக்கு வந்தாள்.
10. __________________ இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக சகல தேசத்தாரும் அவன் முகதரிசனத்தைத தேடினார்கள்.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. மேடைகளிலே | (1 இராஜா 3 : 2) |
| 2. சாலொமோன் | (1 இராஜா 3 : 3) |
| 3. ஆயிரம் | (1 இராஜா 3 : 4) |
| 4. சாலொமோன் | (1 இராஜா 3 : 7) |
| 5. ஞானமுள்ள இருதயத்தை | (1 இராஜா 3 : 9) |
| 6. ஞானமும், உணர்வுமுள்ள | (1 இராஜா 3 : 12) |
| 7. கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டிக்கு, | (1 இராஜா 3 : 15) |
| 8. தேவன், மனோவிருத்தி | (1 இராஜா 4 : 29) |
| 9. சேபாவின் ராஜஸ்திரீ | (1 இராஜா10 : 1) |
| 10. சாலொமோனின் | (1 இராஜா10 : 24) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது* : (1 Mark)

1. ***சாலொமோன் கர்த்தருக்குப் பலியிடும்படியாக எங்கு போனான் ?***
   a) *கிபியோன்* b) *பெத்தேல்* c) *சீலோ* d) *கர்மேல்*

2. ***யாருடைய விண்ணப்பம் ஆண்டவருடைய பார்வைக்கு உகந்ததாயிருந்தது?***
   a) *சவுலின்* b) *யெகூவின்* c) *அதோனியாவின்* d) *சாலொமோனின்*

3. ***நியாயம் விசாரிக்கிறதற்குத் தேவன் அருளின ஞானம் சாலொமோனுச்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தவர்கள் யார்?***
   a) *கிழக்கத்திப் புத்திரர்* b) *எகிப்தியர்*
   c) *கல்தேயர்* d) *இஸ்ரவேலர் எல்லாரும்*

4. ***சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் யாருடைய ஞானம் சிறந்ததாயிருந்தது?***
   a) *தானியேலின்* b)*யோசேப்பின்* c)*சாலொமோனின்* d) *ஸ்தேவானின்*

5. ***தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங்குறித்து சாலொமோனிடத்தில் சம்பாஷித்தது யார்?***
   a) *பார்வோன் குமாரத்தி* b) *சேபாவின்ராஜஸ்திரீ*
   c) *பத்சேபாள்* d) *அஸ்தரோத்*

***விடைகள்:***

1) a. (1 *இராஜா* 3 : 4)
2) d. (1 *இராஜா* 3 : 10)
3) d. (1 *இராஜா* 3 : 28)
4) c. (1 *இராஜா* 4 : 30)
5) b. (1*இராஜா* 10 : 1)

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* : (3 Marks)

1. ***"நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் " (1 இராஜா* 3 : 5).**

*யார்* : *கர்த்தர்*

*யாரிடம்* : *சாலொமோனிடம்*

*எப்போது* : *ராஜ்யபாரம் சாலொமோனின் கையில் ஸ்திரப்பட்ட பின்பு அவன் கர்த்தருக்குப் பலியிடும்படி கிபியோனுக்குப் போய் அங்கே ஆயிரம் சாவாங்க தகனபலிகளைக் கர்த்தருக்கு செலுத்தினான். அப்பொழுது கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி அவனிடம் இவ்வாறு சொன்னார்.*

2. **a) *"நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்"* (1 *இராஜா* 3 : 7)**

   **b) *"உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் , நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் "* (1 *இரா*.3 : 9)**

*யார்* : *ராஜாவாகிய சாலொமோன்*

*யாரிடம்* : *தேவனாகிய கர்த்தரிடத்தில்*

*எப்போது* : *ராஜாவாகிய சாலொமோன் கிபியோனுக்கு போய், ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைக் கர்த்தருக்குச் செலுத்தினான். கிபியோனிலே*

*கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சொன்னார். அப்பொழுது சாலொமோன் கர்த்தரிடம் இவ்வாறு சொன்னான்.*

3. **a) "*உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை .*"**
**b) "*உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை*" ( *1 இராஜா.* 3:12, 13).**

*யார்* : *தேவன்*

*யாரிடம்* : *சாலொமோனிடம்*

*எப்போது* : *கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்குத் தரிசனமாகி 'நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். அதற்குச் சாலொமோன் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் என்றான். சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. ஆகையினால் தேவன் அவனை நோக்கி இவ்வாறு கூறி னார்.*

4. **a) "*உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று* " (1 *இராஜா* 10 : 6).**
**b) " *நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை.* " (1 *இராஜா* 10 : 7)**
**c) "*இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை*" (1 *இராஜா* 10 : 7)**

*யார்* : *சேபாவின் ராஜஸ்திரீ*

*யாரிடம்* : *சாலொமோன் ராஜாவிடம்*

*எப்போது* : *கர்த்தருடைய நாமத்தைக் குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி சேபாவின் ராஜஸ்திரீக்குக் கேள்வியானபோது, அவள் விடுகதைகளினால் அவனைச் சோதிக்கிறதற்காக எருசலேமுக்கு வந்து தன் மனதில் இருந்த எல்லாவற்றையும் குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும் , அவன் கட்டின அரமனையையும் , போஜன பதார்த்தங்களையும் , அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமை கொண்டு, ராஜாவை நோக்கி இவ்வாறு கூறினாள்.*

## VI <u>*ஓரிரு வாக்கியங் களில் விடையளி :*</u> (2 Marks)

**1. *சாலொமோன் யாரை விவாகம் பண்ணினான்? அவளை எங்கு கொண்டு வந்து வைத்தான்?***

*சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணினான், அவளை தாவீதின் நகரத்தில் கொண்டுவந்து வைத்தான்* (1 *இராஜா* 3: 1)

**2. *ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டபின் அவன் எவ்விடத்திற்குச் சென்று கர்த்தருக்குப் பலிசெலுத்தினான்? பலிபீடத்தின்மேல் அவன் செலுத்திய பலியைக் குறித்து எழுது.***

*ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டவுடன் சாலொமோன் கிபியோனுக்குச் சென்று கர்த்தருக்குப் பலி செலுத்தினான். அந்த பலிபீடத்தன்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்* (1 *இராஜா* 3 : 4).

**3. *கர்த்தர் சாலொமோனுக்கு எங்கு, எப்பொழுது தரிசனமானார்?***

*கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்தில் தரிசனமானார்* ( 1*இராஜா* 3 : 5)

**4. *சாலொமோன் ஏன் ஞானமுள்ள இருதயத்தைக் கர்த்தரிடத்தில் கேட்டான்?***

*ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் சாலொமோன் ஞானமுள்ள இருதயத்தை கர்த்தரிடத்தில் கேட்டான்* (1 *இரா.* 3 : 9).

**5. *சாலொமோன் ஆண்டவரிடத்தில் என்ன கேட்டான்? அது அவருடைய பார்வைக்கு எப்படியிருந்தது?***

*சாலொமோன் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான்.அது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது* (1 *இராஜா* 3 : 9, 10)

**6. *தேவன் சாலொமோனுக்கு எப்படிப்பட்ட இருதயத்தைக் கொடுத்தார்?***

*ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்தார்* (1 *இராஜா* 3 : 12)

**7. *இஸ்ரவேல் ஜனங்கள் ஏன் சாலொமோன் ராஜாவுக்குப் பயந்தார்கள்?***

*இரண்டு வேசிகளான ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் முறையிட்ட வழக்கில் ராஜா தீர்த்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்குத் தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்* (1 *இராஜா* 3 : 28).

**8. *தேவன் சாலொமோனுக்கு எவ்வளவு ஞானத்தையும் மனோவிருத்தியையும் கொடுத்திருந்தார்?***

*தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும் கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்திருந்தார்* (1*இராஜா* 4 : 29)

**9. *சாலொமோனின் ஞானம் யாருடைய ஞானத்தை பார்க்கிலும் சிறந்ததாயிருந்தது?***

*சாலொமோனின் ஞானம் சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சிறந்ததாயிருந்தது* (1 *இராஜா* 4 : 30)

**10. *சாலொமோன் யாரைவிட அதிக ஞானவானாயிருந்தான்?***

*சாலொமோன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும் மற்ற எல்லா மனுஷரிலும் அதிக ஞானவானாயிருந்தான்* (*1 இராஜா* 4 : 31)

**11. *சாலொமோன் எத்தனை நீதிமொழிகளையும், பாட்டுகளையும் இயற்றினான்?***

*சாலொமோன் மூவாயிரம் நீதிமொழிகளையும், ஆயிரத்து ஐந்து பாட்டுகளையும் இயற்றினான்* ( 1 *இராஜா* 4 : 32).

**12.** ***சாலொமோன் எவைகளைக் குறித்து வாக்கியங்களைச் சொன்னான்?***
*சாலொமோன் லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டு வரைக்குமுள்ள மர முதலிய தாவரங்களைக் குறித்தும், மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் மச்சங்கள் ஆகியவைகளைக் குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான்* (1 *இராஜா* 4 : 33).

**13.** ***சாலொமோனைச் சோதிக்க வந்த ராஜஸ்திரீ யார்? எவ்வாறு சோதித்தாள்?***
*சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைச் சோதிக்க வந்தாள். அவள் அவனை விடுகதைகளினால் சோதித்தாள் (1 இராஜா* 10 : 1)

**14.** ***சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைச் சோதிக்கும்படி எவ்வாறு எருசலேமுக்கு வந்தாள்?***
*சேபாவின் ராஜஸ்திரீ மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும் , மிகுதியான பொன்னையும், இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள்* (1*இராஜா* 10 : 2)

**15.** ***சேபாவின் ராஜஸ்திரீ தன் மனதில் இருந்த எல்லாவற்றையும் குறித்து சாலொமோனிடத்தில் சம்பாஷித்தபோது அவன் என்ன செய்தான்?***
*சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான். அவளுக்கு விடுவிக்கக்கூடாதபடிக்கு ஒன்றாகிலும் ராஜாவுக்கு மறைபொருளாயிருக்கவில்லை* (1*இராஜா* 10 : 3)

**16.** ***சாலொமோனின் ஞானத்தைக் கண்டு ஆச்சரியத்தால் பிரமை கொண்டது யார்? அவனுடைய ஞானத்தை கேட்கிறதற்காக அவன் முகதரிசனத்தைத் தேடினவர்கள் யார்?***
*சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தைக் கண்டு ஆச்சரியத்தால் பிரமை கொண்டாள்.*
*சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முகதரிசனத்தைத் தேடினார்கள்* ( 1*இராஜா* 10 : 5, 24).

## VII <u>*சுருக்கமான விடையளி*</u> : (4 Marks)

1. ***சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுக்குத் தேவன் பாராட்டின பெரிய கிருபைகளைக் குறித்துக் கூறியது என்ன?***
*சாலொமோன் தேவனை நோக்கி, என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மனநேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபை செய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர் என்றான்* (1 *இராஜா* 3 : 6).

2. ***தேவன் சாலொமோனின் நாட்களை நீடித்திருக்கப்பண்ணும்படியாக அவன் என்ன செய்ய வேண்டும் என்று அவனிடம் கூறினார்?***

*தேவன் சாலொமோனிடம் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு என் வழிகளில் நடப்பாயாகில் உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன் என்றார்* (1 *இராஜா* 3:14).

3. ***கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்திலே தரிசனமாகிப் பேசினபின்பு அவன் என்ன செய்தான்?***

*கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்திலே தரிசனமாகிப் பேசினபின்பு, அவன் எருசலேமுக்குப் போய், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, சர்வாங்க தனகபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்து செய்தான்* (1*இராஜா.* 3 : 15)

4. ***உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய் ஏன் தன் பிள்ளையை செத்தபிள்ளையின் தாயிடம் கொடுக்கும்படி ராஜாவிடம் கூறினாள்?***

*ராஜா உயிரோடிக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்.*

*அதைக்கேட்ட பொழுது, உயிரோடிக்கிற பிள்ளையின் தாயின் குடல் தன் பிள்ளைக்காகத் துடித்ததினால் ராஜாவை நோக்கி, ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம், அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்* (1 *இராஜா* 3 : 26)

5. ***எருசலேமுக்கு வந்த சேபாவின் ராஜஸ்திரீ எவற்றைக் கண்டு ஆச்சரியத்தால் பிரமை கொண்டாள்?***

*சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரமனையையும், அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும் , அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும் , அவர்கள் வஸ்திரங்களையும் , அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்ட போது அவள் ஆச்சரியத்தால் பிரமை கொண்டாள் (1 இராஜா* 10:4, 5).

6. ***சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தைக் கண்டு பிரமை கொண்டு, அவனிடம் கூறியது என்ன?***

*சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தைக் கண்டு ஆச்சரியத்தால் பிரமை கொண்டு ராஜாவை நோக்கி, உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று.*

*நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை. இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது.* (1*இராஜா 10* : 6, 7).

## VIII *விரிவான விடையளி* (6 Marks)

**1.** ***கிபியோனில், இராத்திரியில் சொப்பனத்திலே தனக்குத் தரிசனமான தேவனிடம் சாலொமோன் செய்த உகந்த விண்ணப்பம் என்ன?***

*சாலொமோன், ''என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்.*

*நீர் தெரிந்து கொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.*
*ஆகையால், உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும்"' என்றான் (1 இராஜா* 3:7-9).

**2. *சாலொமோனின் விண்ணப்பம் ஏன் ஆண்டவருடைய பார்வையில் உகந்ததாயிருந்தது? அவர் அவனுக்குக் கொடுத்த ஆசீர்வாதமும் வாக்குத்தத்தமும் என்ன?***
*சாலொமோன் நீடித்த நாட்களையும் ஐசுவரியத்தையும் , சத்துருக்களின் பிராணனையும் கேளாமல் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வையில் உகந்ததாயிருந்தது.*
*ஆகையினால் தேவன் அவனை நோக்கி, உன் வார்த்தையின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப் பின் எழும்புவதுமில்லை.*
*இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை.*
*உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக் கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன் என்றார்* (1 *இராஜா* 3 :12-14).

**3. *வேசிகளான இரண்டு ஸ்திரீகள் சாலொமோன் ராஜாவினிடத்தில் வந்து முறையிட்டது என்ன?***
*வேசிகளான இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து நின்றார்கள் , அவர்களில் ஒருத்தி என் ஆண்டவனே , நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம். நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன்.*
*நான் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின் மேல் புரண்டு படுத்ததினால் அந்த பிள்ளை செத்து போயிற்று.*
*அப்பொழுது உமது அடியாள் நித்திரைபண்ணுகையில், இவள் நடு ஜாமத்தில் எழுந்து என் பக்கத்தில் கிடக்கிற என் பிள்ளையை எடுத்து தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து என் மார்பிலே கிடத்தி விட்டாள்.*
*என் பிள்ளைக்குப் பால் கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்தபோது அது செத்துக் கிடந்தது. பொழுதுவிடிந்தபின் நான் அதை உற்றுப்பார்க்கும், போது அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள்.*
*அதற்கு மற்ற ஸ்திரீ அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை,*

*உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள். இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்* (1 *இராஜா* 3 :17-22).

**4. *பிள்ளையைக் குறித்து இரண்டு ஸ்திரிகளின் வழக்கை சாலொமோன் ராஜா எவ்வாறு நியாயந்தீர்த்தான்?***

*இரண்டு ஸ்திரீகளும் பிள்ளையைக் குறித்து ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள். அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள் அப்படியல்ல , செத்தது உன் பிள்ளை , உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி ,ஒரு பட்டயத்தைக் கொண்டு வாருங்கள் என்றான் அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டு வ்நதார்கள்.*

*ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்.*

*அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால் , ராஜாவை நோக்கி ஐயோ, என் ஆண்டவனே , உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம் அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள். மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள்.*

*அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்து விடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்* (1 *இராஜா* 3 : 23-27).

**IX** ***<u>போதனை</u>*** (2 Marks)

*நம்மை நாமே தாழ்த்தி, கர்த்தர் நம்மிடம் ஒப்புவித்திருக்கும் உத்தரவாதங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஞானத்தையும் உணர்வையும அவரிடம் கேட்டால், அவர் நிச்சயமாகவே நம் வேண்டுதலை அருளிச் செய்து தம்முடைய மகிமைக்கென்று ஆவிக்குரியதும் உலகப்பிரகாரமானதுமான சகல ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீரவதிப்பார்.*

***********

## *பாடம் – 10*

# சாலொமோன் கட்டின தேவாலயம்

(1 *இராஜா* 5 : 10, 17, 18 ; 6 : 2, 3, 7 – 9, 15, 19 -23, 28 - 38 ;
8 : 6, 10, 11, 62, 63 ; 2 *நாளா.* 5 : 12,13)

**I** ***<u>மனப்பாட வசனம்</u>* :** (2 Marks)

"*நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*

*ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் ; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது ; நீங்களே அந்த ஆலயம்*" **(1 *கொரிந்தியர்* 3 : 16, 17).**

**II** ***<u>பொருத்துக :</u>*** (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தேவாலயம் | - | கர்த்தருடைய வீடு | (2 நாளா 5 : 13) |
| 2. | கர்த்தருடைய ஆலயம் | - | கர்த்தருடைய மகிமை | (1இரா. 8 : 11) |
| 3. | சந்நிதி ஸ்தானம் | - | மகா பரிசுத்த ஸ்தானம் | (1இரா. 8 : 6) |
| 4. | ஆலயத்தின் அஸ்திபாரம் | - | பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்கள் | (1இரா. 5 : 17) |
| 5. | ஆலயம் | - | பணிதீர்ந்த கற்கள் | (1இரா. 6 : 7) |
| 6. | ஆலயத்தின் மச்சு | - | கேதுருமர உத்திரங்கள் | (1இரா. 6 : 9) |
| 7. | ஆலயத்தின் தளம் | - | தேவதாரி பலகை | (1இரா. 6 : 15) |
| 8. | உடன்படிக்கைப் பெட்டி | - | சந்நிதி ஸ்தானம் | (1இரா. 6 : 19) |
| 9. | மேகம் | - | கர்த்தருடைய மகிமை | (2 நாளா 5 : 13, 14) |
| 10. | ஆசாப் | - | பாடகரான லேவியர் | (2 நாளா 5 : 12) |
| 11. | ஏமான் | - | பாடகரான லேவியர் | (2 நாளா 5 : 12) |
| 12. | சீப் | - | இரண்டாம் மாதம் | (1இரா. 6 : 1) |
| 13. | பூல் | - | எட்டாம் மாதம் | (1இரா. 6 : 38) |

## III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. __________சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுரு மரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்தான்.
2. ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடும்படி __________ , __________ கற்களைக் கொண்டுவர சாலொமோன் கட்டளையிட்டான்.
3. சாலொமோனின் தேவாலயம் __________ கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது.
4. சாலொமோனின் தேவாலயம் கட்டப்படுகிறபோது __________ , __________ முதலான இருப்பு ஆயுதங்களின் சத்தம் கேட்கப்படவில்லை.
5. சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே __________ ஆயத்தப்படுத்தினான்.
6. சாலொமோன் ஆலயத்தின் உட்புறத்தை __________ தகட்டால் மூடினான்.
7. சாலொமோன் நாலாம் வருஷம் __________ மாதம் கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டான் .
8. சாலொமோன் __________ வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதம் ஆலயமுழுதும் சகல __________ படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித்தீர்த்தான்.
9. __________கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சந்நிதிஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே வைத்தார்கள்.
10. ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில் __________ கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

**விடைகள்**

1. ஈராம் (1 இராஜா 5 : 10)
2. பெரிதும், விலையேறப்பெற்றதுமான் (1இராஜா 5 : 17)
3. பணிதீர்ந்து (1 இராஜா 6 : 7)
4. சுத்திகள்,வாச்சிகள் (1 இராஜா 6 : 7)
5. சந்நிதி ஸ்தானம் (1 இராஜா 6 : 19)
6. பசும் பொன் (1 இராஜா 6 : 21)
7. சீப் (1 இராஜா 6 : 37)
8. பதினோராம், சட்டதிட்டத்தின் (1 இராஜா 6 : 38)
9. ஆசாரியர்கள் (1 இராஜா 8 : 6)
10. மேகம் (1 இராஜா 8 : 10)

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :* (1 Mark)

1. **சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தில் எத்தனை கேருபீன்களை செய்து வைத்தான்?**
   a) இரண்டு b) நான்கு c) ஆறு d) எட்டு
2. **சந்நிதி ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த கேருபீன்களின் உயரம் என்ன?**
   a) மூன்று முழம் b) ஐந்து முழம் c) பத்து முழம் d) அறுபது முழம்
3. **சாலொமோன் தேவாலயத்தைக் கட்டிமுடிக்க எத்தனை வருடங்கள் சென்றது?**
   a) ஒரு வருடம் b) ஏழு வருடம்
   c) இருபது வருடம் d) நாற்பத்தெட்டு வருடம்
4. **சாலொமோன் சமாதானபலிகளாக எத்தனை மாடுகளை பலியிட்டான்?**
   a) ஆயிரம் b) பத்தாயிரம் c) இருபத்தீராயிரம் d) முப்பதாயிரம்
5. **சாலொமோன் சமாதான பலிகளாக எத்தனை ஆடுகளைப் பலியிட்டான்?**
   a) இருபத்தீராயிரம் b) அறுபதாயிரம்
   c) இலட்சத்திருபதினாயிரம் d) இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்
6. **சாலொமோனின் தேவாலயத்திலிருந்த பாடகரான லேவியரனை வரும் எப்படிப்பட்ட வஸ்திரங்களைத் தரித்திருந்தார்கள்?**
   a) மெல்லிய புடவைகள் b) சித்திரதையலாடை
   c) அலங்காரவஸ்திரம் d) வெண் வஸ்திரம்
7. **சாலொமோனின் தேவாலயத்தில் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் எத்தனை பேர் இருந்தார்கள்?**
   a) முப்பது b) அறுபது c) நூறு d) நூற்றிருபது
8. **கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தி ஆலயத்தை பிரதிஷ்டை செய்த ராஜா யார்?**
   a) சாலொமோன் ராஜா b) தாவீது ராஜா
   c) எசேக்கியா ராஜா d) யோசபாத் ராஜா

<u>விடைகள்</u>

1. a. (1இராஜா 6 : 23)
2. c. (1இராஜா 6 : 23)
3. b. (1இராஜா 6 : 38)
4. c. (1இராஜா 8 : 63)
5. c. (1இராஜா 8 : 63)
6. a. (2 நாளாகமம் 5:12)
7. d. (2 நாளாகமம் 5:12)
8. a. (1இராஜா 8 : 63)

**V** <u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி :</u> (2 Marks)

1. **தேவாலயம் கட்டுவதற்காக ஈராம் சாலொமோனுக்குக் கொடுத்தது என்ன ?**
*தேவாலயம் கட்டுவதற்காக ஈராம் சாலொமோனுக்கு வேண்டிய மட்டும் கேதுருமரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்தான்* (1இராஜா. 5: 10).

2. **கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுவதற்காக எப்படிப்பட்ட கற்களைக் கொண்டு வரும்படி சாலொமோன் ராஜா கட்டளையிட்டான்?**
*வெட்டின கல்லால் ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட, பெரிதும் விலையேறப் பெற்றதுமான கற்களைக் கொண்டுவர சாலொமோன் ராஜா கட்டளையிட்டான்* (1 இராஜா 5 : 17).

3. **சாலொமோனின் நாட்களில் ஆலயத்தைக் கட்டும்படி மரங்களையும் கற்களையும் ஆயத்தப்படுத்தினவர்கள் யார்?**
*சாலொமோனின் நாட்களில் ஆலயத்தைக் கட்ட, சாலொமோனின் சிற்பாசாரிகளும், ஈராமின் சிற்பாசாரிகளும், கிபலி ஊராரும் மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப்படுத்தினார்கள்* (1 இரா. 5:18) .

4. **சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயத்தின் அளவு என்ன?**
*சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது* (1இராஜா 6 : 2).

5. **சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயத்தின் முகப்பு மண்டபத்தின் அளவைக் குறிப்பிடுக?**
*மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும், ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருந்தது* (1இராஜா 6 : 3).

6. **கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுகையில், ஏன் சுத்திகள் வாச்சிகள் முதலான இருப்பு ஆயுதங்களின் சத்தம் கேட்கப்படவில்லை?**
*கர்த்தருடைய ஆலயம் பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது. ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள்*

*முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை* (1*இராஜா* 6 : 7)

7. ***சாலொமோன் கட்டின ஆலயத்தில் நடு அறைகளுக்கும் மூன்றாவது அறைகளுக்கும் செல்லும் வழியைப் பற்றி எழுது?***
*நடு அறைகளுக்குப் போகிற வாசற்படி ஆலயத்தின் வலதுபுறத்தில் இருந்தது. சுழற்படிகளால் நடு அறைகளுக்கும், நடு அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள்* (1*இராஜா* 6 : 8).

8. ***சாலொமோன் ஆலயத்தின் உட்புறத்தை எவ்வாறு கட்டி முடித்தான்?***
*ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, கேதுரு பலகைகளால் மூடி, மரவேலையாக்கி, தளத்தை தேவதாரி விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்தி, பசும் பொன் தகட்டால் மூடினான்* (1*இரா.* 6 :15, 21)

9. ***சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தில் வைத்திருந்த கேருபீன்கள் எவற்றால் செய்யயப்பட்டது? அவைகளின் உயரம் என்ன?***
*சாலொமோன், சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து பொன் தகட்டால் மூடினான். அவை ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது* (1*இராஜா* 6 : 23, 28).

10. ***சாலொமோன் ஆலயத்தின் சுவர்களை எவ்வாறு அலங்கரித்தான்?***
*சாலொமோன் ஆலயத்தின் சுவர்களையெல்லாம் சுற்றிலும் உள்ளும் புறம்புமாகக் கேருபீன்களும், பேரீந்துகளும், மலர்ந்த பூக்களுமான சித்திரங்களும் கொத்து வேலைகளுமாக்கினான்* (1*இராஜா* 6 : 29).

11. ***சாலொமோன் ஆலயத்தின் உட்பிராகாரத்தை எவ்வாறு கட்டினான்?***
*சாலொமோன் ஆலயத்தின் உட்பிராகாரத்தை மூன்று வரிசை வெட்டின கற்களாலும், ஒரு வரிசை கேதுருப் பலகைகளாலும் கட்டினான்* (1*இராஜா* 6 : 36).

12. ***சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்கு எப்பொழுது அஸ்திபாரம் போட்டான்? எப்பொழுது கட்டி முடித்தான்?***
   a) *சாலொமோனுடைய இராஜ்ய பாரத்தின் நாலாம் வருஷம் சீப் மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டான்* (1*இரா.* 6 : 37)
   b) *பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயம் முழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித்தீர்த்தான்* (1*இராஜா* 6 : 38).

13. ***முதன் முதலாக கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டிய ராஜா யார்? அதைக் கட்டி முடிக்க எவ்வளவு வருடம் சென்றது?***
   a) *சாலொமோன் ராஜா* (1*இராஜா* 6 : 2)
   b) *ஏழு வருடம்* (1*இராஜா* 6:38)

14. ***சாலொமோன் கட்டின தேவாலயத்தில் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி எங்கு, யாரால் வைக்கப்பட்டது?***
*கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின் கீழே, ஆசாரியர்களால் வைக்கப்பட்டது* (1*இராஜா* 8 : 6)

15. ***கர்த்தருடைய மகிமை எப்போது தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று?***

*ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும் தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று* (2 *நாளா* 5 : 11, 13, 14)

16. ***சாலொமோன் கட்டின ஆலயத்தில் நின்ற பாடகரான லேவியர்கள் யார்?***
*ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தார் அனைவரும் பாடகர்களாக நின்றார்கள்* (2 *நாளாகமம்* 5 : 12)

17. ***சாலொமோன் கட்டின ஆலயத்தில் இசைக்கப்பட்ட இசைக்கருவிகள் யாவை?***
*கைத்தாளங்கள், தம்புருகள், சுரமண்டலங்கள், பூரிகைகள் முதலான இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன* (2 *நாளாகமம்* 5 : 12, 13)

18. ***பாடகரான லேவியரும் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்களும் கர்த்தரை எவ்வாறு ஸ்தோத்திரித்துப் பாடினார்கள்?***
*அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று ஏகசத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள்* (2 *நாளாகமம்* 5 : 13)

19. ***சாலொமோன் கட்டின ஆலயத்தில் ஏன் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற்போயிற்று?***
*ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில் மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற் போயிற்று* (1*இராஜா* 8 : 10, 11)

20. ***சாலொமோன் கர்த்தருக்குக் கட்டின ஆலயத்தை எவ்வாறு பிரதிஷ்டைபண்ணினார்கள்?***
*சாலொமோன் ராஜாவும் அவனோடே இருந்த இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் சமாதானபலிகளாக இருபத்தீராயிரம் மாடுகளையும் இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டு ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள்* (1*இராஜா* 8 : 63).

## VI ***<u>சுருக்கமான விடையளி</u> :*** (4 Marks)

**1. *சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் ஆயத்தப்படுத்திய சந்நிதி ஸ்தானத்தைப் பற்றி எழுது.***

a) *சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்தினான்* (1*இராஜா* 6 : 19)

b) *சந்நிதி ஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமும், இருபது முழ உயரமுமாயிருந்தது. அதைப் பசும்பொன் தகட்டால் மூடினான்* (1*இராஜா* 6 : 20)

c) *சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் பத்து முழ உயரமான இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான். அதை பசும்பொன் தகட்டால் மூடினான். (இராஜா* 6 : 23, 28).

d) *அதன் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்தான்* (1*இராஜா* 6 : 31).

**2.** ***சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்குச் செய்த கதவுகளைப் பற்றி குறிப்பு எழுது.***

*சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்தான். மேல்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்தில் ஒரு பங்காயிருந்தது.*

*ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் அவன் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்து, அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடினான்* (1*இராஜா* 6 : 31,32)

## VII *விரிவான விடையளி* : (6 Marks)

1. ***சாலொமோன் கட்டின ஆலயத்தின் வாசலைப் பற்றி எழுது.***
   *சாலொமோன் ராஜா தேவாலயத்தின் வாசலுக்கு ஒலிவமர நிலைகளைச் செய்தான். அது சுவர் அளவில் நாலத்தொரு பங்காயிருந்தது. அதின் இரண்டு கதவுகளும் தேவதாரிப் பலகைகளால் செய்யப்பட்டிருந்தது. ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப்பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருந்தது. அவைகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலையைச் செய்து, சித்திரங்களுக்குச் சரியாகச் செய்யப்பட்ட பொன்தகட்டால் அவைகளை மூடினான்* (1*இராஜா* 6 : 33, 34, 35)

2. ***சாலொமோன் கட்டின ஆலயத்தில் நின்ற பாடகரான லேவியரைப் பற்றியும் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்களைப் பற்றியும் எழுது?***
   *சாலொமோன் கட்டின ஆலயத்தில் ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லிய புடவைகளைத் தரித்து, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள். அவர்களோடும் கூடப் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபது பேர் நின்றார்கள்.*
   *அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள். ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தை தொனிக்கப்பண்ணி கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. (2 நாளா.* 5 : 12, 13)

## VIII *போதனை:* (2 Marks)

*புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஜனங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள். எனவே நாம் பரிசுத்த ஆவியைப் பெற்று, நம் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.*

****************

## *பாடம் - 11*

# யூதாஸ் காத்தராகிய இயேசுவைக் காட்டிக்கொடுத்தது

(*மத்*. 26:14-16; 27:3-5; *மாற்*. 14: 44-46; *லூக்*. 22:3-6, 21,47,48,52-54;
*யோவா*. 12:4-6; 17:12; *சகரியா* 11:12)

**I** ***மனப்பாட வசனம்*** (2 Marks)

*"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.*

*பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ; சிலர் அதை, இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்"* **(1 தீமோத்தேயு : 6 : 9,10).**

**II** ***பொருத்துக*** (1 Mark)

1. *யூதாஸ் காரியோத்து* - *சீமோனுடைய குமாரன்* (*யோவான்* 12 : 4)
2. *யூதாஸ் காரியோத்து* - *இயேசுவைக் காட்டிக்கொடுத்தவன்* (*யோவான்* 12 : 4)
3. *யூதாஸ் காரியோத்து* - *பணப்பையை சுமக்கிறவன்* (*யோவான்* 12 : 6)
4. *யூதாஸ் காரியோத்து* - *திருடன்* (*யோவான்* 12 : 6)
5. *யூதாஸ் காரியோத்து* - *கேட்டின் மகன்* (*யோவான்* 17 : 12)
6. *யூதாஸ் காரியோத்து* - *குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக்-கொடுத்தவன்* (*மத்தேயு* 27 : 4)
7. *யூதாஸ்* - *ஸ்காரியோத்து* (*லூக்கா* 22 : 3)

**III** ***கோடிட்ட இடங்களை நிரப்புக*** (1 Mark)

1. __________________*நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகனாகிய யூதாஸ் கெட்டுப்போனான் என்று இயேசு கூறினார்.*
2. *ஸ்காரியோத் என்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள்* __________________*புகுந்தான்.*
3. __________________ *இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்.*
4. *யூதாஸ் குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால்* __________________ *செய்தேன் என்றான்.*

| விடைகள் | |
|---|---|
| 1. வேதவாக்கியம் | (யோவான் 17 : 12) |
| 2. சாத்தான் | (லூக்கா 22 : 3) |
| 3. யூதாஸ் | (லூக்கா 22 : 47) |
| 4. பாவம் | (மத்தேயு 27 : 4) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது* (1 Mark)

1. ***மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசிய தைலத்தை எத்தனை பணத்திற்கு விற்று தரித்திரருக்கு கொடுக்கலாம் என்று யூதாஸ் கூறினான்?***
   a) முப்பது b) முந்நூறு c) ஆயிரம் d) இரண்டாயிரம்
2. ***இயேசுவின் சீஷரில் பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமந்த சீஷன் யார் ?***
   a) பேதுரு b) யோவான் c) யாக்கோபு d) யூதாஸ்
3. ***யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தது யார் ?***
   a) மல்கியா b) யோனா c) சகரியா d) ஆபகூக்
4. ***யூதாஸ் எத்தனை வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் ?***
   a) முப்பது b) அறுபது c) நூறு d) முந்நூறு
5. ***யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக வாங்கிய வெள்ளிக்காசை எங்கே எறிந்தான் ?***
   a) குயவனின் நிலத்தில் b) தேவாலயத்தில் c) வீட்டில் d) வெளியில்

| விடைகள் | |
|---|---|
| 1) b. (யோவான் 12 : 5) | 3) c. (சகரியா 11 : 12) |
| 2) d. (யோவான் 12 : 6) | 4) a. (மத்தேயு 27 : 3) |
| | 5) b. (மத்தேயு 27 : 5) |

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* (3 Marks)

**1.** ***"இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது " (லூக்கா 22 : 21)***

*யார்* : இயேசு

*யாரிடம்* : சீஷர்களிடம்

*எப்போது* : இயேசு பாடுபடுகிறதற்கு முன்னே தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலருடன் பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லா அப்பப் பண்டிகையை

*ஆசரித்தார். வேளை வந்தபோது, அவரும் அவருடனே கூட பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.*

**2. "இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது " (லூக்கா 22 : 53).**

*யார் : இயேசு*

*யாரிடம் : தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத் தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கிக் கூறியது.*

*எப்போது : இயேசு தம்மைப் பிடிக்கும்படி வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத்தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி, "ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதைப் போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டுவந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனே இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை" என்று கூறும் போது இந்த வார்த்தைகளைக் கூறினார்.*

**3. "யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் " (லூக்கா 22 : 48)**

*யார் : இயேசு*

*யாரிடம் : யூதாசிடம்*

*எப்போது : பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுப்பதற்காக பிரதான ஆசாரியரிடத்திலிருந்து முப்பது வெள்ளிக்காசைக் கூலியாக வாங்கிவிட்டு நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன்தான்; அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவ்வாறே இயேசுவைப் பிடிக்கும்படி ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே யூதாஸ் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி இவ்வாறு கூறினார்.*

**4. "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ் செய்தேன்." (மத்தேயு 27 : 4)**

*யார் : யூதாஸ்*

*யாரிடம் : பிரதான ஆசாரியரிடமும் மூப்பரிடமும்*

*எப்போது : பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தான். சகல பிரதான ஆசாரியரும, ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலை செய்யும்படி , அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய் , தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள். அப்பொழுது யூதாஸ் அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான*

ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து இவ்வாறு கூறினான்.

**5. "எங்களுக்கென்ன, அது உன்பாடு " (மத்தேயு 27 : 4)**

யார் : பிரதான ஆசாரியரும் , மூப்பரும்

யாரிடம் : யூதாசிடம்

எப்போது : இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக் காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" என்றான். அதற்கு அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

**VI ஓரிரு வாக்கியங்களில் விடையளி** (2 Marks)

1. **யூதாஸ் யாருடைய குமாரன்? அவனுடைய மறுபெயர் என்ன?**
யூதாஸ் சீமோனுடைய குமாரன் . அவனுடைய மறுபெயர் ஸ்காரியோத்து (லூக்க 22 : 3 ; யோவான் 12 : 4).

2. **பரிமளதைலத்தை எவ்வளவு பணத்துக்கு விற்று அதை யாருக்குக் கொடுக்கலாம் என்று யூதாஸ்காரியோத்து கூறினான்?**
பரிமளதைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று தரித்திரருக்கு கொடுக்கலாம் என்று யூதாஸ்காரியோத்து கூறினான் (யோவான 12 : 5).

3. **தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்று யூதாஸ் சொல்லக்காரணம் என்ன?**
அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் அப்படிச் சொன்னான் (யோவான 12 : 6).

4. **இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து யூதாஸ் யாரோடு ஆலோசனை பண்ணினான்?**
யூதாஸ் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து ஆலோசனை பண்ணினான் (லூக்கா 22 : 4)

5. **இயேசுவின் சீஷரில் யாருக்குள் சாத்தான் புகுந்தான்? யார் அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள்?**
பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். பிரதான ஆசாரியரும் சேனைத்தலைவரும் அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள் (லூக்கா 22 : 3, 5)

6. **யூதாஸ் எந்த வேளையில், எத்தனை வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி சமயம் தேடினான்?**

*யூதாஸ் ஜனக்கூட்டமில்லாத வேளையில் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி சமயம் தேடினான் (மத்தேயு* 26 : 15, *லூக்கா* 22:6).

7. ***இயேசு சீஷர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக்கொடுப்பான் என்பதை எப்போது எவ்வாறு முன்னறிவித்தார்?***
*இயேசுவும் அவருடனேகூட பன்னிரண்டு அப்போஸ்தலரும் பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்போது பந்தியிருந்தார்கள். அப்பொழுது இயேசு , இதோ, என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது என்று அறிவித்தார்* (*லூக்கா* 22 : 21).

8. ***இயேசு ' கேட்டின் மகன்' என்று யாரைக் கூறினார்? அவன் எதினால் அவரைக் காட்டிக் கொடுத்தான்?***
*இயேசு யூதாசை கேட்டின் மகன் என்று கூறினார்.* (*யோவான்* 17 : 12) *அவன் அவரை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தான்* (*லூக்கா* 22 : 47).

9. ***யூதாஸ் இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் வந்தபோது, அவர் அவனிடத்தில் என்ன கேட்டார்?***
*யூதாஸ் இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் வந்தபோது அவர் அவனை நோக்கி, யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் என்றார்* (*லூக்கா* 22 : 48).

10. ***இயேசுவைப் பிடித்தபின்பு எங்கு கொண்டுபோய் விட்டார்கள்? தூரத்திலே அவருக்குப் பின் சென்ற சீஷன் யார்?***
*இயேசுவைப் பிடித்தபின்பு, அவரைப் பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்றான்* (*லூக்கா* 22 : 54).

11. ***இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் எதைக்கண்டு மனஸ்தாபப்பட்டான்? மனஸ்தாபப்பட்டு அவன் கூறியது என்ன?***
*இயேசு மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, யூதாஸ் மனஸ்தாபப்பட்டான். அவன் மனஸ்தாபப்பட்டு, "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் " என்றான் (மத்.* 27 : 3, 4).

12. ***குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தது யார்? அவன் எவ்வாறு செத்தான்?***
*யூதாஸ் காரியோத்து குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தான். அவன் நான்று கொண்டு செத்தான்* (*மத்தேயு* 27 : 4, 5).

13. ***யூதாஸ் இயேசுவை எத்தனைக் காசுக்குக் காட்டிக் கொடுத்தான்? அவன் அந்தக் காசை என்ன செய்தான்?***
*யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுக்கு இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். அநதக் காசை தேவாலயத்திலே எறிந்து விட்டான்* (*மத்தேயு* 27 : 3, 5).

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u>*** : (4 Marks)

1. ***யூதாஸ்காரியோத்து என்பவன் யார்?***
*யூதாஸ் சீமோனுடைய குமாரன். அவன் பன்னிரண்டு சீஷரில் ஒருவன். அவன் திருடனும் பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனாகவும் இருந்தான். முப்பது வெள்ளிக்காசுக்காக குற்றமில்லாத இரத்தத்தை (இயேசுவை) முத்தத்தினால் காட்டிக்கொடுத்தவன் (யோவா.* 12 : 4, 6 ; *மத்தேயு* 27 : 3 - 5).

2. ***யூதாஸ் இயேசுவை எவ்வாறு காட்டிக் கொடுத்தான்?***
*யூதாஸ் நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான் அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டு போங்கள் என்று குறிப்பு சொல்லியிருந்தான். அவன் வந்தவுடனே, அவரண்டையில் சேர்ந்து ரபீ, ரபீ என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள் (மாற்கு* 14 : 44 - 46) .

3. ***பழைய ஏற்பாட்டில் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசு காட்டிக் கொடுக்கப்படுவார் என்பதைத் தீர்க்கதரிசனமாக கூறிய தீர்க்கதரிசி யார்? அவர் கூறிய தீர்க்கதரிசனம் என்ன?***
*பழைய ஏற்பாட்டில் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசு காட்டிக் கொடுக்கப்படுவார் என்பதை தீர்க்கதரிசனமாக கூறிய தீர்க்கதரிசி சகரியா.*
*<u>அவர் கூறிய தீர்க்கதரிசனம்</u> : உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்னேன். அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். (சகரி.* 11 : 12).

4. ***யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறேன் என்று கூறியபோது சந்தோஷப்பட்டவர்கள் யார்? குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து பாவஞ்செய்தேன் என்று அவன் கூறிய போது அவர்கள் கூறிய மறுமொழி என்ன?***
*யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறேன் என்று கூறியபோது பிரதான ஆசாரியரும், சேனைத் தலைவர்களும் சந்தோஷப்பட்டார்கள் (லூக்.* 22 : 5).
*குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து பாவஞ்செய்தேன் என்று யூதாஸ் கூறிய போது, 'எங்களுக்கென்ன, அது உன்பாடு' என்றார்கள் (மத்தேயு* 27 : 4)

5. ***தம்மைப் பிடிக்க வந்தவர்களிடம் இயேசு கூறியது என்ன?***
*இயேசு தம்மைப் பிடிக்க வந்தவர்களை நோக்கி, "ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதைப்போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே.*

*நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை. இதுவே உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது "என்றார்*
*(லூக்கா.* 22 : 52 - 53).

6. ***யூதாஸின் தாமதமான மனஸ்தாபத்தையும் அதினால் அவனுக்கு ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி எழுது***
*இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து*

*‘குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து பாவஞ்செய்தேன்’ என்று யூதாஸ் கூறியபோது ‘எங்களுக்கு என்ன, அது உன்பாடு’ என்றார்கள். அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு புறப்பட்டுப் போய், நான்று கொண்டு செத்தான் (மத்தேயு* 27 : 3 ,4 ,5).

**VIII** ***விரிவான விடையளி*** (6 Marks)

***1. பன்னிரு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ், சாத்தானுக்கு இடம் கொடுத்து, எவ்விதம் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் என்பதை விவரி.***

*எருசலேமிலே பஸ்கா எனப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கும் நாள் சமீபமாயிற்று. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகை தேடினார்கள். அப்பொழுது பன்னிரு சீஷர்களில் ஒருவனாகிய யூதாசுக்குள் பிசாசு புகுந்ததினால், அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனைபண்ணினான். அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்கு முப்பது வெள்ளிக்காசு கொடுக்க உடன்பட்டார்கள். அதற்கு அவன் சம்மதித்து, ஜனக்கூட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயம் தேடினான் (லூக்கா .* 22:1-6).

*பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தபோது , இயேசுவும் பஸ்காவை ஆசரிக்கும்படியாக தன் சீஷர்களோடு பந்தியிருந்தார். இயேசுவிடத்திலிருந்து அப்பத்துணிக்கையை யூதாஸ் வாங்கின பின்பு, மறுபடியும் சாத்தான் அவனுக்குள் புகுந்தான். உடனே அவன் பந்தியை விட்டு எழும்பி அவரைக் காட்டிக்கொடுக்கும் நோக்கத்தோடே புறப்பட்டுப் போனான் (யோவான்* 13 : 27 – 30). *இயேசு போகும் இடத்தை அறிந்திருந்த யூதாஸ், போர்சேவகர்களின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு அவ்விடத்துக்கு வந்தான் ( யோவான்* 18 : 2, 3). *சீஷர்களுக்கு மத்தியிலிருந்த இயேசுவிடம் வந்து அவரை முத்தம் செய்து, இப்படியாக தன்னோடுகூட வந்தவர்களுக்கு அவரை அடையாளம் காட்டிக்கொடுத்தான். உடனே போர்சேவகர்கள் அவர்கிட்ட வந்து அவரைப் பிடித்தார்கள் ( மத்.* 26 : 48 -50 ).

**IX** ***போதனை* :** (2 Marks)

*அழிந்துபோகிற பூமிக்குரிய பொருளுக்காக அழியாத பரலோகப் பொருளை நாம் இழந்து போகக் கூடாது.*

****************

பாடம் - 12

# கர்த்தராகிய இயேசு மல்குஸின் காதைத் தொட்டுச் சுகமாக்கியது

(யோவான் 18 : 1 - 11 ; லூக்கா 22 : 51 ; மத்தேயு 26 : 52)

**I** **மனப்பாட வசனம் :** (2 Marks)

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் ; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் ; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் ; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.

இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் ; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்"

**(மத்தேயு 5 : 44, 45).**

**II** **பொருத்துக** (1 Mark)

1. கெதரோன் - ஆறு (யோவான் 18 : 1)
2. மல்குஸ் - பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் (யோவான் 18 : 10)

**III** **கோடிட்ட இடங்களை நிரப்புக** (1 Mark)

1. இயேசு தம்முடைய சீஷருடனேகூட _______________என்னும் ஆற்றுக்கு அப்புறம் இருந்த தோட்டத்திற்குப் போனார்.
2. _______________இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.
3. _______________தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்..
4. _______________ பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாயிருந்தான்.

**விடைகள்**

1. கெதரோன் (யோவான் 18 : 1)
2. யூதாஸ் (யோவான் 18 : 2)
3. சீமோன் பேதுரு (யோவான் 18 : 10)
4. மல்குஸ் (யோவான் 18 : 10)

**IV** ***<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது</u>*** (1 Mark)

1. ***தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து யூதாசுக்கு எதிர் கொண்டு போனது யார்?***
   a) *இயேசு* b) *பேதுரு* c) *யோவான்* d) *யாக்கோபு*
2. ***சீமோன் பேதுரு யாரை வலதுகாதற வெட்டினான்?***
   a) *பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை* b) *போர்ச்சேவகனை*
   c) *யூதாஸ் காரியோத்தை* d) *பரிசேயரின் ஊழியக்காரனை*
3. ***நாம் யாரை சிநேகிக்க வேண்டும்?***
   a) *பகைக்கிறவர்களை* b) *நிந்திக்கிறவர்களை*
   c) *சத்துருக்களை* d) *சபிக்கிறவர்களை*
4. ***நாம் யாரை ஆசீர்வதிக்க வேண்டும்?***
   a) *துன்பப்படுத்துகிறவர்களை* b) *சபிக்கிறவர்களை*
   c) *பகைக்கிறவர்களை* d) *சத்துருக்களை*

***விடைகள்***

1. a. (*யோவான்* 18 : 4) 3. c. (*மத்தேயு* 5 : 44)
2. a. (*யோவான்* 18 : 10) 4. b. (*மத்தேயு* 5 : 44)

**V** ***<u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>*** (3 Marks)

1. ***"யாரைத் தேடுகிறீர்கள் " (யோவான் 18 : 4)***

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *போர்ச்சேவகரின் கூட்டத்திடமும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரிடமும் யூதாஸிடமும்*

*எப்போது* : *இயேசு தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போயிருந்தார். அப்பொழுது யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான். இயேசு அவர்களுக்கு எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி இவ்வாறு கேட்டார்.*

2. ***"நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் " (யோவான் 18 : 5)***

*யார்* : *போர்ச் சேவகரின் கூட்டத்தாரும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரும்*

*யாரிடம்* : *இயேசுவிடம்*

*எப்போது* : *இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு*

*பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் கெதரோன் ஆற்றுக்கு அப்புறம் இருந்த தோட்டத்திற்குப் போனான். அப்போது இயேசு அவர்களுக்கு எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக இவ்வாறு கூறினார்கள்.*

3. **a) "உன் பட்டயத்தை உறையிலே போடு" (யோவான் 18 : 11)**
**b) "*பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்* " (*மத்தேயு* 26 : 52).**

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *பேதுருவிடம்*

*எப்போது* : *போர்ச்சேவகரின் கூட்டத்தாரும், பிரதான ஆசாரியார், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரும் இயேசுவை பிடிக்கும்படி கெதரோன் ஆற்றுக்கு அப்புறம் இருந்த தோட்டத்திற்கு வந்தார்கள். அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான். அந்த சந்தர்பத்தில் இயேசு பேதுருவை நோக்கி இவ்வாறு கூறினார்.*

**VI *ஓரிரு வாக்கியங் களில் விடையளி*** (2 Marks)

1. ***இயேசு கெதரோன் ஆற்றுக்கு அப்புறம் இருந்த தோட்டத்திற்குச் சென்றதை யூதாஸ் எவ்வாறு அறிந்திருந்தான்?***
*இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால் அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான் (யோவான்* 18 : 2).

2. ***இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் யாரைக் கூட்டிக்கொண்டு வந்தான்?***
*யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வந்தான் (யோவான்* 18 : 3)

3. ***இயேசுவைப் பிடிக்கும்படி வந்தவர்கள் கொண்டுவந்த பொருட்கள் யாவை?***
*இயேசுவை பிடிக்கும்படி வந்தவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் வந்தார்கள் (யோவான்* 18 : 3)

4. ***இயேசு தம்மைப் பிடிக்கும்படியாய் வந்தவர்களுக்கு எதிர்கொண்டுபோய், அவர்களிடம் வினவியது என்ன ? அவர்கள் கூறிய மறுமொழி என்ன?***
*இயேசு அவர்களை நோக்கி , "யாரைத் தேடுகிறீர்கள்" என்றார்.*
*அதற்கு அவர்கள் , நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்*
*(யோவான்* 18 : 4, 5)

5. ***நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்று சொன்னவர்களிடம் இயேசு கூறியது என்ன? அப்போது அவர்களுக்குச் சம்பவித்தது என்ன?***
*'நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்' என்று சொன்னவர்களிடம் 'நான் தான்' என்று இயேசு கூறினார். அப்போது அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள் (யோவான்* 18:6).

6. ***“நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்து போகவில்லையென்று” இயேசு சொல்லிய வசனம் எப்பொழுது நிறைவேறிற்று?***
*இயேசு தம்மைப் பிடிக்கும்படி வந்தவர்களிடம் “நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே , என்னைத் தேடுகிறதுண்டானால் இவர்களைப் (சீஷர்களை) போகவிடுங்கள்” என்று கூறியபோது இந்த வசனம் நிறைவேறிற்று (யோவான்* 18 : 8)

7. ***போர்ச்சேவகரும், பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரும் இயேசுவைப் பிடிக்கும்படி வந்தபோது, சீமோன்பேதுரு என்ன செய்தான்?***
*சீமோன்பேதுரு தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்குஸை வலதுகாதற வெட்டினான்* ( *லூக்கா* 22 : 5 ; *யோவான்* 18 : 10).

8. ***பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் பெயர் என்ன? அவன் காதை வெட்டினது யார்? அவனைச் சுகமாக்கியது யார்?***
*பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் பெயர் மல்குஸ். சீமோன்பேதுரு அவனுடைய காதை வெட்டினான். இயேசு அவனைச் சுகமாக்கினார்* (*யோவா.* 18 : 10)

9. ***சீமோன்பேதுரு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினபோது, இயேசு பேதுருவிற்குக் கொடுத்த அறிவுரை என்ன?***
*இயேசு பேதுருவை நோக்கி , “உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்” என்று அறிவுரை கூறினார் (மத்தேயு* 26 : 52).

10. ***இயேசு மல்குஸின் காதை எவ்விதம் சொஸ்தப்படுத்தினார்?***
*இயேசு “இம்மட்டில் நிறுத்துங்கள்” என்று சொல்லி, மல்குஸின் காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்* (*லூக்கா* 22 : 51)

11. ***நாம் யாருக்காக ஜெபம்பண்ண வேண்டும் என்று இயேசு தம்முடைய மலைப் பிரசங்கத்தில் கூறியிருக்கிறார்?***
*நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும் நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும் என்று இயேசு நமக்குக் கூறியிருக்கிறார் (மத்தேயு* 5 : 44).

12. ***நாம் யாரை சிநேகிக்க வேண்டும் ? யாருக்கு நன்மை செய்யவேண்டும்?***
*நாம் நம்முடைய சத்துருக்களைச் சிநேகிக்க வேண்டும். நம்மைப் பகைக்கிறவாக்ளுக்கு நன்மை செய்யவேண்டும்* (*மத்தேயு* 5 : 44)

13. ***பரமபிதா யார்மேல் சூரியனை உதிக்கப் பண்ணி, மழையைப் பெய்யப்பண்ணுகிறார்?***
*பரமபிதா தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்* (*மத்தேயு* 5 : 45).

**VII** ***சுருக்கமான விடையளி*** **:** (4 Marks)

**1.** ***இயேசு சத்துருக்களை சிநேகிக்கவேண்டும் என்று தாம் பிரசங்கம் பண்ணினதை நடைமுறையில் கொண்டுவந்தார் என்பதை நிரூபிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை கூறு?.***

*சீமோன்பேதுரு இயேசுவைப் பிடிக்கும்படியாக வந்த பிரதான ஆசாரியனின் வேலைக்காரனாகிய மல்குசை வலதுகாதற வெட்டினான். அப்போது இயேசு பேதுருவை நோக்கி, உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு என்று சொல்லி மல்குஸின் காதைத்தொட்டு சொஸ்தமாக்கினார். இந்த சந்தர்ப்பத்தின் மூலம் இயேசு சத்துருக்களை நேசிக்க வேண்டும் என்று தாம் பிரசங்கம் பண்ணினதை நடைமுறையில் கொண்டுவந்தார் என்பதை நாம் நிரூபிக்கலாம்* (*லூக்கா* 22 : 51).

**2.** ***நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவுக்குப் புத்திரராயிருக்ககும்படி என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறினார்?***

*இயேசு, உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் ; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் ; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.*

*இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் என்று கூறினார்* (*மத்தேயு* 5 : 44, 45)

**VIII** ***போதனை*** (2 Marks)

*நாம் மற்றவர்களால் துன்பப்படுத்தப்படும்போது அல்லது பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்படும்போது , அதற்குப் பதிலாக நாம் அவர்களுக்குத் தீமை செய்யக்கூடாது. ஆனால் கர்த்தராகிய இயேசு செய்தது போல அவர்களுக்கு நாம் நன்மை செய்து அவருடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும்.*

***************

## *பாடம் – 13*

# பேதுரு கர்த்தராகிய இயேசுவை மறுதலித்தது

(*மத்தேயு* 26 : 30 – 35, 69 – 75; *லூக்கா* 22 : 31 - 33 ,60 - 62)

**I** ***மனப்பாட வசனம்*** **:** (2 Marks)

"*நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் ; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது*" **(*யோவா.* 15 : 5).**

"*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு* " **(*பிலிப்பியர்* 4 : 13).**

## II பொருத்துக (1 Mark)

1. இயேசு - கலிலேயன் (மத்தேயு 26 : 69)
2. இயேசு - நசரேயன் (மத்தேயு 26 : 71)
3. பேதுரு - இயேசுவை மறுதலித்த சீஷன் (மத்தேயு 26 : 72)

## III கோடிட்ட இடங்களை நிரப்புக (1 Mark)

1. இயேசுவும் அவருடைய சீஷர்களும்_______________ பாடினபின்பு ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்.
2. இயேசு, 'நான் உயிர்த்தெழுந்தபின்பு,_______________வுக்குப் போவேன்' என்று தமது சீஷர்களிடம் கூறினார்.
3. இயேசு பேதுருவிடம், 'நீ என்னை _______________ தரம் மறுதலிப்பாய்' என்றார்.
4. இயேசு பேதுருவிடம் 'உன் _______________ ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்' என்றார்.
5. இயேசு தன்னிடம் கூறிய வசனத்தை நினைவுகூர்ந்து _______________ மனங்கசந்து அழுதான்.

**விடைகள்**

1. ஸ்தோத்திரப்பாட்டை (மத்தேயு 26 : 30)
2. கலிலேயா (மத்தேயு 26 : 32)
3. மூன்று (மத்தேயு 26 : 34)
4. விசுவாசம் (லூக்கா 22 : 32)
5. பேதுரு (லூக்கா 22 : 61, 62)

## IV சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது (1 Mark)

1. **இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு எந்த மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்?**
   a) ஒலிவமலை b) மோரியா மலை c) சீனாய் மலை d) எர்மோன் மலை
2. **உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் , நான் ஒருக்காலும் இடறலடையேன் என்று இயேசுவிடம் கூறியது யார்?**
   a) யூதாஸ் b) சீமோன்பேதுரு c) தோமா d) யாக்கோபு
3. **முதலாவது பேதுரு யாரிடம் இயேசுவை மறுதலித்தான்?**
   a) வாசல் காவலரிடம் b) ஜனங்களிடம்
   c) வேலைக்காரியிடம் d) பிரதான ஆசாரியனிடம்
4. **இயேசுவை அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கின சீஷன் யார்?**

a) *யோவான்* b) *யூதாஸ்* c) பேதுரு d) *பிலிப்பு*

5. ***காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்று இயேசுவிடம் கூறியது யார்?***
   a) *தீத்து* b) *தீமோத்தேயு* c) *நிக்கொதேமு* d) பேதுரு

| ***விடைகள்*** | |
|---|---|
| 1. a. (*மத்தேயு* 26 : 30) | 4. c. (*மத்தேயு* 26 : 74) |
| 2. b. (*மத்தேயு* 26 : 33) | 5. d. (*லூக்கா* 22 : 33) |
| 3. c. (*மத்தேயு* 26 : 69) | |

## V ***<u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>*** (3 Marks)

1. ***"மேய்ப்பனை வெட்டுவேன் , மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்"***
**(*மத்*. 26 : 31).**

*<u>யார்</u>* : *இயேசு*

*<u>யாரிடம்</u>* : *சீஷர்களிடம்*

*<u>எப்போது</u>* : *கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே தமது சீஷர்களுடன் பஸ்காவை ஆசரித்தார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்பொழுது இயேசு தமது சீஷர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.*

2. ***"உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் , நான் ஒருக்காலும் இடறலடையேன்" (மத்தேயு* 26 : 33)**

*<u>யார்</u>* : *பேதுரு*

*<u>யாரிடம்</u>* : *இயேசுவிடம்*

*<u>எப்போது</u>* : *இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே தமது சீஷர்களுடன் பஸ்காவை ஆசரித்த பின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார். அப்பொழுது அவர் தமது சீஷர்களை நோக்கி, "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் " என்றார். பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக இவ்வாறு கூறினான்.*

3. ***"இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் " (மத்தேயு* 26 : 34)**

*<u>யார்</u>* : *இயேசு*

*<u>யாரிடம்</u>* : *பேதுருவிடம்*

*<u>எப்போது</u>* : *இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி தமது சீஷர்களிடம் இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்றார். அதற்குப் பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும்*

*இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் " என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி இவ்வாறு கூறினார்*

4. **"நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது " (மத்தேயு 26 : 70)**

*யார்* : *பேதுரு*

*யாரிடம்* : *வேலைக்காரியிடம்*

*எப்போது* : *இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள். பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து முடிவைப் பார்க்கும்படி அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய் " என்றாள். அதற்குப் பேதுரு இவ்வாறு பதில் அளித்தான்.*

5. **a) "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" (லூக்கா 22 : 32)**

**b) "நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து"(லூக்.22 : 32).**

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *சீமோன் பேதுருவிடம்*

*எப்போது* : *இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி சீமோன் பேதுருவிடம் , "சீமோனே, சீமோனே , இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான் " என்று கூறிவிட்டு இவ்வாறு கூறினார்.*

## VI ஓரிரு வாக்கியங் களில் விடையளி (2 Marks)

1. **இயேசு ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு எங்கு புறப்பட்டுப்போனார்? உயிர்த்தெழுந்த பின்பு எங்கு போவதாக தமது சீஷர்களிடம் கூறினார்?**

*இயேசு ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்.*

*உயிர்த்தெழுந்த பின்பு கலிலேயாவுக்குப் போவேன் என்று தமது சீஷர்களிடம் கூறினார் (மத்தேயு* 26 : 30, 32).

2. **இயேசு ஒலிவமலையில் தமக்குச் சம்பவிக்கப்போகிறதைக் குறித்து தமது சீஷர்களிடம் என்ன சம்பாஷித்தார்?**

*இயேசு தமது சீஷர்களிடம், "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்தபின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் " என்றார் (மத்தேயு* 26 : 31, 32).

3. **பேதுருவையும் சீஷர்களையும் "கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது" போலப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டது யார்? பேதுருவின் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு அவனுக்காக வேண்டிக் கொண்டது யார்?**

*1. சாத்தான் உத்தரவு கேட்டுக் கொண்டான்.*

2. இயேசு பேதுருவினுடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு அவனுக்காக வேண்டிக் கொண்டார் (லூக்கா 22 : 31, 32).

4. **'இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்' என்று இயேசு யாரிடம் கூறினார்? அதற்கு அவன் கூறிய மறுமொழி என்ன?**

இயேசு பேதுருவிடம் கூறினார். அதற்கு அவன் "நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் " என்றான். (மத்தேயு 26 : 34 , 35).

5. **முதன்முறையாக பேதுரு இயேசுவை , எங்கு யாரிடம் எப்போது மறுதலித்தான்?**

பேதுரு அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தபோது வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து, "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய்" என்று கூறியபோது இயேசுவை மறுதலித்தான் (மத்தேயு 26 : 69).

6. **இரண்டாம் முறையாக பேதுரு இயேசுவை எங்கு எப்போது மறுதலித்தான்?**

பேதுரு வாசல் மண்டபத்திற்குப் போனபோது வேறொருத்தி பேதுருவைக் கண்டு, "இவனும், நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான்" என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னபோது இயேசுவை மறுதலித்தான் (மத்தேயு 26 : 71, 72).

7. **மூன்றுமுறை இயேசுவை மறுதலித்த சீஷன் யார்? அவன் மூன்றாம்முறை மறுதலித்த போது என்ன சம்பவித்தது?**

மூன்றுமுறை இயேசுவை மறுதலித்த சீஷன் சீமோன் பேதுரு ஆவான். மூன்றாம்முறை அவன் மறுதலித்த போது சேவல் கூவிற்று (மத்தேயு 26 : 74) .

8. **சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடம் சொன்ன வசனத்தை பேதுரு எப்போது நினைவு கூர்ந்தான்? நினைவுகூர்ந்து என்ன செய்தான்?**

பேதுரு மூன்றாம் முறையாக இயேசுவை மறுதலித்தபோது சேவல் கூவிற்று. அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். உடனே பேதுரு கர்த்தர் தன்னிடம் சொன்ன வசனத்தை நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான் (லூக்கா 22 : 61, 62).

9. **நாம் நம்முடைய தீர்மானங்களை நிறைவேற்றத் தேவையானது என்ன? அதை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?**

   1. நாம் நம்முடைய தீர்மானங்களை நிறைவேற்றத் தேவையையானது தேவனுடைய கிருபையே.
   2. அந்தக் கிருபையை நாம் நம்மைத் தாழ்த்துவதாலும், காத்தருடைய சமுகத்தில் காத்திருப்பதாலும் பெற்றுக்கொள்ளலாம் ( போதனை)..

## VII <u>சுருக்கமான விடையளி</u> (4 Marks)

1. **இயேசு பேதுருவை எச்சரித்துக் கூறிய வார்த்தைகள் யாவை?**

இயேசு பேதுருவிடம் , "கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார் (லூககா. 22 : 31, 32).

2. ***பேதுரு தான் இயேசுவை எல்லா சந்தர்ப்பத்திலும் பின்பற்றுவேன் என்று தன்னுடைய தீர்மானத்தை வெளிப்படுத்தும்படியாக அவரிடம் கூறிய வார்த்தைகள் யாவை? (அல்லது) பேதுருவின் உறுதியான அறிக்கை என்ன? (அல்லது) இயேசு பேதுருவை எச்சரித்த சந்தர்ப்பங்களில் அவன் கூறிய மறுமொழி என்ன?***

1. *பேதுரு, "ஆண்டவரே , காவலிலும் சாவிலும் உம்மைப்பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான் (லூக்கா* 22 : 33).
2. *மேலும் பேதுரு இயேசுவிடம் , "உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்றான் (மத்தேயு* 26 : 33).
3. *பேதுரு, மற்றொரு சந்தர்ப்பத்தில், "நான் உம்மோடே மரிக்கவேண்டியதாய் இருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்று இயேசுவிடம் சொன்னான் (மத்தேயு* 26 : 35).

*இவ்வாறாக, பேதுரு எல்லா சந்தர்ப்பங்களிலும், 'இயேசுவை பின்பற்றுவேன்' என்கிற தன்னுடைய தீர்மானத்தை வெளிப்படுத்தும் விதத்தில் பேசினான்.*

## VIII <u>*போதனை*</u> (2 Marks)

*நாம் நமது சொந்தப் பெலனைச் சார்ந்து நம்முடைய தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது. தேவனுடைய கிருபை நமக்குத் தேவையாயிருக்கிறது. நாம் நம்மைத் தாழ்த்துவதாலும், கர்த்தருடைய சமுகத்தில் காத்திருப்பதாலும் அக்கிருபையைப் பெற்றுக்கொள்ளலாம்.*

***************

## *பாடம் - 14*

# *கர்த்தராகிய இயேசு நியாயம் விசாரிக்கப்படுதல்*

(*மத்தேயு* 26 : 57 – 68 ; 27 : 1, 2 , 11 - 31)

### I <u>*மனப்பாட வசனம்*</u> (2 Marks)

**"***நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் , அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.*

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும், உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்* " **(1 பேதுரு 2 : 20, 21).**

### II <u>*பொருத்துக*</u> (1 Mark)

1. *இயேசு* - *தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து* (*மத்*. 26 : 63)
2. *இயேசு* - *யூதருடைய ராஜா* (*மத்*. 27 : 11)

3. இயேசு - நீதிமான் (மத். 27 : 19)
4. காய்பா - பிரதான ஆசாரியன் (மத். 26 : 57)
5. மனுஷகுமாரன் - சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பவர் (மத். 26 : 64)
6. பொந்தியுபிலாத்து - தேசாதிபதி (மத். 27 : 2)

**III** *கோடிட்ட இடங்களை நிரப்புக :* (1 Mark)

1. இயேசு நியாயவிசாரணைக்காக முதலாவதாக_______________ வினிடத்தில் அழைத்துக் கொண்டுபோகப்பட்டார்.
2. பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும் படி_______________தேடினார்கள்.
3. _______________ சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் _______________ மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள் என்று இயேசு கூறினார்.
4. விடியற்காலமானபோது இயேசுவைக் கட்டி _______________ வினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்.
5. இயேசு ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லாததைக் கண்டு _______________ மிகவும் ஆச்சரியப்பட்டான்.
6. இயேசுவை சிலுவையில் அறைய மனதில்லாமல் _______________தன் கைகளைக் கழுவினான்.

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. | பிரதான ஆசாரியனாகிய காய்பா | (மத்தேயு 26 : 57) |
| 2. | பொய்ச் சாட்சி | (மத்தேயு 26 : 59) |
| 3. | மனுஷகுமாரன், வானத்தின் மேகங்கள் | (மத்தேயு 26 : 64) |
| 4. | தேசாதிபதி / பிலாத்து | (மத்தேயு 27 : 2) |
| 5. | தேசாதிபதி / பிலாத்து | (மத்தேயு 27 : 14) |
| 6. | தேசாதிபதி / பிலாத்து | (மத்தேயு 27 : 24) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :* (1 Mark)

1. **இயேசுவுக்கு விரோதமாய்க் கடைசியாய் வந்த பொய்ச்சாட்சிகள் எத்தனை?**
   a) இரண்டு b) மூன்று c) ஐந்து d) ஏழு
2. **இயேசு தேவதூஷணம் சொன்னார் என்று சொல்லித் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டவன் யார்?**
   a) தேசாதிபதி b) மூப்பர் c) பிரதான ஆசாரியன் d) சங்கத்தார்
3. **இயேசுவிடம் , 'நீ யூதருடைய ராஜாவா' என்று கேட்டது யார்?**
   a) பிரதான ஆசாரியன் b) தேசாதிபதி c)வேதபாரகர் d) பரிசேயர்
4. **இயேசுவினிமித்தம் சொப்பனத்தில் வெகு பாடுபட்டது யார்?**

a) பேதுரு b) யூதாஸ் c) மரியாள் d) பிலாத்துவின் மனைவி

| **விடைகள்** | |
|---|---|
| 1. a. (*மத்தேயு* 26 : 60) | 3. b. (*மத்தேயு* 27 : 11) |
| 2 c. (*மத்தேயு* 26 : 65) | 4. d. (*மத்தேயு* 27 : 19) |

**V** ***யார் யாரிடம் எப்போது கூறியது* :** (3 Marks)

1. **"*இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா*" (*மத்தேயு* 26 : 62)**

*யார்* : *பிரதான ஆசாரியன்*

*யாரிடம்* : *இயேசுவிடம்*

*எப்போது* : *பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் இரண்டு பொய்ச்சாட்சிகளை நிறுத்தினார்கள். அவர்கள் வந்து தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி இவ்விதமாகக் கூறினான்.*

2. **"*நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா?*" (*மத்தேயு* 26 : 63)**

*யார்* : *பிரதான ஆசாரியன்*

*யாரிடம்* : *இயேசுவிடம்*

*எப்போது* : *இயேசுவுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சிகள் வந்து, "தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்" என்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி, "இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா" என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி இவ்வாறு கேட்டான்.*

3. **"*நீர் சொன்னபடிதான்* " (*மத்தேயு* 26 : 64)**

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *பிரதான ஆசாரியனிடம்*

*எப்போது* : *இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து இயேசுவுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொன்னார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி, "இவர்கள் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா" என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான ஆசாரியன், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று இயேசுவிடம் கேட்டான். அதற்கு இயேசு இவ்வாறு பதில் சொன்னார்.*

4. **"*நீ யூதருடைய ராஜாவா*" (*மத்தேயு* 27 : 11)**

*யார்* : *தேசாதிபதியாகிய பிலாத்து*

யாரிடம் : இயேசுவிடம்

எப்போது : சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். அப்பொழுது பிலாத்து இயேசுவை நோக்கி இவ்வாறு கேட்டான்.

5. **“இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே” (மத்தேயு 27 : 13).**

யார் : பிலாத்து

யாரிடம் : இயேசுவிடம்

எப்போது : பிரதான ஆசாரியரும் மூப்பரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனைபண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய் பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில் அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து இயேசுவிடம் இவ்வாறு கேட்டான்.

6. **a) “நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்” (மத். 27 : 19).**
**b)“அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்” (மத். 27 : 19).**

யார் : பிலாத்துவின் மனைவி

யாரிடம் : ஆள் மூலம் பிலாத்துவிடம்

எப்போது : பிலாத்து இயேசுவை நியாயம் விசாரிக்க நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி இவ்வாறு சொல்லச் சொன்னாள்.

7. **“ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்” (மத்தேயு 27 : 23)**

யார் : தேசாதிபதியாகிய பிலாத்து

யாரிடம் : ஜனங்களிடம்

எப்போது : பிரதான ஆசாரியரும் மூப்பரும், ஜனங்களை ஏவிவிட்டபடி, ஜனங்கள் பரபாசை விடுதலையாக்கவேண்டும் என்று பிலாத்துவினிடத்தில் கேட்டார்கள். அதற்கு பிலாத்து, ‘‘அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்’’ என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள். அப்பொழுது பிலாத்து இவ்வாறு கேட்டான்.

8. **“இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன்” (மத். 27 : 24)**

யார் : பிலாத்து

யாரிடம் : ஜனங்களிடம்

எப்போது : பொறாமையினால் இயேசுவை ஒப்புக் கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, அவரை விடுதலையாக்கப் பிரயாசப்பட்டான். ஆனாலும் ஜனங்களெல்லாரும் இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, இவ்வாறு கூறினான்.

**VI** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி :*** (2 Marks)

1. ***இயேசுவைப் பிடித்தவர்கள் முதலாவதாக அவரை யாரிடத்தில் கொண்டு போனார்கள்?***
*இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டு போனார்கள் (மத்தேயு* 26 : 57).

2. ***இயேசுவுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி தேடினவர்கள் யார்? ஏன் தேடினார்கள்?***
*பிரதான ஆசாரியரும் , மூப்பரும், சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாகப் பொய்சாட்சி தேடினார்கள் (மத் .* 26 : 59).

3. ***இயேசுவுக்கு விரோதமாய் வந்த பொய்ச்சாட்சிகள் கூறியது என்ன?***
*இயேசுவுக்கு விரோதமாய் வந்த பொய்ச்சாட்சிகள், "தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்" என்று இவன் சொன்னான் என்றார்கள் (மத்.* 26 : 61).

4. ***இயேசு, தேவதூஷணம் சொல்லுகிறார் என்று சொன்னது யார்? இயேசு மரணத்துக்குப்பாத்திரனாயிருக்கிறார் என்று சொன்னது யார்?***
   1. *பிரதான ஆசாரியன், தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இயேசு தேவதூஷணம் சொல்லுகிறார் என்றான்.*
   2. *வேதபாரகரும், மூப்பரும், சங்கத்தார் யாவரும், இயேசு மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறார் என்றார்கள் (மத்தேயு* 26 : 65, 66).

5. ***இயேசு எவ்வாறு பரிகசிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டார்?***
*சிலர் இயேசுவின் முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து, கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். இவ்வாறாக இயேசு பரிகசிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார் (மத்தேயு* 26 : 67, 68)

6. ***இயேசுவைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினவர்கள் யார்? அவர்கள் இயேசுவை யாரிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்?***
*சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள். அவர்கள் இயேசுவை தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள் (மத்தேயு* 27 : 1, 2).

7. ***'நீ யூதருடைய ராஜாவா' என்று இயேசுவிடம் கேட்டது யார்? அதற்கு இயேசு கூறிய பதில் என்ன?***
   1. *தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்து, "நீ யூதருடைய ராஜாவா" என்று இயேசுவிடம் கேட்டான்.*
   2. *அதற்கு இயேசு, "நீர் சொல்லுகிறபடிதான்" என்றார் (மத்தேயு* 27 : 11) .

8. ***பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்த காரியம் என்ன?***
*காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டும் என்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக*

*விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது (மத்தேயு* 27 : 15)

9. ***பொறாமையினால் இயேசுவை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, ஜனங்களிடம் கேட்டது என்ன?***
*பிலாத்து ஜனங்களை நோக்கி, "எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?" என்று கேட்டான் (மத்தேயு* 27 : 18)

10. ***இயேசுவை நியாயந்தீர்க்கும்படி நியாயாசனத்தில் உட்கார்ந்திருந்த பிலாத்துவிடம் அவன் மனைவி என்ன சொல்லி அனுப்பினாள்?***
*பிலாத்துவினுடைய மனைவி அவனிடம், "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் அவர்நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்." என்று ஆள் மூலம் சொல்லி அனுப்பினாள் (மத்தேயு* 27 : 19).

11. ***ஜனங்கள் யாரை விடுதலையாக்கவேண்டும் என்று பிலாத்துவினிடத்தில் கேட்டார்கள்? யாரை சிலுவையில் அறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்?***
*ஜனங்கள் பரபாசை விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டார்கள்.*
*இயேசுவை சிலுவையிலறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள் (மத்தேயு* 27 : 21, 22, 23).

12. ***இயேசுவை சிலுவையில் அறைய மனதில்லாமல் பிலாத்து என்ன செய்தான்?***
*பிலாத்து தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, 'இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்' என்றான் (மத்தேயு* 27 : 24)

13. ***ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கி பிலாத்து என்ன செய்தான்?***
*ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கி பிலாத்து பரபாசை விடுதலையாக்கி, இயேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தான் (மத்தேயு* 27 : 26).

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u>*** (4 Marks)

1. ***இயேசுவை நியாயம் விசாரித்த பிரதான ஆசாரியன் எப்பொழுது தன் வஸ்திங்களைக் கிழித்துக் கொண்டான்?***
*பிரதான ஆசாரியன் இயேசுவிடம், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்றான்.*
*அதற்கு இயேசு "நீர் சொன்னபடிதான் அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான் (மத்தேயு* 26 : 63, 64).

2. ***இயேசுவை நியாயம் விசாரிக்கும்போது அவரைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டது யார்? ஏன் ?***

*தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்து இயேசுவைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டான். ஏனென்றால், பிரதான ஆசாரியரும் மூப்பரும் இயேசுவின் மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி, "இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா" என்று கேட்டபோதும் அவர் ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை (மத்தேயு* 27 : 12 - 14).

3. ***இயேசுவை சிலுவையில் அறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டது யார்? இயேசுவை சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தது யார்? இயேசுவை சிலுவையில் அறையும்படிக்கொண்டு போனவர்கள் யார்?***

   1. *ஜனங்கள் இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டார்கள்.*
   2. *தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்து அவரை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்தான்.*
   3. *போர்ச்சேவகர் அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள் (மத்.* 27:22,26,27, 31).

**VIII** ***விரிவான விடையளி*** **:** (6 Marks)

1. ***போர்ச்சேவகர் இயேசுவை எவ்விதம் பரியாசம்பண்ணி துன்புறுத்தினார்கள்?***

*தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து,*

*அவர் வஸ்திரங்களைக் கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு 'யூதருடைய ராஜாவே, வாழ்க' என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.*

*அவரைப் பரியாசம்பண்ணின பின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள் (மத்தேயு* 27 : 27 - 31)

**IX** ***போதனை*** (2 Marks)

*கர்த்தராகிய இயேசு, உபத்திரவத்திற்கும் நிந்தைக்கும் தம்மை ஒப்புக்கொடுத்து அவற்றைப் பொறுமையுடன் சகித்தார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.*

***************

பாடம் 15

# கர்த்தராகிய இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

(மத்தேயு 27 : 32 – 44, 46, 50 – 54, 60 - 66 ; 28 : 1 - 6 ; லூக்கா 23 : 27-46 ; யோவான் 19 : 26 - 30 , 38 – 42 ; சங். 22 : 18)

## I மனப்பாட வசனம்

(2 Marks)

“தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் ” ( **யோவான் 3 : 16, 17).**

## II பொருத்துக (1Marks)

1. இயேசு - இஸ்ரவேலின் ராஜா (மத்தேயு 27 : 42)
2. சீமோன் - சிரேனே ஊரான் (மத்தேயு 27 : 32)
3. சிரேனே - ஊர் (மத்தேயு 27 : 32)
4. கொல்கொதா - கபாலஸ்தலம் (மத்தேயு 27 : 33)
5. இயேசு - தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்து (லூக்கா 23 : 35)
6. யோசேப்பு - அரிமத்தியா ஊரான் (யோவா. 19 : 38)
7. யோசேப்பு - இயேசுவின் அந்தரங்கசீஷன் (யோவா. 19 : 38)
8. அரிமத்தியா - ஊர் (யோவா. 19 : 38)

## III கோடிட்ட இடங்களை நிரப்புக (1 Mark)

1. இயேசு சிலுவையிலறையப்படுவதற்காகக் கொண்டு போகப்பட்ட போது________________ அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம் பண்ணப்பட்டான்.
2. இயேசுவை ________________ என்னும் இடத்தில் சிலுவையில் அறைந்தார்கள்.
3. இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு அவருடைய வஸ்திரங்களைப் ________________சீட்டுப் போட்டு தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டார்கள்.
4. இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு தன் ஆவியை விட்ட போது தேவாலயத்தின் ________________இரண்டாகக் கிழிந்தது.
5. நூற்றுக்கதிபதியும், அவனோடேகூட இருந்தவர்களும் இயேசு ________________ என்று அறிக்கையிட்டார்கள்.
6. தூதனுடைய ரூபம் ________________ போலவும் அவனுடைய வஸ்திரம் ________________ போல வெண்மையாகவும் இருந்தது.

7. ‘இயேசு யூதருடைய ராஜா’ என்று _______________ எழுத்துக்களில் எழுதி இயேசுவின் சிலுவைக்கு மேலாக வைத்தார்கள்.
8. _______________இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டுபோகும்படி, பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்.

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. | சிரேனே ஊரானாகிய சீமோன் | (மத்தேயு 27 : 32) |
| 2. | கொல்கொதா | (மத்தேயு 27 : 33, 35) |
| 3. | போர்ச்சேவகர் | (மத்தேயு 27 : 27, 35) |
| 4. | திரைச்சீலை | (மத்தேயு 27 : 51) |
| 5. | தேவனுடைய குமாரன் | (மத்தேயு 27 : 54) |
| 6. | மின்னல், உறைந்த மழையை | (மத்தேயு 28 : 3) |
| 7. | கிரேக்கு லத்தீன் எபிரெயு | (லூக்கா 23 : 38) |
| 8. | யோசேப்பு | (யோவா. 19 : 38) |

**IV** <u>*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது*</u> (1 Mark)

1. ***போர்ச்சேவகர் இயேசுவுக்கு என்ன குடிக்கக் கொடுத்தார்கள்?***
   a) *கசப்புக் கலந்த காடி* b) *பால்* c) *தண்ணீர்* d) *திராட்சரசம்*
2. ***இயேசுவின் வஸ்திரங்களைப் பங்கிட்டுக்கொள்வதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எந்த புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளது?***
   a) *சகரியா* 9 : 9 b) *ஏசாயா* 9 : 6
   c) *சங்கீதம்* 22 : 18 d) *ஆதியாகமம்* 3 : 15
3. ***‘நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா’ என்று இயேசுவை தூஷித்தது யார்?***
   a) *வழியில் நடந்து போகிறவர்கள்* b) *ஜனங்கள்*
   c) *போர்ச்சேவகர்* d) *மூப்பர்கள்*
4. ***இயேசுவின் சரீரத்தை அடக்கம்பண்ணும்படியாக வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தது யார்?***
   a) *சீமோன்* b) *யோசேப்பு* c) *நிக்கொதேமு* d) *யோவான்*
5. ***இயேசு வைக்கப்பட்டிருந்த, கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப்புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தது யார்?***
   a) *தூதன்* b) *காவலாளர்* c) *பேதுரு* d) *போர்சேவகர்*

**விடைகள்**

1. a. (*மத்தேயு* 27 : 34)
2. c. (*சங்கீதம்* 22 : 18)
3. a. (*மத்தேயு* 27 : 39)
4. c. (*யோவா.* 19 : 39, 40)
5. a. (*மத்தேயு* 28 : 2)

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* (3 Marks)

1. **"*மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்*" (*மத்தேயு* 27 : 54)**

*யார்* : *நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும்*

*யாரிடம்* : *தங்களுக்குள்*

*எப்போது* : *சிலுவையில் அறையப்பட்ட இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச் சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது ; பூமியும் அதிர்ந்தது ; கன்மலைகளும் பிளந்தது ; நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து இவ்வாறு கூறினார்கள்.*

2. **"*நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்*" (*லூக்கா*. 23 : 28)**

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *திரள் கூட்டமான ஜனங்களையும், அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளையும் பார்த்துக் கூறியது.*

*எப்போது* : *இயேசுவை சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். அப்போது திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி இவ்வாறு கூறினார்.*

3. **"*நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்*" (*லூக்கா* 23 : 39)**

*யார்* : *இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்*

*யாரிடம்* : *இயேசுவிடம்*

*எப்போது* : *இயேசுவை கபாலஸ்தலம் என்ற இடத்தில் சிலுவையில் அறைந்தார்கள். அவரோடேகூட அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை நோக்கி இவ்வாறு கூறினான்.*

4. **"*நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா ?*" (*லூக்கா* 23 : 40).**

*யார்* : *இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில்ஒருவன்*

*யாரிடம்* : *இயேசுவை இகழ்ந்த குற்றவாளியிடம்*

*<u>எப்போது</u> : இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை நோக்கி, "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்" என்று அவரை இகழ்ந்தான். அப்பொழுது குற்றவாளிகளில் மற்றவன் அவனை நோக்கி இவ்வாறு கூறினான்.*

5. ***"ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" (லூக்கா 23 : 42).***

*<u>யார்</u> : இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்*

*<u>யாரிடம்</u> : இயேசுவிடம்*

*<u>எப்போது</u> : இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவிடம், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்" என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி, "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் ; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவனைக் கடிந்து கொண்டு இயேசுவை நோக்கி இவ்வாறு கூறினான்.*

6. ***"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்." (லூக்கா 23 : 43)***

*யார் : இயேசு*

*யாரிடம் : சிலுவையில் அறையப்பட்டிருந்த மனந்திரும்பிய குற்றவாளியிடம்*

*எப்போது : இயேசுவோடே சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை இகழ்ந்தான். மற்றவன் அவனை கடிந்துகொண்டு இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி இவ்விதமாகக் கூறினார்.*

**VI *<u>ஓரிரு வாக்கியங் களில் விடையளி</u>*** (2 Marks)

1. ***இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி போர்ச்சேவகர் யாரை பலவந்தம்பண்ணினார்கள்? இயேசுவை எங்கு சிலுவையிலறைந்தார்கள்?***

   i) *போர்ச்சேவகர் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படியாக சிரேனே ஊரானாகிய சீமோனை பலவந்தம் பண்ணினார்கள்.*

   ii) *காபலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்தில் அவரை சிலுவையிலறைந்தார்கள் ( மத்தேயு* 27 : 32, 33).

2. ***கசப்புக்கலந்த காடியை இயேசுவுக்கு கொடுத்தவர்கள் யார்? அதை அவர் என்ன செய்தார்?***

   *போர்ச்சேவகர் கசப்புக்கலந்த காடியை இயேசுவுக்கு குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார் (மத்தேயு* 27 : 34).

3. ***இயேசு, சிலுவையை சுமந்துகொண்டு போனபொழுது அவருக்குப் பின்சென்ற ஸ்திரீகள் யாருக்காக புலம்பி அழுதார்கள் ? இயேசு அவர்களை யாருக்காக அழச் சொன்னார்?***
   1. *இயேசுவுக்கு பின்சென்ற ஸ்திரீகள் இயேசுவுக்காகப் புலம்பி அழுதார்கள்.*
   2. *இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி, "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார்* (*லூக்கா* 23 : 27, 28).

4. ***இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்கள் யார்?***
   *இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் இரண்டு பேர் ; அவர்கள் கள்ளர்கள் ஆவர்* (*மத்தேயு* 27 : 38).

5. ***இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு போர்ச்சேவகர் அவருடைய வஸ்திரங்களை என்ன செய்தார்கள் ? அதைக் குறித்த தீர்க்கதரிசனம் என்ன?***
   *போர்ச்சேவகர் சீட்டுப்போட்டு இயேசுவின் வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். இதைக் குறித்து சங்கீதம்* 22 : 18 – *ல் "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போட்டார்கள்" என்று தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது* (*மத்தேயு* 27 : 35).

6. ***இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது அந்த வழியாய் நடந்துபோனவர்கள் அவரை எவ்வாறு தூஷித்தார்கள்?***
   *இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது , அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள் மத்தேயு* 27 : 39, 40).

7. ***சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசுவைப் பார்த்து அதிகாரிகள் எவ்வாறு இகழ்ந்தார்கள்?***
   *அதிகாரிகள் அவரை இகழ்ந்து, 'இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்' என்றார்கள்* (*லூக்கா* 23 : 35)

8. ***சிலுவையிலறையப்பட்டிருந்த இயேசுவை, போர்ச்சேவகர் எவ்வாறு பரியாசம் பண்ணினார்கள்?***
   *போர்ச்சேவகர், இயேசுவைப் பார்த்து, 'நீ யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக் கொள்' என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்* (*லூக்*. 23 : 37).

9. ***சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை எவ்வாறு இகழ்ந்தான்?***
   *சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்" என்று அவரை இகழ்ந்தான்* (*லூக்கா* 23 : 39).

10. ***இயேசுவின் சரீரத்தை அடக்கம்பண்ணினவர்கள் யார்?***

1) *அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு என்பவனும்.*
2) *ஆரம்பத்தில் ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவனும், இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள்* (*யோவான்* 19: 38 - 40).

11. ***இயேசுவை எங்கு அடக்கம்பண்ணினார்கள்?***
*இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது. அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்* (*யோவான்* 19 : 41).

12. ***இயேசுவின் கல்லறையை யார் எவ்வாறு பத்திரப்படுத்தினார்கள்?***
*பிரதான ஆசாரியரும், பரிசேயரும் கல்லறையின் வாசலில் வைக்கப்பட்டிருந்த கல்லுக்கு முத்திரைபோட்டு, தங்கள் காவல் சேவகரை காவலுக்கு வைத்து கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்* (*மத்தேயு* 27 : 62-66).

13. ***கர்த்தராகிய இயேசு எப்பொழுது உயிர்த்தெழுந்தார்?***
*கர்த்தராகிய இயேசு மரித்து மூன்றாவது நாளில் (வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில்) கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார்* (*மத்தேயு* 28 : 1 - 6).

14. ***இயேசுவின் கல்லறையை காவல்காத்துக் கொண்டிருந்த காவலாளர் ஏன் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்?***
*ஒய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப் புரட்டித்தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்*
(*மத்தேயு* 28 : 2 - 4).

**VII** *சுருக்கமான விடையளி* (4 Marks)

1. ***இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த பொழுது பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும் அவரை எவ்வாறு பரியாசம்பண்ணினார்கள்?***
   i) *பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், மூப்பரும், இயேசுவை பரியாசம் பண்ணி, "மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத் தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.*
   ii) *தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" என்றார்கள்* (*மத்*. 27 : 42, 43)

2. ***வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்தவர்கள் யார்? அப்பொழுது என்ன சம்பவித்தது?***
   i) *மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறையைப் பார்க்க வந்தார்கள்.*

ii) *அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.*

iii) *தூதன் ஸ்திரீகளை நோக்கி, "நீ**ங்**கள் பயப்படாதிரு**ங்**கள" சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் **இங்**கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்˙ கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாரு**ங்**கள் (மத்தேயு* 28 : 1 - 6).

3. ***சிலுவையில் மரித்த இயேசுவை பார்த்து 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்று அறிக்கையிட்டது யார்? ஏன் அவ்வாறு கூறினார்கள்?***

   a) *நூற்றுக்கு அதிபதியும் அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார்கள்.*

   b) *இயேசு ஆவியை விட்டபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது. சம்பவித்த இந்த காரியங்களைக் கண்டு அவர்கள் மிகவும் பயந்து இவ்வாறு கூறினார்கள் ( மத்.* 27 : 50 - 54).

**VIII** *<u>விரிவான விடையளி</u>* (6 Marks)

1. ***இயேசு சிலுவையில் உரைத்த ஏழு வார்த்தைகளை எழுது.***

   1. *பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே (லூக்கா* 23 : 34)
   2. *'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்'(லூக்கா* 23 : 43)
   3. *"ஸ்திரீயே, அதோ, உன் மகன், அதோ, உன் தாய்" (யோவா* 19 : 26, 27
   4. *ஏலீ ஏலீ லாமா சபக்தானி (என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் (மத்தேயு* 27 : 46)
   5. *'தாகமாயிருக்கிறேன்' (யோவான்* 19 : 28)
   6. *'முடிந்தது' (யோவான்* 19 : 30)
   7. *'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'(லூக்.*23:46)

2. ***இயேசுவை சிலுவையிலறையும்படியாகக் கொண்டு போகும்போது, அவர் தமக்கு பின்வந்த திரள் கூட்டமான ஜனங்களையும் ஸ்திரீகளையும் பார்த்து என்ன கூறினார்?***

   *திரள் கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி˙ " "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும், பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்.*

   *அப்பொழுது மலைகளை நோக்கி : 'எங்கள் மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி எங்ளை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்'. பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" என்றார் (லூக்.* 23 : 27 - 31).

3. ***இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டபொழுது நடந்த சம்பவங்கள் யாவை?***
*இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டபொழுது நடந்த சம்பவங்கள்:*
*தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து : மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்'' என்றார்கள் (மத்,* 27 : 50–54 ).

**XI** ***<u>போதனை</u>*** : (2 Marks)

*கர்த்தராகிய இயேசு நம்முடைய பாவங்களுக்காக சிலுவையிலறையப்பட்டார். கர்த்தராகிய இயேசு நமக்காக மரித்தார் என்று நாம் விசுவாசிப்போமாயின், நாம் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனுள்ளவர்களாயிருப்போம்.*

*************

*பாடம்-16*

# *கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்–பரமேறுதலுக்கு முன் அவரைத் தரிசித்தவர்கள்*

(*மத்தேயு* 28 : 5–10,16-20; *மாற்கு* 16 : 9-14; *லூக்கா* 24 : 13-51;
*யோவான்* 20 : 11-29; *யோவான்* 21 : 2-14; *அப்.* 1 : 3-12; I *கொரி* 15 : 5-7)

**I** ***<u>மனப்பாட வசனம்</u>*** (2 Marks)

**“***யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் ; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே*''
**(*எபிரெயர்* 12 : 14).**

''*பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்*'' **( 1 *யோவான்* 3: 2).**

**II** ***<u>பொருத்துக</u>*** (1 Mark)

1. *இயேசு* - *வல்லமையுள்ள தீர்க்கதரிசி* (*லூக்கா* 24 : 19)
2. *இயேசு* - *இஸ்ரவேலரை மீட்டிரட்சிப்பவர்* (*லூக்கா* 24 : 21)

3. எம்மாவு - கிராமம் (லூக்கா 24 : 13)
4. ரபூனி - போதகர் (யோவா. 20 : 16)
5. திதிமு - தோமா (யோவா. 21 : 2)
6. நாத்தான்வேல் - கானா ஊரான் (யோவா. 21 : 2)
7. யோவான் - இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் (யோவா. 21: 7)

**III கோடிட்ட இடங்களை நிரப்புக** (1 Mark)

1. இயேசுகிறிஸ்து வாரத்தின் ___________ நாள் அதிகாலையில் உயிர்த்தெழுந்தார்.
2. இயேசு மரியாளிடத்திலிருந்து ___________ பிசாசுகளைத் துரத்தியிருந்தார்.
3. ___________இயேசு நிற்கிறதைக் கண்டும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.
4. வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி ___________ சீஷர்களின் மனதைத் திறந்தார்.
5. இயேசு தம்முடைய சீஷர்களை ___________ வரைக்கும் அழைத்துக் கொண்டுபோய் அவர்களை ஆசீர்வதித்தார்.
6. பதினொரு சீஷர்களும் ___________விலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்.
7. கர்த்தராகிய இயேசு பாடுபட்டபின்பு___________ நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார்.
8. கர்த்தராகிய இயேசு அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அப்போஸ்தலருக்குத் தம்மை ___________ காண்பித்தார்.
9. ___________ தேவனுக்கு முன்பாகவும், ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.
10. சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு ___________ இயேசுவை எடுத்துக் கொண்டது.
11. இயேசு பேசினபோது எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த சீஷர்களின் இருதயம் ___________ எரிந்தது.
12. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் ___________ என்று இயேசு கூறினார்.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. *முதலாம்* | (*மாற்கு* 16 : 9) |
| 2. *ஏழு* | (*மாற்கு* 16 : 10) |
| 3. *மகதலேனா மரியாள்* | (*யோவா.* 20 : 14) |
| 4. *இயேசு* | (*லூக்கா* 24 : 45) |
| 5. *பெத்தானியா* | (*லூக்கா* 24 : 50) |
| 6. *கலிலேயா* | (*மத்தேயு* 28 : 16) |
| 7. *நாற்பது* | (*அப்போ.* 1 : 3) |
| 8. *உயிரோடிருக்கிறவராக* | (*அப்போ.* 1 : 3) |
| 9. *இயேசு* | (*லூக்கா* 24 : 19) |
| 10. *மேகம்* | (*அப்போ.* 1 : 9) |
| 11. *கொழுந்துவிட்டு* | (*லூக்கா* 24 : 32) |
| 12. *பாக்கியவான்கள்* | (*யோவா* 20 : 29) |

**IV** *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது* (1 Mark)

1. ***உயிர்த்தெழுந்த இயேசுவை முதன்முதல் தரிசித்தது யார்?***
   a)*மகதலேனா மரியாள்* b) *பேதுரு* c) *யோவான்* d) *யாக்கோபு*
2. ***இயேசுவைத் தோட்டக்காரனென்று எண்ணியது யார்?***
   a) *போர்ச்சேவகர்* b) *பிலாத்து* c)*மகதலேனா மரியாள்* d) *சீஷர்கள*
3. ***எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்கு எத்தனை சீஷர்கள் போனார்கள்?***
   a)*இரண்டு* b) *ஏழு* c) *பத்து* d) *பன்னிரண்டு*
4. ***உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த பின்பு 'மீன்பிடிக்கப்போகிறேன்' என்றது யார்?***
   a) *தோமா* b) *யோவான்* c) *பிலிப்பு* d) *சீமோன் பேதுரு*
5. ***சீமோன்பேதுரு மீன்பிடிக்கப்போகிறேன் என்று கூறியபோது மற்ற சீஷர்கள் அவனிடம் என்ன சொன்னார்கள்?***
   a) *சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போம்* b) *நாங்களும் வருகிறோம்*
   c) *வேண்டாம்* d) *கலிலேயாவுக்குப் போவோம்*
6. ***பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற எங்கே காத்திருக்கும்படியாக இயேசு அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்டார்?***
   a) *ஒலிவ மலை* b) *கலிலேயா* c) *பெத்தானியா* d) *எருசலேம்*
7. ***இயேசு எந்த மலையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டார்?***
   a) *சீனாய் மலை* b) *எர்மோன் மலை* c) *பாசான் மலை* d) *ஒலிவ மலை*

**விடைகள்**

1. a. (*மாற்கு* 16 : 9)
2. c. (*யோவான்* 20 : 15)
3. a. (*லூக்கா* 24 : 13)
4. d. (*யோவான்* 21 : 3)
5. b. (*யோவான்* 21 : 3)
6. d. (*அப்*. 1 : 5)
7. d. (*அப்*1:9 - 12)

**V** *யார் யாரிடம் எப்போது கூறியது* (3 Marks)

1. ***"என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்" "அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை"* (யோவான் 20 : 13)**

*யார்* : *மகதலேனா மரியாள்*

*யாரிடம்* : *தூதர்களிடம்*

*எப்போது : மரியாள் இயேசுவின் கல்லறையினருகே நின்று அழுது கொண்டிருந்தாள். பின்பு அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பாாத்தபொழுது, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இரண்டு தூதர்கள் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி, ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள் இவ்வாறு கூறினாள்.*

2. ***"ஸ்திரீயே ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்"* (யோவான் 20 : 15)**

*யார்* : *இயேசு*

*யாரிடம்* : *மகதலேனா மரியாளிடம்*

*எப்போது : மரியாள் இயேசுவின் கல்லறைகயினருகே இருந்த இரண்டு தூதர்களிடம் "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்று சொல்லி பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். அப்பொழுது இயேசு அவளைப் பார்த்து இவ்வாறு கேட்டார்.*

3. ***"நான் போய், அவரை எடுத்துக்கொள்ளுவேன்"* (யோவான் 20 : 15)**

*யார்* : *மகதலேனா மரியாள்*

*யாரிடம்* : *இயேசுவிடம்*

*எப்போது : மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து, ஸ்திரீயே ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி, ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும். நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்.*

4. ***"இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ"* (லூக். 24 : 33)**

*யார்* : *கிலெயோப்பா*

*யாரிடம் : இயேசுவிடம்*

*எப்போது : பதினொரு பேர் அல்லாத மற்ற சீஷரில் இரண்டு பேர் எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போகையில் இயேசுவின் வர்த்தமானங்களை சம்பாஷித்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடனே கூட நடந்து போனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. அவர் அவர்களை நோக்கி, துக்கமுகமுள்ளவர்களாய் நீங்கள் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அப்பொழுது அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா இயேசுவிடம் இவ்வாறு கேட்டான்.*

5. **“*நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று*” (லூக்கா . 24 : 29).**

<u>*யார்*</u> : *எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷர்கள்*

<u>*யாரிடம்*</u> : *இயேசுவிடம்*

<u>*எப்போது*</u> : *இயேசு, எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போய்க்கொண்டிருந்த சீஷர்களுடன் சேர்ந்து நடந்துபோனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டு இருந்தது. அவர்கள் போகிற கிராமத்துக்குச் சமீபித்தபோது இயேசு அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார். அப்போது அவர்கள் அவரை நோக்கி, இவ்வாறு வருந்திக் கேட்டுக்கொண்டார்கள்.*

6. **“*உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?*” (லூக். 24: 38).**

*யார் : இயேசு*

*யாரிடம் : சீஷர்களிடம்*

*எப்போது : எம்மாவூரில் இயேசுவைத் தரிசித்த சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். அங்கு பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கிறதைக் கண்டு, வழியில் நடந்தவைகளையும் அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.*

7. **“*புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா?*” (லூக். 24 : 41)**

*யார் : இயேசு*

*யாரிடம் : சீஷர்களிடம்*

*எப்போது : இயேசு உயிர்தெழுந்ததற்குப் பின் எருசலேமில் கூடியிருந்த சீஷர்களிடம் வந்து, “நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் நான்தான் என்று அறியும்படி என் கைகளையும், கால்களையும் தொட்டுப் பாருங்கள் ” என்று சொல்லித் தம்முடைய கைகளையும், கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில் அவர் அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.*

**VI** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** (2 Marks)

1. ***மரியாள் குனிந்து இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்குள்ளே பார்த்தபோது, கண்ட காட்சி என்ன?***
*இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும், கால்மாட்டில் ஒருவனுமாக உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள் (யோவான்* 20 : 12).
2. ***உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்தவுடன் மகதலேனா மரியாள் என்ன செய்தாள்?***
*உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்த மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள் (யோவான்* 20 : 18).
3. ***உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து தேவதூதரால் அறிவிக்கப்பட்ட ஸ்திரீகள் என்ன செய்தார்கள்? அப்பொழுது என்ன சம்பவித்தது?***
*இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ஸ்திரீகள் தேவதூதரால் கேள்விப்பட்டபோது அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அப்பொழுது இயேசு அவர்களுக்கு எதிர்ப்பட்டு: 'வாழ்க' என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள் (மத்.* 28 : 8, 9).
4. ***நசரேயனாகிய இயேசுவைக் குறித்து எம்மாவூருக்குச் சென்று கொண்டிருந்த சீஷர்கள் கூறியது என்ன?***
*நசரேயனாகிய இயேசு தேவனுக்கு முன்பாகவும், ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். அவரே இஸ்ரவேலரை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் என்று சொன்னார்கள் (லூக்..*24 :19, 21).
5. ***எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த சீஷர்களின் இருதயம் எப்பொழுது கொழுந்துவிட்டு எரிந்தது?***
*மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை இயேசு அவர்களுக்கு விவரித்துக் காட்டினபொழுது, அவர்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிந்தது (லூக்கா* 24:27, 32).
6. ***எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த சீஷர்கள் வழியில் தங்களுடன் பேசிக்கொண்டிருந்தவர் இயேசு என்று எப்பொழுது அறிந்தார்கள்?***
*இயேசு சீஷர்களுடன் பந்தியிருக்கையில் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள் (லூக்கா.* 24 : 30, 31).
7. ***உயிர்த்தெழுந்த இயேசு பதினொரு சீஷர்களையும் ஏன் கடிந்துகொண்டார்?***
*உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை சீஷர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும், இருதயக் கடினத்தைக்குறித்தும் இயேசு சீஷர்களைக் கடிந்துகொண்டார் (மாற்கு* 16 : 14).

8. ***கர்த்தராகிய இயேசு தோமாவிடம் காண்பித்தது என்ன? அவனுக்கு அறிவுறுத்தியது என்ன?***
   (i) *கர்த்தராகிய இயேசு தோமாவிடம் தம்முடைய காயங்களையும், ஆணிகளால் உண்டான தழும்புகளையும் காண்பித்தார்.*
   (ii) *அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருக்கும்படி அறிவுறுத்தினார்* (*யோவான்* 20 : 27).

9. ***யாரை பாக்கியவான்கள் என்று இயேசு தோமாவிடம் கூறினார்?***
   *"காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று தோமாவிடம் இயேசு கூறினார்* (*யோவான்* 20 : 29).

10. ***கர்த்தருடைய வார்த்தையின்படி வலையைப் போட்டு திரளான மீன்களை பிடித்த சீஷர்கள் திபேரியாக் கடற்கரைக்கு வந்திறங்கினபோது என்ன கண்டார்கள்?***
   *கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்* (*யோவான்*21 : 9).

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u>*** (4 Marks)

**1.** ***கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகளிடம் தூதன் என்ன சொன்னான்?***
*தூதன் ஸ்திரீகளை நோக்கி : நீங்கள் பயப்படாதிருங்கள் ; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இல்லை ; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் ; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் ; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷருக்குச் சொல்லுங்கள் ; அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் ; அங்கே அவரைக் காண்பீர்கள் ; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்* (*மத்.* 28: 5-7).

**2.** ***உயிர்த்தெழுந்த இயேசு மகதலேனா மரியாள் மூலம் சீஷர்களுக்குக் கொடுத்தனுப்பிய செய்தி என்ன? இயேசு மற்ற ஸ்திரீகள் மூலம் சீஷர்களுக்குக் கொடுத்தனுப்பிய செய்தி என்ன?***
*இயேசு மரியாளிடம், "நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" என்றார்* (*யோவான்* 20 : 17).
*இயேசு மற்ற ஸ்திரீகள் மூலம் சீஷர்களிடம் " பயப்படாதிருங்கள், நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள் ; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்"˙ என்றார்* (*மத்தேயு* 28 : 10).

**3.** ***உயிர்த்தெழுந்த இயேசு திபேரியாக் கடற்கரையில் எத்தனை சீஷர்களுக்குத் தரிசனமானார்? அவர்கள் யார்?***
   (i) *ஏழு சீஷர்களுக்குத் தரிசனமானார்.*
   (ii) *சீமோன்பேதுரு, தோமா, நாத்தான்வேல், யாக்கோபு, யோவான் மற்றும் வேறு இரண்டு சீஷர்கள்* (*யோவான்* 21 : 2).

**VIII** ***விரிவான விடையளி*** (6 Marks)

1. ***கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் பரமேறுதலுக்கு முன் அவரைத் தரிசித்தவர்கள் யார்?***

    1. *மகதலேனா மரியாள் (மாற்கு* 16 : 9)
    2. *மற்ற ஸ்திரீகள் (மத்தேயு* 28 : 5-10)
    3. பேதுரு (லூக்கா 24 : 34)
    4. *எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷர்கள் (மாற்கு* 16 : 12, 13)
    5. *பத்து சீஷர்கள்* (யோவான் 20 : 19 - 24)
    6. *பதினொரு சீஷர்கள்* (யோவான் 20 : 26 - 29)
    7. *ஏழு சீஷர்கள்* (யோவான் 21 : 2 - 14)
    8. *கலிலேயாவிலே ஒரு மலையில் பதினொரு சீஷர்கள்* (500 பேருக்கு *அதிகமான கூட்டத்துடன் இருந்திருக்கலாம்). (மத்தேயு* 28 : 16-20)
    9. *யாக்கோபு* (1 *கொரி*. 15 : 7)
    10. *பதினோரு சீஷர்கள் (மாற்கு* 16 : 14)

2. ***இயேசு பத்து சீஷர்களுக்கு எப்பொழுது, எங்கு தரிசனமானார்? அவர்களிடம் என்ன சொன்னார்?***

    *வாரத்தின் முதல்நாளில் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நின்று, உங்களுக்கு சமாதானம் என்றார்.*

    *இயேசு அவர்களிடம், பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்* (யோவான் 20: 19 -23) *என்றார்.*

**IX** ***போதனை*** (2 Marks)

*கர்த்தராகிய இயேசு தம்மைப் பிரியப்படுத்தினவர்களுக்கும், பின்பற்றினவர்களுக்கும் தரிசனமானார். நாம் அவரைப் பிரியப்படுத்தி, அவரைப் பின்பற்றினால், அவர் மறுபடியும் வரும்போது அவரை முகமுகமாய்த் தரிசிப்போம்.*

**********

## *பாடம் 17*

# கர்த்தராகிய இயேசு பரமேறுதல்

(*மத்*. 28 : 18-20; *மாற்கு* 16 : 15 - 19; *லூக்கா* 24 : 49 - 51; *அப்*. 1 : 3 - 11)

**I** ***மனப்பாட வசனம்*** (2 Marks)

"*கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த*

*இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"*

**(அப்போஸ்தலர் 1: 11).**

*"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்"*

**(எபிரெயர் 9 : 28).**

**II** <u>*பொருத்துக*</u> (1 Mark)

1. *விசுவாசிக்கிறவர்கள் – பிசாசுகளைத் துரத்துவார்கள்* (*மாற்*. 16 : 17)
2. *விசுவாசிக்கிறவர்கள் – நவமான பாஷைகளைப் பேசுவார்கள்* (*மாற்*. 16 : 17)
3. *இயேசு – பரலோகத்திற்குஎடுத்துக்கொள்ளப்பட்டவர்* (*மாற்்*.16 : 19)
4. *இயேசு – தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறவர்* (*மாற்*. 16 : 19)
5. *பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் – பிதாவின் வாக்குத்தத்தம்* (*அப்*. 1 : 4)
6. *பரிசுத்தஆவி – உன்னத பெலன்* (*லூக்* 24 : 49 ; *அப்* . 1 : 5, 8)

**III** <u>*கோடிட்ட இடங்களை நிரப்புக*</u> (1 Mark)

1. *வானத்திலும், பூமியிலும் ___________ இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*
2. *பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலே ___________ கொடுக்கும்படி இயேசு சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.*
3. *இயேசு சீஷர்களிடம், நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் சகல ஜாதிகளும் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ___________ பண்ணுங்கள் என்றார்.*
4. *இயேசு சர்வ சிருஷ்டிக்கும் ___________ பிரசங்கிக்கும்படி கூறினார்.*
5. *விசுவாசமுள்ளவனாகி ___________ பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு கூறினார்.*
6. *இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ___________ உட்கார்ந்தார்.*

<u>***விடைகள்***</u>

1. *சகல அதிகாரமும்* ( *மத்*. 28 : 18)
2. *ஞானஸ்நானம்* (*மத்*. 28 : 19)
3. *உபதேசம்* (*மத்*. 28 : 20)
4. *சுவிசேஷத்தை* (*மாற்*. 16 : 15)
5. *ஞானஸ்நானம்* (*மாற்*. 16 : 16)
6. *தேவனுடைய வலதுபாரிசத்தில்* (*மாற்*. 16 : 19)

**IV** *<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது</u>* (1 Mark)

1. ***வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?***
   a) *கர்த்தராகிய இயேசுவுக்கு* b) *பிசாசுக்கு*
   c) *தேவதூதர்களுக்கு* d) *மனுஷர்களுக்கு*

2. ***இயேசு யாருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி சீஷர்களிடம் கூறினார்?***
   a)*யூதர்களுக்கு* b)*புறஜாதிகளுக்கு* c)*சர்வசிருஷ்டிக்கும்* d) *ரோமர்களுக்கு.*

3. ***இயேசு சீஷர்களிடம், உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எந்த நகரத்தில் இருக்கும்படி கூறினார்?***
   a) *எரிகோ* b) *எருசலேம்* c) *எபேசு* d) *ஆயி*

| *<u>விடைகள்</u>* | | |
|---|---|---|
| 1. a. (*மத்.* 28 : 18) | 2. c. (*மாற்.* 16 : 15) | 3. b. (*லூக்.* 24 : 49) |

**V** *<u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>* (3 Marks)

1. ***“இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத். 28 : 20).***

   *<u>யார்</u>* : *இயேசு*

   *<u>யாரிடம்</u>* : *பதினொரு சீஷர்களிடம்*

   *<u>எப்போது</u>* : *இயேசு உயிர்த்தெழுந்த பின்பு பதினொரு சீஷர்களும் கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போய் அவரைக்கண்டு பணிந்துகொண்டார்கள் சிலரோ சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.*

2. ***“நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற் 16 : 15)***

   *<u>யார்</u>* : *கர்த்தராகிய இயேசு*

   *<u>யாரிடம்</u>* : *சீஷர்களிடம்*

   *<u>எப்போது</u>* : *உயிர்த்தெழுந்த இயேசு பதினொரு சீஷர்களும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்குத் தரிசனமாகி, உயிர்த்தெழுந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும், இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு அவர் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.*

3. ***“என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்” (லூக். 24 : 49)***

*யார்* : *கர்த்தராகிய இயேசு*

*யாரிடம்* : *சீஷர்களிடம்*

*எப்போது* : *உயிர்த்தெழுந்த இயேசு சீஷர்கள் கூடியிருந்த இடத்திற்குச் சென்று, வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களின் மனதைத் திறந்து அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.*

4. ***"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப். 1 : 7)***

   *யார்* : *கர்த்தராகிய இயேசு*

   *யாரிடம்* : *கூடி வந்திருந்த சீஷர்களிடம்*

   *எப்போது* : *கர்த்தராகிய இயேசு எடுத்துக்கொள்ளப்படுதவற்கு முன்பு, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, 'ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்' என்று கேட்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம் இவ்வாறு கூறினார்.*

5. ***"கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்" (அப். 1 : 11)***

   *யார்* : *வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர்*

   *யாரிடம்* : *இயேசு எடுத்துக்கொள்ளப்பட்டதைப் பார்த்துக் கொண்டு நின்றவர்களிடம்*

   *எப்போது* : *கர்த்தராகிய இயேசு தம்முடைய கைகளை உயர்த்தி சீஷர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் போகிறபோது, கூடியிருந்தவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று இவ்வாறு கூறினார்கள்.*

## VI ஓரிரு வாக்கியங்களில் விடையளி (2 Marks)

1. ***கர்த்தராகிய இயேசு யாருடைய நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்?***

   *பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார் (மத்.* 28 : 19).

2. ***கர்த்தராகிய இயேசு பரமேறுமுன் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?***

   *"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் " என்ற வாக்குத்தத்தத்தை இயேசு சீஷர்களுக்குக் கொடுத்தார் (மத்.* 28 : 20).

3. ***கர்த்தராகிய இயேசு எங்கே போய், யாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்?***

   *கர்த்தராகிய இயேசு 'உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி' சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மாற்.* 16 : 15).

4. ***யார் இரட்சிக்கப்படுவான்? யார் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்?***
   (i) *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.*
   (ii) *விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்.* 16 : 16) .

5. ***கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை எங்கு அழைத்துக்கொண்டுபோய் ஆசீர்வதித்தார்? அவர்களை ஆசீர்வதிக்கும்போது நடந்த சம்பவம் யாது?***
   (i) *கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களை பெத்தானியா வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்* (லூக். 24 : 50).
   (ii) *அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார் (மாற்.* 16 : 19)

6. ***உயிர்த்தெழுந்த இயேசு தம்முடைய சீஷர்களை எதுவரைக்கும் எருசலேம் நகரத்தில் காத்திருக்கும்படி கட்டளையிட்டார்?***
   *கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடம், உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்று கட்டளையிட்டார் (லூக்.* 24 : 49 ; *அப்.* 1 : 5).

7. ***இயேசு பாடுபட்டபின்பு எத்தனை நாட்கள் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார்? எவ்வாறு தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்?***
   (i) *இயேசு பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமானார்.*
   (ii) *அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்.* 1 : 3).

8. ***இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பேசி முடித்தபின்பு எவ்வாறு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்?***
   *இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பேசி முடித்தபின்பு, அவர்கள் (சீஷர்கள்) பார்த்துக்கொண்டிருக்கையில் உயரப் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது (அப்* 1 : 9).

9. ***இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து கலிலேய மனுஷரிடம் கூறியது யார்? அவர்கள் கூறியது என்ன?***
   (i) *வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து கூறினர் (அப்.* 1 : 10).

   (ii) *உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்.* 1 : 11).

**VII** *சுருக்கமான விடையளி* (4 Marks)

1. ***கர்த்தராகிய இயேசு உயர்த்தெழுந்த பின்பு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை என்ன?***

   *கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடம், "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" என்று கட்டளையிட்டார் (மத்.* 28: 19, 20).

2. ***கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியைக் குறித்து சீஷர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? கட்டளை என்ன?***
   - (i) *கர்த்தராகிய இயேசு சீஷர்களை நோக்கி, என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன் (லூக்*.24 :49).
   - (ii) *யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*
   - (iii) *ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்(அப்*.1:4, 5).

3. ***இயேசு தம்முடைய சீஷர்கள் எப்பொழுது பெலனடைவார்கள் என்று சொன்னார்? அவர்கள் பெலனடையும்போது யாருக்கு எங்கெல்லாம் சாட்சிகளாயிருப்பார்கள்?***
   - i) *பரிசுத்த ஆவி அவர்களிடத்தில் வரும்போது அவர்கள் பெலனடைவார்கள்.*
   - ii) *கர்த்தராகிய இயேசுவுக்குச் சாட்சிகளாயிருப்பார்கள்*
   - iii) *எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் அவர்கள் சாட்சிகளாயிருப்பார்கள் (அப்*.1: 8).

**VIII** *விரிவான விடையளி* (6 Marks)

1. ***விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள யாவை? வசனஆதாரத்துடன் எழுது.***

<u>*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்:*</u>

*கர்த்தராகிய இயேசுவின்*

- (i) *நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்*
- (ii) *நவமான பாஷைகளைப் பேசுவார்கள்*
- (iii) *சர்ப்பங்களை எடுப்பார்கள்*
- (iv) *சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது*
- (v) *வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற்*. 16 : 17, 18).

**IX** *போதனை* (2 Marks)

*கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். பூரணமாக்கப்பட்ட ஒரு கூட்டம் பரிசுத்தவான்களைச் சேர்த்துக்கொள்ளும்படி அவர் மறுபடியும் வருவார். எனவே அவரைச் சந்திக்கும்படி நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.*

*************

## பாடம் -18

# புதிய ஏற்பாட்டுப் பஸ்காவாகிய கிறிஸ்து

(யோவான் 1: 29; 6 : 55; 1 கொரி. 5 : 7/ 8; 1 கொரி. 11 : 23 - 26)

**I** *மனப்பாட வசனம்* **:** (2 Marks)

*"அதற்கு இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியமாலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்"* **(யோவான் 6 : 53, 54).**

**II** *பொருத்துக* (1 Mark)

1. இயேசு - உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவா. 1 : 29)
2. இயேசு - புதிய ஏற்பாட்டுப் பஸ்கா (1 கொரி. 5 : 7)
3. புளித்தமாவு - துர்க்குணம், பொல்லாப்பு (1 கொரி. 5 : 8)
4. இயேசுவின் மாம்சம் - மெய்யான போஜனம் (யோவா. 6 : 55)
5. இயேசுவின் இரத்தம் - மெய்யான பானம் (யோவா. 6 : 55)

**III** *கோடிட்ட இடங்களை நிரப்புக* (1 Mark)

1. ___________இயேசுவை உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்.
2. நம்முடைய பஸ்காவாகிய___________நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார்.
3. நாம் ___________என்னும் புளித்தமாவோடு பஸ்காவை ஆசரிக்கக் கூடாது.
4. நாம் ___________ , ___________ என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வேண்டும்.

5. எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலருக்குப் ____________அடிக்கப்பட்டதால் விடுதலை கிடைத்தது.
6. இஸ்ரவேலரின், எகிப்தின் அடிமைத்தனம், ஒருவன் ____________அடிமைத்தனத்திலிருப்பதைக் காட்டுகிறது.

**விடைகள்**

1. யோவான் ஸ்நானன் (யோவா.1 : 29)
2. கிறிஸ்து (1 கொரி 5 : 7)
3. துர்க்குணம், பொல்லாப்பு (1 கொரி 5 : 8)
4. துப்பரவு,உண்மை (1 கொரி. 5 : 8)
5. பஸ்கா ஆட்டுக்குட்டி (பாடத்திட்டம்)
6. பாவத்தின் (பாடத்திட்டம்).

**IV சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது** (1 Mark)

1. **புளிப்பில்லா அப்பத்தோடே எந்தப் பண்டிகை ஆசரிக்கப்பட வேண்டும்?**
   a) பஸ்கா பண்டிகை b) ஓய்வுநாள் பண்டிகை
   c) கூடாரப் பண்டிகை d) எக்காளப் பண்டிகை

2. **பவுல் தன்னுடைய ஊழியத்தை யாரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்?**
   a) பேதுருவிடமிருந்து b) கர்த்தரிடத்திலிருந்து
   c) மோசேயிடமிருந்து d) பிரதான ஆசாரியனிடத்திலிருந்து

**விடைகள்**

1. a. (1 கொரி 5 : 7, 8) 2. b. (1 கொரி. 11 : 23)

**V ஓரிரு வாக்கியங்களில் விடையளி** (2 Marks)

1. **எகிப்தின் அடிமைத்தனம் எதைக் காட்டுகிறது? எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலருக்கு எதினால் விடுதலை கிடைத்தது?**
   (i) பாவத்தின் அடிமைத்தனத்திலிருப்பதைக் காட்டுகிறது (பாடத்திட்டம்)
   (ii) பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதால் விடுதலை கிடைத்தது (பாடத்திட்டம்).

2. **யோவான்ஸ்நானன் இயேசுவைக் குறித்து சாட்சியாக அறிவித்தது என்ன?**
   யோவான்ஸ்நானன் இயேசுவை, 'உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்று இயேசுவைக் குறித்து அறிவித்தான் (யோவா. 1 : 29).

3. ***புதிய ஏற்பாட்டுப் பஸ்கா யார்? ஒரு மனிதன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் முதலாவது என்ன செய்ய வேண்டும்?***

(i) *புதிய ஏற்பாட்டுப் பஸ்கா கர்த்தராகிய இயேசுகிறிஸ்து* (1 *கொரி.* 5:7).

(ii) *பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முதலாவது நாம்இயேசுவை ருசிபார்க்க வேண்டும்* (*பாடத்திட்டம்*).

4. ***பழைய புளித்தமாஎன்பது எதைக் குறிக்கிறது?***
*பழைய புளித்தமா என்பது துர்க்குணம், பொல்லாப்பு என்பவற்றைக் குறிக்கிறது* (1*கொரி.* 5 : 7, 8).

5. ***நம்முடைய ஜீவியத்தில் காணப்படும் எந்தப் புளித்தமாவை நாம் கழித்துப் போட வேண்டும்? எவ்வாறு கழித்துப் போடவேண்டும்?***
*நம்முடைய ஜீவியத்தில் காணப்படும் துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவை இயேசுவிடம் அறிக்கையிடுவதின் மூலம் நாம் கழித்துப்போட வேண்டும்* (*பாடத்திட்டம்,* 1 *கொரி.* 5 : 8).

6. ***துர்க்குணம், பொல்லாப்பு என்னும் பழைய புளித்தமாவை நாம் ஏன் கழித்துப் போட வேண்டும்?***
*நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறபடியினால் நாம் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு துர்குணம், பொல்லாப்பாகிய பழைய புளித்தமாவைக் கழித்துப்போடவேண்டும்* (1 *கொரி.* 5 : 7 )

7. ***நாம் புதிய ஏற்பாட்டு பஸ்காவாகிய கிறிஸ்துவை எப்படிக் கிட்டிச்சேர வேண்டும்?***
*துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவை இயேசுவிடம் அறிக்கையிடுவதன் மூலம் நம்முடைய ஜீவியத்திலிருந்து அவைகளைக் களைந்து போட்டு, துப்பரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத ஜீவியத்தோடு இயேசுவைக் கிட்டிச் சேரவேண்டும்* (1 *கொரி* 5:8 ) (*பாடத்திட்டம்*).

8. ***புதிய ஏற்பாட்டு சபையாயிருக்கிற நாம் பஸ்கா பண்டிகையை எவ்வாறு ஆசரிக்கவேண்டும்?***
*புதிய ஏற்பாட்டு சபையாயிருக்கிற நாம் துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வேண்டும்* (1 *கொரி.* 5 : 8).

9. ***கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதின் மூலம் நாம் எதைத் தெரிவிக்கிறோம்?***
*கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதின் மூலம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம்* (1 *கொரி.* 11 : 26 ) .

10. ***கர்த்தருடைய பந்தி, சபையில் ஆசரிக்கப்படுவதின் மூலம் வெளிப்படுத்தப்படும் சத்தியம் என்ன ?***
"*இயேசுவின் மாம்சம் மெய்யான போஜனமும், அவருடைய இரத்தம் மெய்யான பானமுமாயிருக்கிறது*" *என்ற சத்தியம் கர்த்தருடைய பந்தி, சபையில் ஆசரிக்கப்படுவதின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது*
( *யோவா.* 6 : 55 ; *பாடத்திட்டம்*).

**VI** ***விரிவான விடையளி*** (6 Marks)

1. ***கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே தன்னை நினைவு கூரும்படி அப்பத்தையும் பாத்திரத்தையும் எடுத்து என்ன செய்தார்?***

   *கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்* (1 *கொரி*. 11 : 23 - 25).

2. ***கீழ்க்கண்டவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களை எழுது.***

| | | |
|---|---|---|
| 1. *எகிப்தின் அடிமைத்தனம்* | - *பாவத்தின் அடிமைத்தனம்* | (*பாடத்திட்டம்*) |
| 2. *புளித்தமா* | - *துர்க்குணம், பொல்லாப்பு* | (1 *கொரி* 5 : 8) |
| 3. *புளிப்பில்லாத அப்பம்* | - *துப்பரவு, உண்மை* | (1 *கொரி* 5 : 8) |
| 4. *புதிய ஏற்பாட்டு பஸ்கா* | - *கர்த்தராகிய இயேசுகிறிஸ்து* | (1 *கொரி* 5 : 7) |
| 5. *மெய்யான போஜனம்* | - *இயேசுவின் மாம்சம்* | (*யோவா*. 6 : 55) |
| 6. *மெய்யான பானம்* | - *இயேசுவின் இரத்தம்* | (*யோவா*. 6 : 55) |

**VII** ***போதனை*** (2 Marks)

*கர்த்தராகிய இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்து, கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்று அவருடைய அன்பினால் நிறைந்து, அவருடைய வழிகளில் நடப்போமாயின், நாமுங்கூட கடைசி நாளில் நித்திய ஜீவனுக்கேதுவாக உயிர்த்தெழுவோம்.*

*************

## *பாடம் – 19*

# *அனனியாவும் சப்பீராளும்*

(*அப்*. 2 : 44, 45 ; 4 : 32 - 35; 5 : 1 - 11)

**I** ***மனப்பாட வசனம்*** **:** (2 Marks)

"*தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் ; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.*

*எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான் ; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்* " ***(நீதிமொழிகள்* 28 : 13, 14).**

**II *பொருத்துக*** (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. விசுவாசிகள் | - | ஒரே இருதயம் | (அப். 4 : 32) |
| 2. விசுவாசிகள் | - | ஒரே மனம் | (அப். 4 : 32) |
| 3. சப்பீராள் | - | அனனியாவின் மனைவி | (அப். 5 : 1) |
| 4. சாத்தான் | - | பொய்சொல்லும்படி இருதயத்தை நிரப்புகிறவன் | (அப். 5 : 3.) |
| 5. அனனியா | - | பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னவன் | (அப். 5 : 3) |
| 6. அனனியா | - | தேவனிடத்தில் பொய்சொன்னவன் | (அப். 5 : 4) |

**III *கோடிட்ட இடங்களை நிரப்புக*** (1 Mark)

1. முதலாம் நூற்றாண்டில் ___________ ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் அனுபவித்தார்கள்.
2. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே ___________ , ஒரே ___________ உள்ளவர்களாயிருந்தார்கள்.
3. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து ___________ மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள்.
4. அப்போஸ்தலர்கள் எல்லார்மேலும் ___________ உண்டாயிருந்தது.
5. முதலாம் நூற்றாண்டிலிருந்த விசுவாசிகள் வீடுகளையும், நிலங்களையும் விற்று அவைகளின் கிரயத்தை அப்போஸ்தலருடைய ___________ வைத்தார்கள்.
6. அனனியாவும், சப்பீராளும் தங்கள் ___________ விற்றார்கள்
7. அனனியாவும், சப்பீராளும் மரித்துப்போனதை கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த ___________ உண்டாயிற்று.

விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | விசுவாசிகள் | (அப். 2 : 44) |
| 2. | இருதயமும், மனதும் | (அப். 4 : 33) |
| 3. | அப்போஸ்தலர்கள் | (அப். 4 : 33) |
| 4. | பூரண கிருபை | (அப். 4 : 35) |
| 5. | பாதத்திலே | (அப். 4 : 35) |
| 6. | காணியாட்சியை | (அப். 5 : 1) |
| 7. | பயம் | (அப். 5 : 11) |

**IV *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது*** (1 Mark)

1. **கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பலமாய்ச் சாட்சி கொடுத்தவர்கள் யார்?**

a) போர்ச்சேவகர்கள் b) அப்போஸ்தலர்கள்
c) ஆசாரியர்கள் d) வேதபாரகர்கள்

2. ***காணியாட்சி விற்கப்பட்டதின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தது யார்?***
   a)அனனியா b) யூதாஸ் c) ஆகாப் d) ஆகான்

3. ***பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் யாருடைய இருதயத்தை நிரப்பினான்?***
   a) யூதாஸ் b) தாவீது c) அனனியா d) யாக்கோபு

4. ***நீ தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்று அனனியாவைக் கடிந்துகொண்டது யார்?***
   a) பேதுரு b) பவுல் c) பிலிப்பு d) யாக்கோபு

5. ***கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு ஒருமனப்பட்டவர்கள் யார்?***
   a) ஏசாவும் பஸ்மாத்தும் b) அனனியாவும் சப்பீராளும்
   c) ஆகாபும் யேசபேலும் d) யெரொபெயாமும் அவன் மனைவியும்

**விடைகள்**

1. b. (அப். 4 : 33) 4. a. (அப். 5 : 4)
2. a. (அப். 5 : 2) 5. b. (அப். 5 : 9)
3. c. (அப். 5 : 3)

**V *யார் யாரிடம் எப்போது கூறியது ?*** ( 3 Marks)

1. **a.** ***" பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?"*** **(அப். 5 : 3)**
   **b.** ***"அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ?"*** **(அப். 5 : 4)**
   **c.** ***"அதை விற்றபின்பும் அதின்கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ"*** **(அப். 5 : 4)**
   **d.** ***"நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன?" "நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் "*** **(அப். 5 : 4)**
   *யார்* : *பேதுரு*
   *யாரிடம்* : *அனனியாவிடம்*
   *எப்போது* : *அனனியா தன் காணியாட்சியை விற்று அதன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். அப்போது பேதுரு அனனியாவைப் பார்த்து இவ்வாறு கேட்டான்.*

2. ***"நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல்"*** **(அப். 5 : 8)**
   *யார்* : *பேதுரு*
   *யாரிடம்* : *சப்பீராளிடம்*

*எப்போது : அனனியா மரித்து ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். அப்போது பேதுரு சப்பீராளிடம் இவ்வாறு கேட்டான்.*

3. **a."*கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?*"**

**b."*இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான்*" (*அப்.* 5 : 9).**

*யார் : பேதுரு*

*யாரிடம் : சப்பீராளிடம்*

*எப்போது : அனனியா மரித்து ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். அப்போது பேதுரு சப்பீராளிடம் நீங்கள் நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள் ஆம் இவ்வளவுக்குத்தான் என்றாள். அப்போது பேதுரு இவ்வாறு கூறினான்.*

**VI** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** (2 Marks)

1. ***முதலாம் நூற்றாண்டில், விசுவாசிகள் எதில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்?***
   *அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்.* 2 : 42).

2. ***முதலாம் நூற்றாண்டில் யார் ஒருமித்து இருந்தார்கள்? அவர்கள் சகலத்தையும் எவ்வாறு அநுபவித்தார்கள்?***
   *முதலாம் நூற்றாண்டில் விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள் (அப்.* 2 : 44).

3. ***முதலாம் நூற்றாண்டில் பூரண கிருபை யார்மேல் உண்டாயிருந்தது ? அதனால் ஊழியத்தில் உண்டான ஆசீர்வாதம் என்ன?***
   *அப்போஸ்தலர்களெல்லார் மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது. ஆகையால், அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள் (அப்.* 4 : 33).

4. ***முதலாம் நூற்றாண்டில் நிலங்களையும், வீடுகளையும் உடைய விசுவாசிகள் என்ன செய்தார்கள்? அது எப்படிப் பகிர்ந்துக் கொடுக்கப்பட்டது?***
   *நிலங்களையும், வீடுகளையும் உடைய விசுவாசிகள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அது விசுவாசிகளின் தேவைகளுக்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது (அப்.* 4 : 34, 35).

5. ***அனனியாவும் சப்பீராளும் செய்த வஞ்சனையான செயல் என்ன?***
   *அனனியாவும் சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்று, அதின் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து தங்களுக்கு வைத்துக்கொண்டு, மற்ற பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். இதுவே அவர்கள் செய்த வஞ்சனையான செயல் (அப்.* 5 : 1, 2).

6. ***நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்தது யார்? பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி அவனுடைய இருதயத்தை நிரப்பினது யார்?***
   i) *அனனியா நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தான்*
   ii) *பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி அவனுடைய இருதயத்தை சாத்தான் நிரப்பினான் (அப்.* 5 : 3).

7. ***கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்ட அனனியாவைக் கடிந்துகொண்டது யார்? அப்பொழுது என்ன சம்பவித்தது?***
   *பேதுரு அனனியாவைக் கடிந்துகொண்டான். அந்த வார்த்தைகளைக் கேட்டபோது அவன் விழுந்து ஜீவனை விட்டான் (அப்.* 5 : 5).

8. ***சப்பீராள் எப்பொழுது பேதுருவைக் காண வந்தாள்? பேதுரு அவளிடம் என்ன கேட்டார்?***
   i) *அனனியா இறந்து ஏறக்குறைய மூன்றுமணி நேரத்திற்குப் பின்பு, அவனுடைய மனைவியாகிய சப்பீராள் நடந்ததை அறியாமல் பேதுருவைக் காண வந்தாள்.*
   ii) *பேதுரு அவளிடம், "நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் எனக்குச் சொல்"என்றார் (அப்.* 5 : 7, 8).

9. ***அனனியா சப்பீராளின் மரணத்தினால் யாருக்கு மிகுந்த பயமுண்டாயிற்று?***
   *சபையாரெல்லாருக்கும், அவர்களுக்குச் சம்பவித்ததைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று (அப்.* 5 : 11).

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u>*** (4 Marks)

1. ***நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்த அனனியாவைப் பேதுரு எவ்வாறு கடிந்து கொண்டான்?***
   *பேதுரு அனனியாவை நோக்கி, அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான் (அப்.* 5 : 3, 4).

2. ***பேதுரு சப்பீராளை எவ்வாறு கடிந்துகொண்டான்? அப்பொழுது என்ன சம்பவித்தது?***
   *பேதுரு சப்பீராளை நோக்கி, "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?" இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள்' என்று கடிந்துகொண்டான்*

*(அப். 5 : 9); உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள் (அப். 5 : 10).*

**VIII** ***விரிவான விடையளி*** (6 Marks)

**1. *முதலாம் நூற்றாண்டில் விசுவாசிகள் எவ்வாறு ஜீவித்தார்கள்?***

(i) *விசுவாசிகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுததிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2 : 42).*

(ii) *விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் (அப். 4 : 32).*

(iii) *ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. (அப். 4 : 32).*

(iv) *அவர்கள் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள் (அப். 2 : 44).*

(v) *நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் , கிரயத்தைக் கொண்டுவந்து , அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள் (அப். 4 : 34, 35).*

(vi) *அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அப். 4 : 34, 35).*

**IX** ***போதனை*** (2 Marks)

*நாம் தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் முன்பாக எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாயும், வஞ்சனையற்றவர்களாயும் இருக்க வேண்டும். அப்படியில்லாதிருந்தால் நமக்குப் பெரிய தீங்குகள் நேரிடும்.*

***********

*பாடம் 20*

# ஸ்தேவான்

(*அப்போஸ்தலர் அதி*. 6, 7)

**I** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

*"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது.*

*என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் ;*

*சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் ; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் ; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப் படுத்தினார்களே"* **(*மத்தேயு* 5 :10-12).**

**II** ***பொருத்துக*** (1 Mark)

1. *ஸ்தேவான்* – *நற்சாட்சி பெற்றவன்* (*அப்*. 6 : 3)
2. *ஸ்தேவான்* – *விசுவாசத்தினால் நிறைந்தவன்* (*அப்*. 6 : 5)
3. *ஸ்தேவான்* – *பரிசுத்த ஆவியினால் நிறைந்தவன்* (*அப்*. 6 : 5)
4. *ஸ்தேவான்* – *வல்லமையினால் நிறைந்தவன்* (*அப்*. 6 : 8)
5. *ஸ்தேவான்* – *இரத்தசாட்சி* (*அப்*. 7 : 59)

**III** ***கோடிட்ட இடங்களை நிரப்புக*** (1 Mark)

1. ________________ *விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.*
2. *ஒருவராலும் ஸ்தேவான் பேசின* ________________ *யும்* ________________ *யும் எதிர்த்து நிற்க கூடாமற் போயிற்று.*
3. *ஸ்தேவான்* ________________ *செய்ததாக பொய்யாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்.*
4. *ஸ்தேவான்* ________________ *க்கும்* ________________ *க்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான் என்று பொய்ச் சாட்சிக்காரர்கள் குற்றம் சாட்டினார்கள்.*
5. *ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் ஸ்தேவானின் முகம்* ________________ *முகம் போலிருக்கக் கண்டார்கள்.*
6. ________________*வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் கண்டான்.*
7. *கர்த்தராகிய இயேசுவே என்* ________________ *ஏற்றுக்கொள்ளும் என்று* ________________*தொழுது கொள்ளுகையில் அவனைக் கல்லெறிந்தார்கள்.*

**விடைகள்**

| | |
|---|---|
| 1. ஸ்தேவான் | (அப். 6 : 8) |
| 2. ஞானத்தையும் ஆவியையும் | (அப். 6 : 10) |
| 3. தேவ தூஷணம் | (அப். 6 : 11) |
| 4. பரிசுத்த ஸ்தலத்துக்கும், வேதப்பிரமாணத்துக்கும் | (அப். 6 : 13) |
| 5. தேவ தூதன் | (அப். 6 : 15) |
| 6. ஸ்தேவான் | (அப். 7 : 56) |
| 7. ஆவியை, ஸ்தேவான் | (அப். 7 : 59) |

**IV** <u>*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*</u> (1 Mark)

1. ***எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தவர்கள் யார்?***
   a) *லிபர்த்தினர்* b) *கிரேக்கரானவர்கள்*
   c) *சிரேனே பட்டணத்தார்* d) *ஆசியா தேசத்தார்.*

2. ***ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தவர்கள் யார்?***
   a) *அப்போஸ்தலர்கள்* b)*ஆசாரியர்கள்* c)*மூப்பர்கள்* d) வேதபாரகர்கள்

3. ***முதலாம் நூற்றாண்டில் பந்தி விசாரிப்புக்காக எத்தனை பேர் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் ?***
   a) *மூன்று பேர்* b) *ஏழு பேர்* c) *பன்னிரண்டு பேர்* d) *எழுபது பேர்*

4. ***சீஷருடைய தொகை எங்கு மிகவும் பெருகிற்று?***
   a) *யூதேயாவில்* b) *தமஸ்குவில்* c) *எருசலேமில்* d) *ரோமாபுரியில்*

5. ***ஸ்தேவானை யாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோனார்கள்?***
   a) *ஆலோசனைச் சங்கத்திற்கு*
   b) *சபைக்கு*
   c) *முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபைக்கு*
   d) *சிறைச் சாலை தலைவனுக்கு*

6. ***ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் யாருடைய முகம் தேவ தூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்?***
   a) *யோவானின்* b) *சவுலின்* c) *பேதுருவின்* d) *ஸ்தேவானின்*

7. ***ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி யாருடைய பாதத்தினருகே வைத்தார்கள்?***
   a) *காய்பாவின்* b) *சவுலின்* c) *ஏரோதின்* d) *பிலாத்துவின்*

**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. b. | (அப். 6 : 1) | 5. a. | (அப். 6 : 12) |
| 2. a | (அப். 6 : 4) | 6. d, | (அப். 6 : 15) |
| 3. b. | (அப். 6 : 3, 5) | 7. b. | (அப். 7 : 58) |
| 4. c | (அப். 6 : 7) | | |

**V** *யார் யாரிடம் கூறியது* (3 Marks)

1. **a) "நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல".**
   **b) "அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்".**
   **c) "நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்"(அப். 6 : 2, 3, 4)**

   *யார் : பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்*

   *யாரிடம் : சீஷர்களிடம்*

   *எப்போது : முதலாம் நூற்றாண்டில் சீஷர்கள் பெருகினபோது , கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து இவ்வாறு கூறினார்கள்.*

2. **"இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்"(அப். 6 : 13)**

   *யார் : பொய்ச்சாட்சிக்காரர்*

   *யாரிடம் : ஆலோசனைச் சங்கத்தாரிடம்*

   *எப்போது : ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் . அப்பொழுது சிலர் எழும்பி அவனுடனே தர்க்கம்பண்ணினார்கள். அவர்களால் அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்கக் கூடாமற் போயிற்று. உடனே அவர்கள் ஸ்தேவான், மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசினான் என்று சொல்லும்படியாக பொய்ச்சாட்சிக்காரர்களை ஏற்படுத்தினார்கள். மேலும் ஸ்தேவான் மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பொய்ச்சாட்சிக்காரர்ஆலோசனைச் சங்கத்தில் இவ்வாறு சொன்னார்கள்.*

3. **"காரியம் இப்படியாயிருக்கிறது" (அப். 7 : 1)**

   *யார் : பிரதான ஆசாரியன்*

   *யாரிடம் : ஸ்தேவானிடம்*

*எப்போது : ஸ்தேவான் பேசின ஞானத்தை எதிர்க்க முடியாமற்போனபோது , சிலர் அவனுக்கு விரோதமாக எழும்பி, அவனைப் பிடித்து ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய் பொய்ச்சாட்சிகளை நிறுத்தினார்கள். அவர்கள் இந்த மனுஷன் இந்தப்பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்திற்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான் என்று பொய்யாகக் குற்றஞ் சாட்டினார்கள். ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் ஸ்தேவானை நோக்கி இவ்வாறு கேட்டான்.*

4. **a) “*உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்*”**

   **b) “*நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள்*”**

   **c) “*தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள்*” (அப். 7 : 51, 52, 53)**

   *யார் : ஸ்தேவான்*

   *யாரிடம் : ஆலோசனைச் சங்கத்தாரிடம்*

   *எப்போது : ஸ்தேவனானுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சிகளை நிறுத்தினார்கள். அவர்கள் இந்த மனுஷன் இந்த பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான். எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவான் என்று இவன் சொல்லக்கேட்டோம் என்றார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் ஸ்தேவானை நோக்கி காரியம் இப்படியாயிருக்கிறது என்று கேட்டான். அதற்கு ஸ்தேவான் ஆபிரகாம் முதல் இயேசுகிறிஸ்து வரையிலுள்ள சரித்திரத்தை வரிசையாக விவரித்து முடிவில் அவர்களைக் கடிந்து கொள்ளும்போது இவ்வாறு கூறினான்.*

5. **“*அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்*” (அப். 7 : 56)**

   *யார் : ஸ்தேவான்*

   *யாரிடம் : ஆலோசனைச் சங்கத்தாரிடம்*

   *எப்போது : ஆலோசனைச் சங்கத்தார் ஸ்தேவானை விசாரிக்கும்போது அவன் ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரை உள்ள சரித்திரத்தை விவரித்து சொல்லி முடிவில் நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் போனீர்கள் என்று கடிந்துகொண்டான். இவைகளை அவர்கள் கேட்டபோது மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்து பல்லைக் கடித்தார்கள். அப்பொழுது ஸ்தேவான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு இவ்வாறு கூறினான்.*

6. **“*கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்* ” (*அப்*. 7 : 59).**
*யார்* : *ஸ்தேவான்*
*யாரிடம்* : *இயேசுவிடம்*
*எப்போது* : *ஸ்தேவான் வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்று ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகச் சொன்னான். உடனே அவர்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்திற்குப் புறம்பே தள்ளி, கல்லெறிந்தார்கள் . அப்பொழுது அவன் இவ்வாறு ஜெபித்தான்.*

7. **“*ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும்*” (*அப்*.7: 60).**
*யார்* : *ஸ்தேவான்*
*யாரிடம்* : *கர்த்தராகிய இயேசுவிடம்*
*எப்போது* : *ஜனங்கள் ஒருமனப்பட்டு ஸ்தேவான் மேல் பாய்ந்து அவனை நகரத்திற்குப் புறம்பே தள்ளினார்கள். அப்பொழுது, கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று அவன் தொழுது கொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற்படியிட்டு இவ்வாறு சொன்னான்.*

**VI** ***<u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி</u>*** (2 Marks)

1. ***முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் எப்படிப்பட்ட ஊழியத்தில் தரித்திருந்தார்கள்?***
*அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணுதலிலும், தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தார்கள் (அப்.* 6 : 4).

2. ***முதலாம் நூற்றாண்டில் பந்திவிசாரணைக்காக எத்தனை பேர் தெரிந்து கொள்ளப்பட்டார்கள்? அவர்களில் முதன்மையாய் இருந்தது யார்?***
*முதலாம் நூற்றாண்டில் பந்திவிசாரணைக்காக ஏழு பேர் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஸ்தேவான் அவர்களில் முதன்மையாய் இருந்தான் (அப்.* 6 : 3, 5, 6).

3. ***முதலாம் நூற்றாண்டில் சீஷர்கள் பெருகின போது, எப்படிப்பட்டவர்கள் பந்திவிசாரிப்புக்காக தெரிந்துக் கொள்ளப்பட்டார்கள்?***
*முதலாம் நூற்றாண்டில், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து , நற்சாட்சி பெற்றிருந்தவர்கள் பந்திவிசாரிப்புக்காக தெரிந்துகொள்ளப்பட்டார்கள் (அப்.* 6 : 3).

4. ***ஸ்தேவான் எப்படிப்பட்டவனாயிருந்தான்?***
*ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும், பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறவனாய் இருந்தான்.*

*அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் ஒருவராலும் எதிர்த்துநிற்கக்கூடாமற் போயிற்று (அப். 6 : 3, 5, 8, 10).*

5. ***முதலாம் நூற்றாண்டில் பந்திவிசாரிப்புக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவாகளை யாருக்கு முன்பாக நிறுத்தினார்கள்? அவர்கள் அவர்களுக்கு என்ன செய்தார்கள்?***
*முதலாம் நூற்றாண்டில் பந்திவிசாரிப்புக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். அவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து அந்த வேலைக்காக அவர்களை நியமித்தார்கள் (அப். 6 : 6).*

6. ***யாருடைய முகம் தேவ தூதன் முகம் போலிருந்தது ? அதைக் கண்டவர்கள் யார்?***
*ஸ்தேவானுடைய முகம் தேவ தூதன் முகம் போலிருந்தது. ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அதைக் கண்டார்கள் (அப். 6 : 15).*

7. ***ஸ்தேவானின் முகம் எப்பொழுது தேவ தூதன் முகம்போல் இருந்தது ?***
*ஜனங்களும், மூப்பர்களும் , வேதபாரகரும் , ஸ்தேவானுக்கு விரோதமாக எழும்பி அவன்மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி அவனைக் குறித்துப் பொய்ச் சாட்சிகளைச் சொன்னார்கள். அப்பொழுது அவன் முகம் தேவ தூதன் முகம் போலிருந்தது (அப். 6 : 12, 15)*

8. ***ஸ்தேவான் யாரைக் கடிந்துகொண்டான்?***
*வனங்கா கழுத்துள்ளவர்களையும், இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாமல் எப்போதும் பரிசுத்தஆவிக்கு எதிர்த்துநின்றவர்களையும் ஸ்தேவான் கடிந்துகொண்டான் (அப்.7:51).*

9. ***வணங்காக்கழுத்துள்ள இஸ்ரவேலர் யாரைத் துன்பப்படுத்தினார்கள்? யாரைக் கொலை செய்தார்கள்?***
*வணங்காக்கழுத்துள்ள இஸ்ரவேலர் தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினார்கள். நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களைக் கொலை செய்தார்கள் (அப்.. 7 : 52).*

10. ***ஜனங்கள் ஸ்தேவானைப் பார்த்துப் பல்லைக் கடித்தபோது அவன் கண்ட தரிசனம் என்ன?***
*ஜனங்கள் ஸ்தேவானைப் பார்த்துப் பல்லைக் கடித்தபோது, அவன் தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான் (அப். 7 : 54, 55).*

11. ***ஸ்தேவான் தான் கண்ட தரிசனத்தைக் கூறியபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?***
*ஜனங்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு ஒருமனப்பட்டு அவன் மேல் பாய்ந்து அவனை நகரத்திற்கு புறம்பே தள்ளி அவனைக் கல்லெறிந்தார்கள் (அப்.. 7 : 57, 58).*

12. ***ஸ்தேவான் என்ன செய்துகொண்டிருக்கும்போது ஜனங்கள் அவன்மேல் கல்லெறிந்தார்கள்?***
*கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுது கொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள் (அப். 7 : 59).*

13. ***ஜனங்கள் கற்களைத் தன்மேல் எறியும்போது ஸ்தேவான் என்ன செய்தான்?***
*ஸ்தேவான் முழகாற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான் (அப்.* 7 : 60).

**VII** ***சுருக்கமான விடையளி*** (4 Marks)

**1.** ***முதலாம் நூற்றாண்டில் பந்திவிசாரணைக்காகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பெயர்களை வரிசையாக எழுதவும்.***
*விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவான் பிலிப்பு, பிரொகோர், நிக்கானோர், தீமோன், பர்மெனா, மற்றும் யூதமார்க்கத்தவனுமான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலா ஆகியோர் பந்தி விசாரணைக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஆவர் (அப்* 6 : 5).

**2.** ***ஸ்தேவான் மேல் சுமத்தப்பட்ட பொய்க்குற்றச்சாட்டு என்ன?***
*பொய்ச்சாட்சிக்காரர்கள் எழும்பி இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான். எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப் போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவான் என்று இவன் சொல்லக் கேட்டோம் என்று ஸ்தேவானுக்கு விரோதமாக எழும்பி பொய்யாகக் குற்றம் சாட்டினார்கள் (அப்.* 6 : 13 , 14).

**3.** ***ஸ்தேவான் கண்ட தரிசனம் என்ன?***
*ஸ்தேவான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்துபார்த்து , தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு, இதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் (அப்* 7 : 55, 56).

**4.** ***ஸ்தேவான் கல்லெறியப்பட்ட போது எவ்வாறு ஜெபித்தான்? அப்பொழுது சம்பவித்தது என்ன ?***
*ஸ்தேவான் , கர்த்தராகிய இயேசுவே , என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று அவன் தொழுதுகொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற்படியிட்டு, ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான் (அப்.* 7 : 59, 60).

**VIII** ***விரிவான விடையளி*** (6 Marks)

1. ***ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்திலிருந்த ஜனங்களை எவ்வாறு கடிந்துகொண்டான்?***
*ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்திலிருந்த ஜனங்களை நோக்கி : வணங்காக்கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும்*

*விருத்தசேதனம் பெறாதவர்களே , உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்.*

*தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள்.*

*தேவதூதரைக் கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற் போனீர்கள் என்று கடிந்து கொண்டான் (அப்.* 7 : 51 - 53).

2. ***ஸ்தேவானின் குணாதிசயங்களைப் பற்றி எழுது***
   1. *ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும், பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்து நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் (அப்.* 6 : 3, 5, 8)
   2. *அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க ஒருவராலும் கூடாமற் போயிற்று (அப்.* 6 : 10).
   3. *பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்ட போது, அவன் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது (அப்.* 6 : 15)
   4. *ஜனங்கள் அவனுக்கு விரோதமாக மூர்க்கமடைந்து அவனைப் பார்த்து பல்லைக் கடித்த சந்தர்ப்பத்தில் அவன் தேவனுடைய தரிசனத்தைக் காண்கிறவனாய் இருந்தான் (அப்.* 7 : 54 - 56)
   5. *தன்னைக் கல்லெறிந்தவர்களையும் மன்னித்து, 'ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் ' என்று அவர்களுக்காகப் பரிந்துபேசி ஜெபிக்கிறவனாய் இருந்தான் (அப்.* 7 : 60).
   6. *ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான் (அப்.* 6 : 8).

**IX** ***<u>போதனை</u>*** (2 Marks)

*நம்மைப் பகைக்கிறவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களையும் நாம் மன்னித்து, அவர்களுக்காக ஜெபம் பண்ண வேண்டும்.*

***************